# ஏசாயா பற்றிய 53 பிரசங்கங்கள்

**SERMONS ON ISAIAH 53**

(Tamil)

டாக்டர் ஆர். எல். ஹைமெர்ஸ் ஜூனியர் அவர்களால்

இணையதளம்:
www.sermonsfortheworld.com

மின்னஞ்சல்:
rlhymersjr@sbcglobal.net

“டாக்டர் ஹைமர்ஸின் ஏசாயா பற்றிய 53 பிரசங்கங்கள் நான் படித்தவற்றிலும், அல்லது பிரசங்கிக்கப்பட்டதைக் கேட்டதிலும் மிகச் சிறந்தவை. விசுவாச துரோகத்தின் இந்த யுகத்தில், அவர்கள் உறுதியாக கிறிஸ்துவிலும் நற்செய்தி யிலும் மையமாக உள்ளனர். இந்தப் பிரசங்கங்கள் கிறிஸ்தவர்களாக இருந்தாலும் சரி இல்லை என்றாலும் சரி, அவற்றைப் படிக்கும் எவருக்கும் பெரும் ஆசீர்வாதமாக இருக்கும். அவற்றைப் படித்து, பிரசங்கித்து, உலகம் முழுவதும் அனுப்ப வேண்டும். அவ்வாறு செய்ய கடவுள் உங்களுக்கு உதவட்டும்.”

– டாக்டர் கிறிஸ்டோபர் எல். காகன்

இந்த பிரசங்க கையெழுத்துப் பிரதிகள் பதிப்புரிமை பெற்றவை அல்ல. டாக்டர் ஹைமர்ஸின் அனுமதியின்றி நீங்கள் அவற்றை அச்சிடலாம், பிரசங்கிக்கலாம், மற்றும் இந்தக் கோப்பை மற்றவர்களுக்கு மின்னஞ்சல் செய்யலாம். அதைச் செய்ய நாங்கள் உங்களை ஊக்குவிக்கிறோம்!

இந்த பிரசங்கங்கள் உங்களை ஆசீர்வதித்தால், டாக்டர் ஹைமர்ஸுக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள் மற்றும் அவரிடம் சொல்லுங்கள், ஆனால் நீங்கள் எந்த நாட்டிலிருந்து எழுதுகிறீர்கள் என்பதை எப்போதும் சேர்க்கவும். டாக்டர் ஹைமர்ஸின் மின்னஞ்சல் உள்ளது rlhymersjr@sbcglobal.net. நீங்கள் டாக்டர் ஹைமர்ஸுக்கு எந்த மொழியிலும் எழுதலாம், ஆனால் உங்களால் முடிந்தால் ஆங்கிலத்தில் எழுதுங்கள். நீங்கள் டாக்டர் ஹைமர்ஸுக்கு தபால் மூலம் எழுத விரும்பினால், அவருடைய முகவரி P.O. Box 15308, Los Angeles, CA 90015, United States.

டாக்டர் ஹைமர்ஸின் அனைத்து பிரசங்கங்களையும் நீங்கள் இணையத்தில் படிக்கலாம் www.sermonsfortheworld.com. “தமிழில் பிரசங்கங்கள்” என்பதைக் கிளிக் செய்யவும்.

# பொருளடக்கம்


| பிரசங்கம் | பக்கம் |
| --- | --- |
| "கர்த்தருடைய தாசரின் பாடு மற்றும் வெற்றி!" – ஏசாயா 52:13-15 | 1 |
| "நிராகரிக்கப்பட்ட அறிக்கை" – ஏசாயா 53:1 | 15 |
| "கிறிஸ்து – திரள் கூட்டத்தாரால் புறக்கணிக்கப்படுதல்" – ஏசாயா 53:1-2 | 26 |
| "கிறிஸ்து – அனைவராலும் குறைவாக மதிப்பிடப்பட்டவர்" – ஏசாயா 53:3 | 37 |
| "கிறிஸ்துவின் பாடுகள் – உண்மையும் பொய்யும்" – ஏசாயா 53:4 | 51 |
| "காயப்பட்டு, நொறுக்கப்பட்டு, அடிக்கப்பட்ட இயேசு" – ஏசாயா 53:5 | 62 |
| "அண்டத்தின் பாவம், குறிப்பிட்ட பாவம் மற்றும் பாவத்திற்கான குணமடைவு" – ஏசாயா 53:6 | 73 |
| "ஆட்டுக்குட்டியானவரின் மௌனம்" – ஏசாயா 53:7 | 84 |
| "சாந்தப்படுத்துதலின் விளக்கம்" – ஏசாயா 53:8 | 96 |
| "கிறிஸ்துவின் அடக்கத்தின் முரண்பாடு" – ஏசாயா 53:9 | 110 |
| "கிருபாதார பலி" – ஏசாயா 53:10 | 121 |
| "இரட்சகரின் வெற்றி!" – ஏசாயா 53:10 | 137 |
| "கிறிஸ்துவின் மூலமாக கிடைத்த திருப்தி மற்றும் நீதிமானாக்குதல்" – ஏசாயா 53:11 | 151 |
| "கிறிஸ்துவின் மகிமையின் உற்பத்தி ஸ்தானம்" – ஏசாயா 53:12 | 164 |
| "இயேசுவில் பழங்கால நம்பிக்கை" – ஏசாயா 53:3 | 177 |

# கர்த்தருடைய தாசரின் பாடு மற்றும் வெற்றி!

### (செய்தி எண்:1 ஏசாயா 53)

# THE SUFFERING AND TRIUMPH OF GOD'S SERVANT!

### (SERMON NUMBER 1 ON ISAIAH 53)

டாக்டர் ஆர். எல். ஹைமெர்ஸ், ஜூனியர்
by Dr. R. L. Hymers, Jr.

பெப்ருவரி 24, 2013 அன்று கர்த்தருடைய நாள் காலை வேளையில் லாஸ் ஏஞ்சலஸில் உள்ள பாப்திஸ்து கூடாரத்தில் பிரசங்கிக்கப்பட்ட செய்தி
A sermon preached at the Baptist Tabernacle of Los Angeles
Lord's Day Morning, February 24, 2013

> "இதோ, என் தாசன் ஞானமாய் நடப்பார். அவர் உயர்த்தப் பட்டு, மேன்மையும், மகா உன்னதமுமாயிருப்பார். மனுஷனைப்பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும், மனுபுத்திரனைப்பார்க்கிலும் அவருடைய ரூபமும், இவ்வளவு அந்தக்கேடு அடைந்தபடியினாலே, அவரைக் கண்ட அநேகர் பிரமிப்படைந்தார்கள். அப்படியே, அவர் அநேகம் ஜாதிகளின் மேல் தெளிப்பார்; அவர் நிமித்தம் ராஜாக்கள் தங்கள் வாயை மூடுவார்கள்: ஏனெனில், தங்களுக்கு தெரிவிக்கப்படாதிருந்ததை அவர்கள் காண்பார்கள்; கேள்விப்படாதிருந்ததை அவர்கள் அறிந்து கொள்வார்கள்" (ஏசாயா 52:13 - 15).

தயவாய் இந்த வேத பகுதியினைத் திறந்து வைத்துக் கொள்ளுங்கள். இந்த வசனங்கள் ஏசாயா 52ல் வாசிக்கப்படுவதை விட, 53 உடன் இணைத்து வாசிப்பதே அதிக சிறப்பானது என்பது, அறிவர். ஜான் கில், அவர்களின் மற்றும் "மிக அதிகப்படையான" நவீனகால வேதவர்ணனையாளர்களின் கருத்து. (Frank E. Gaebelein, D.D., ***The Expositor's Bible Commentary***, Regency Reference Library, 1986, volume 6, p. 300).

இந்த வேத பகுதி முழுவதும், 13வது வசனமுதல் 53 அதிகாரம் 12 வசனங்கள் "தேவனுடைய பாடு சகிக்கும் தாசரைக்" குறிக்கிறது. மேத்யு ஹென்றி அவர்கள் கீழ்காணும் விதத்தில் குறிப்பிடுகிறார்,

> இங்கே துவங்கி, அடுத்த அதிகாரத்தின் முடிவு வரைக்கும் தொடர்கிற தீர்க்கதரிசனம் தெளிவாக இயேசுவை சுட்டிக்காட்டுகிறது: இக்கால யூத (ரபீக்கள்) இந்த வேத பகுதியைத் திரித்துக் கூறி அதீத முயற்சி செய்தாலும், முற்கால யூதர்கள் இந்த வசனப்பகுதி மேசியாவை வெளிப்படுத்துவதாகப் புரிந்து கொண்டனர்... ஆனால் பிலிப்பு, (இந்த பகுதியைக் கொண்டு) கந்தாகே மந்திரியிடம் இயேசுவைப் பிரசங்கித்து, இவ்வசனங்களை தர்க்கங்களுக்கு இடமில்லாமல் நிரூபணம் செய்யும் விதத்தில் "பேசத்தொடங்கி இந்த வேத வாக்கியத்தை முன்னிட்டு" இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான். அப்.8:34,35 (***Matthew Henry's Commentary on the Whole Bible***, Hendrickson Publishers, 1996 reprint, volume 4, p. 235).

பழங்கால யூத எழுத்துக்களும், புராதன ரபீக்களான அபென் எஸ்றா மற்றும் ஆஸ்லெக் ஆகியோர் முதலாய், இந்த பகுதி மேசியாவைக் குறிப்பிடுவதாக சான்றளிக்கின்றனர். (John Gill, D.D., ***An Exposition of the Old Testament***, The Baptist Standard Bearer, 1989 reprint, volume I, p. 309).

அது மட்டுமல்லாது, காலாகாலமாய் கிறிஸ்தவ ஆசிரியர்களும், இந்த வேதபகுதி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும் தீர்க்கதரிசனம் எனவே பார்க்கின்றனர். ஸ்பர்ஜன் இவ்விதமாக உரைத்தார்,

> அவர்கள் வேறு எவ்விதம் செய்ய முடியும்? வேறு எந்த தீர்க்கதரிசியுடன் இந்த பகுதியை ஒப்பிட முடியும்? அது நாசரேத் ஊரானானால், தேவ குமாரனானால், இம்மூன்று வசனங்களில் சரியாக வெளிப்படாத பட்சத்தில், அவை முழுவதும் நடு இரவினைப் போல் இருண்டு போய்விடும். இதில் உள்ள ஒவ்வொரு வார்த்தையினையும்

> இயேசுவிடம் ஒப்பிட எந்த தயக்கமும் நாங்கள் காண்பிப்பதில்லை (C. H. Spurgeon, “The Sure Triumph of the Crucified One,” ***The Metropolitan Tabernacle Pulpit***, Pilgrim Publications, 1971 reprint, volume XXI, p. 241).

மேத்யு ஹென்றி ஏற்கனவே சொன்னது போல, சுவிசேஷகனாகிய பிலிப்புவும் இந்த பகுதி இயேசுவின் பாடுமரணத்தை முன்குறிப்பதாக எடுத்துரைத்தார்.

> “மந்திரி பிலிப்பை நோக்கி, தீர்க்கதரிசி யாரைக்குறித்து இதைச் சொல்லுகிறார்? தம்மைக்குறித்தோ, வேறொருவரைக்குறித்தோ? எனக்குச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டான். அப்பொழுது பிலிப்பு பேசத்தொடங்கி, இந்த வேத வாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான்” (அப்போஸ்தலர் 8:34-35).

நாமும் கூட நம் முன் சொன்ன புராதான யூதப் பாரம்பரியம், குருமார்கள், பிலிப்பு மற்றும் கிறிஸ்தவ வேத வர்ணனையாளர்கள் சொல்வதைவிட மேலாக சொல்ல இயலாது. நம் தியானப்பகுதியின் ஒவ்வொரு வார்த்தையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் மேசியாவைக் குறித்த தீர்க்கதரிசனமாகும்.

## I. முதலாவதாக, கிறிஸ்து தேவனுக்குச் செய்யும் ஊழியத்தைக் காணலாம்.

பிதாவாகிய தேவன் 13 ஆம் வசனத்தில் பேசுகிறார்,

> “இதோ, என் தாசன் ஞானமாய் நடப்பார். அவர் உயர்த்தப்பட்டு, மேன்மையும் மகா உன்னதமுமாய் இருப்பார்” (ஏசாயா 52:13).

தம் “தாசனை” நோக்கிப்பாருங்கள் என்று தேவன் நம்மிடம் கூறுகிறார். இயேசு பூமிக்கு வந்த போது, அவர்

> "தம்மைத்தாமே வெறுமையாக்கி,அடிமையின்ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்" (பிலிப்பியர் 2:7).

பூமியில் தேவனுடைய தாசனாய், கிறிஸ்து ஞானமாய் நடந்தார், புத்திக்கூர்மையாய்க் காணப்பட்டார். இயேசு செய்தது மற்றும் அவரால் உரைக்கப்பட்ட அனைத்தும், மகா ஞானமுடன் செய்யப்பட்டது. ஒரு சிறுவனாய், தேவாலயத்தில் சென்றிருந்த இயேசுவின் ஞானத்தைக் கண்ட ரபீக்கள் ஆச்சரியமடைந்தனர். பின் நாட்களில், பரிசேயர் மற்றும் சதுசேயர் அவருக்குப் பதில் சொல்ல முடியவில்லை, ரோம ஆளுநராயிருந்த பிலாத்து இயேசுவின் பேச்சைக் கேட்டு வாயடைத்துப்போனான்.

தொடர்ந்து நமது வேத பகுதி, கிறிஸ்துவைப் பற்றி இவ்வாறு சொல்கிறது,

> "அவர் உயர்த்தப்பட்டு, மேன்மையும் மகா உன்னதமுமா யிருப்பார்" (ஏசாயா 52:13).

இங்கு பயன்படுத்தியுள்ள பதங்கள் "உயர்த்தப்பட்டு", "மேன்மையும்", "மகா உன்னதமுமாயிருப்பார்". அறிஞர் எட்வர்டு ஜே. யங், "இதைக் காணும் போது இயேசுவின் மேன்மையை உணர்த்தும் பிலிப்பியர் 2:9-11 மற்றும் அப். 2:33 உடன் ஒப்பிடாமல் இந்த வார்த்தைகளை வாசிப்பது கடினம்" என்கிறார். (Edward J. Young, Ph.D., ***The Book of Isaiah***, Eerdmans, 1972, volume 3, p. 336).

> "ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" (பிலிப்பியர் 2:9).

> "இந்த இயேசுவைத் தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம். அவர் தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டு,… இதைப் பொழிந்தருளினார்" (அப்போஸ்தலர் 2:32-33).

> "இதோ என் தாசன் ஞானமாய் நடப்பார். அவர் உயர்த்தப்பட்டு, மேன்மையும் மகா உன்னதமு மாயிருப்பார்" (ஏசாயா 52:13).

உயர்த்தப்பட்டு - "எழுப்பினார்". மேன்மையும் - "உயர்த்தி". மகா உன்னதமுமாய் - "எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி". இந்த வார்த்தைகள் அனைத்தும் இயேசு கிறிஸ்து உயர்வடைந்த படிகளைக் குறிக்கின்றன. அவர் மரணத்திலிருந்து உயிர்த்தார்! அவரது பரமேறுதலில் வானத்திற்கு உயர்த்தப்பட்டார்! இப்பொழுது அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்! உயர்த்தப்பட்டு -"எழுப்பினார்"! மேன்மையும் - "உயர்த்தி". மகா உன்னதமுமாய் - "எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி"! ஆமென்!

> உயர்த்தப்பட அவர் மரிக்க வேண்டியது,
> "எல்லாம் முடிந்தது" அவரது உரத்த குரல்;
> இப்பொழுது விண்ணில் மேன்மையான உயரத்தில்;
> அல்லேலூயா! அருமை இரட்சகர்!
> ("Hallelujah, What a Saviour!" by Philip P. Bliss, 1838-1876).

> "இதோ, என் தாசன் ஞானமாய் நடப்பார். அவர் உயர்த்தப்பட்டு, மேன்மையும் மகா உன்னதமுமாயிருப் பார்" (ஏசாயா 52:13).

இயேசு இன்றும், இனிமேலும், பிதாவாகிய தேவ தாசராக- தேவ குமாரனாக – மரித்தோரிலிருந்து எழுந்தவராக, பரமேறிப்போனவராக, பிதாவின் வலது பாரிசத்தில் இருப்பவராக இருப்பார்! அல்லேலூயா! என்ன அருமையான இரட்சகர்!

## II. இரண்டாவதாக, பாவத்திற்கான கிறிஸ்துவின் பரிகாரம் குறித்து நாம் காணலாம்.

தயவாய் 14வது வசனத்தை சத்தமாய் வாசியுங்கள்.

> "மனுஷனைப்பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும், மனுபுத்திரனைப்பார்க்கிலும் அவருடைய ரூபமும், இவ்வளவு அந்தக்கேடு அடைந்தபடியினாலே அவரைக் கண்ட அநேகர் ஜஆச்சரியமடைந்தார்கள்ஸ பிரமிப்பு அடைந்தார்கள்"(ஏசாயா 52:14).

இதை விவரிக்கையில் அறிஞர் யங் அவர்கள் இவ்வாறு உரைக்கிறார். "அவரைப் பார்த்தவர்கள் தாசருடைய சரீர உருக்குலைவைக் கண்டு ஜவரும் காலத்திலும்ஸ பிரமிப்படைவர்... அவரது உருக்குலைந்த நிலை மிகக் கெடூரமாய் இருப்பதால்ஜவரும் காலத்திலும்ஸ அவர் மனிதனைப்போன்ற தோற்றமுடையவராகவே காணப்படவில்லை... அவருடைய சரீரம் அவ்வாறு உருக்குலைந்ததால் மனிதனைப் போன்ற தோற்றம் அவருக்கு இல்லை. இது அவருடைய பாடுகளின் உச்ச நிலையை மிக அழுத்தமாகச் சொல்லும் வழிமுறையே" (iடினை.இ pp. 337-338).

இயேசு கிறிஸ்து பாடுபடும் போது கொடூரமாய் உருக்குலைக்கப் பட்டிருந்தார். அவர் சிலவையில் அறையப்படுவதற்கு முந்தைய இரவில் அவர் "மிகுந்த வியாகுலப்பட்டார்,"

> "அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் தரையிலே விழுந்தது" (லூக்கா 22:44).

இது அவர் கைது செய்யப்படும் முன்னமே நடந்தது. கெத்சமனேயின் இருளில், உன் பாவத்திற்கான தண்டனை இயேசுவின் மேல் விழத் துவங்கியது. சேவகர்கள் அவரைக் கைது செய்ய வரும் முன்பே அவர் இரத்த வெள்ளத்தில் மூழ்கலாயினார்.

அவரைக் கொண்டு சென்று கன்னத்தில் அறைந்தார்கள். வேறொரு இடத்தில் கர்த்தருடைய தாசரின் வார்த்தைகளை தீர்க்கதரிசி சொல்லுகிறார்,

> "அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடை மயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக்கொடுத்தேன்: அவமானத்துக்கும் உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை" (ஏசாயா 50:6).

"அவரைக் கன்னத்தில் அடித்தார்கள்", என லூக்கா எழுதினார் (லூக்கா 22:64). மாற்கு எழுதும்போது பிலாத்து "அவரைச் சவுக்கால் அடித்து " என குறிப்பிடுகிறார் (மாற்கு 15:15). யோவானின் வார்த்தைகள்இ

> "அப்பொழுது பிலாத்து இயேசுவைப் பிடித்து வாரினால் [சவுக்கடி] அடிப்பித்தான். போர்ச்சேவகர் முள்ளுகளினால் ஒரு முடியைப்பின்னி அவர் சிரசின் மேல் வைத்து [அணிவித்து] சிவப்பான ஒரு அங்கியை அவருக்கு உடுத்தி: யூதருடைய ராஜாவே, வாழ்க என்று சொல்லி, அவரைக் கையினால் [தாக்கினார்கள்] அடித்தார்கள்" (யோவான்19:1-3).

பின்பு அவர் கைகளையும் கால்களையும் ஆணிகளால் அடித்தார்கள். "அவருடைய சரீரம் அவ்வாறு உருக்குலைந்ததால் மனிதனைப் போன்ற தோற்றம் அவருக்கு இல்லை." என்று அறிஞர் யங் குறிப்பிட்டது போல நடந்தது (ibid., p. 338).

> "மனுஷனைப்பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும் [அவர் தோற்றம்], மனுபுத்திரனைப்பார்க்கிலும் அவருடைய ரூபமும், இவ்வளவு அந்தக்கேடு அடைந்தபடியினாலே அவரைக் கண்ட அநேகர் பிரமிப்படைந்தார்கள்" (ஏசாயா52:14).

அநேக நவீன கால சிலுவைக் காட்சிகள் மேல் கிப்சன் அவர்களின் "கிறிஸ்துவின் பாடுகள்" போன்று, கிறிஸ்து அடிக்கப்பட்டு, சவுக்கடிபட்டு சிலுவையில் அறைந்த போது காண்பிக்கும் தோற்றம் போல் தெளிவாகக் காண்பிக்கப்படவில்லை.

ஸ்கோஃபீல்டு வேதாகமம் இந்த வசனம் குறித்து விளக்கும் போது,'இதன் நேரடி காட்சி மிகவும் பயங்கரமானது: 'மனுசனைப் பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும், மனுபுத்திரனைப்பார்க்கிலும் அவருடைய ரூபமும் அந்தக் கேடடைந்திருந்தது' - அப்படியானால் மனிதனாக அல்ல - அந்த கொடூரங்களின் விளைவினை மத்தேயு 26

விவரிக்கிறது....". ஜோசப் ஹார்ட் அவர்களின் பாமாலையைக் கேளுங்கள் (1712-1768),

> முட்களால் அவர் நெற்றி குத்திக் கிழிக்க, எப்பக்கமும் இரத்த ஊற்று
> அனுப்ப; உரத்த அடிகளால் அவர் முதுகு
> கிழிக்கப்படினும்,கிழிந்ததாமவர் இருதயம் கூர்மையான சாட்டைகளால்.
> நிர்வாணியாய் சாபமான மரத்தில் அடிக்கப்பட்டவராய்,
> புவிக்கும் விண்ணுக்கும் இடையே வெளிப்படையாய்,
> காட்சிப்பொருளான காயங்களும் இரத்தமும்,
> காயப்பட்ட அன்பின் ஒரு சோகமான காட்சி!
> ("His Passion" by Joseph Hart, 1712-1768;
> to the tune of "Tis Midnight, and on Olive"s Brow").

> ஏன் அரும் இரட்சகா, ஏன் சொல்லும்
> இரத்த வெள்ளத்தில் பாடனுபவித்துக் கிடந்தீர்? என்ன மகா
> நோக்கம் உம்மை அசைத்தது?
> நோக்கம் நேரானதே - அஃது அனைத்தும் அன்பிற்கே!
> ("Gethsemane, the Olive-Press!" by Joseph Hart, 1712-1768;
> to the tune of ""Tis Midnight, and on Olive"s Brow").

ஏன் அரும் இரட்சகா, ஏன் சொல்லும் "மனுஷனைப்பார்க்கிலும் [உம்முடைய] முகப்பார்வையும், மனுபுத்திரனைப்பார்க்கிலும் ரூபமும், இவ்வளவு அந்தக்கேடு அடைந்தது?" அதற்கான பதில் 53 ஆம் அதிகாரம் கடைசி வசனத்தில் சொல்லப்பட்டுள்ளது. "அவர் அநேகருடைய பாவத்தை சுமந்தார்" (ஏசாயா 53:12). இது உன் பாவத்துக்காகவே கிறிஸ்து பட்ட பாடுகள். உன் பாவத்திற்காக பாடுபட்டு மரித்தார். உன் இடத்தில் கிறிஸ்து மரித்தார் - சிலுவை மீதினில்! இவ்வாறு நாம் கிறிஸ்து தேவனுக்கு செய்த சேவையைக் காண்கிறோம். இவ்வாறாக கிறிஸ்து நமது பாவத்திற்கு விலைக்கிரயம் செலுத்தும்படி நமக்காக பலியானதைப் பார்க்கிறோம்.

**III. மூன்றாவதாக, நடைமுறை வாழ்வில் கிறிஸ்துவின் இரட்சிப்பைப் பார்ப்போம்.**

தயவு செய்து எழுந்து நின்று ஏசாயா 52:15 ஐ சத்தமாய் வாசிப்போம்.

> "அப்படியே, அவர் அநேகம் ஜாதிகளின் மேல் தெளிப்பார்; அவர் நிமித்தம் ராஜாக்கள் தங்கள் வாயை மூடுவார்கள்; ஏனெனில், தங்களுக்கு தெரிவிக்கப்படாதிருந்ததை அவர்கள் காண்பார்கள்; கேள்விப்படாதிருந்ததை அவர்கள் அறிந்து கொள்வார்கள்" (ஏசாயா 52:15).

நீங்கள் அமர்ந்து கொள்ளலாம். 14 ஆம் வசனம் கூறும் இயேசுவின் பாடுகளும் தியாக பலியும் இந்த வசனத்தில் விளக்கப்பட்டு அப்பியாசப்படுத்தப்படுகிறது என்று அறிஞர். யங் கூறுகிறார்,

> அவர் [கிறிஸ்து] ஏன் அந்தக் கேடடைந்தார் என தீர்க்கதரிசி விளக்குகிறார். இந்த நிலையில்... "அவர் அநேகம் ஜாதிகளின் மேல் தெளிப்பார்". அந்தக் கோலமடைந்தவர் [தாசர்] பிறருக்காக ஒன்றைச் செய்கிறார், அதனால் சுத்திகரிப்பை உண்டு பண்ணுகிறார். அவரது அந்தக்கேடு [அவரது பாடுகள்] வழியாக தேசங்களை தம்மிடம் கொண்டு வந்து சுத்திகரிப்பார். தெளிப்பார் என்னும் வினைச் சொல் [பேசுவது] அவரது தண்ணீர்; அல்லது இரத்தத்தினாலான சுத்திகரிப்பே... இது [கிறிஸ்துவின் ஆசாரியத்துவ] செயல்பாடு. அதன் நோக்கம் தேசங்களுக்கு சுத்திகரிப்பையும் பரிசுத்தமாக்குதலையும் கொண்டு வர வேண்டும் என்பதே. ஒரு ஆசாரியராக மற்றவர்களுக்கு சுத்திகரிப்பை அவர் கொண்டு வருவார். அதை பாடுபடுகிறவராக அந்தப் பாடுகளின் வழியாக... சுத்திகரிப்பை உண்டுபண்ணி ஒரு வித்தியாசமான மாற்றத்தை அவரை நோக்கிப் பார்க்கிறவர்களில் ஏற்படுத்தவே இதைச் செய்தார் (ibid., pp. 338-339).

இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறும் விதத்தில், கிறிஸ்துவைப்பற்றிய சுவிசேஷம் யூத மதப்பிடியிலிருந்து விடுபட்டு உலகளாவிய மார்க்கமாக உருவெடுத்தது. முதல் நூற்றாண்டில் இருந்தே "அனேக தேசங்கள்" சுவிசேஷ மயமாக்கப்பட்டன, உலகின் பல பகுதியைச் சேர்ந்தவர்கள் இயேசுவின் இரத்தத்தால் சுத்திகரிக்கப்பட்டு, கிறிஸ்து இயேசுவுக்குள் இரட்சிப்படையும் படி அவர்களைக் கொண்டு வந்து, அறிஞர் யங் சொல்வது போல "அவரை நோக்கிப் பார்க்கிறவர்களின் மனநிலையில் வித்தியாசமான மாற்றத்தை ஏற்படுத்தினார்" ஒருவேளை எல்லா தேசங்களின் ராஜாக்களும் இரட்சிப்படையவில்லை என்றாலும், அந்த நிலையிலும் கிறிஸ்தவம் உலகம் முழுவதும் வளர்ந்தது. அவர்கள் "வாயையாவது அவருக்கு முன்பாக அடைத்துக் கொண்டு" பெயரளவில் கிறிஸ்தவர்களானார்கள், அவருக்கு விரோதமாகப் பேசவில்லை. இந்நாள் வரை, இரண்டாம் எலிசபெத் ராணி "அவருக்கு முன்பாக" தன் வாயை அடைத்துக் கொண்டு, வெஸ்டுமினிஸ்டர் அப்பேயில் கிறிஸ்தவ ஆராதனைகளில் அமைதியாக பணிந்து கொள்கிறார். அநேக மேற்கத்திய ராஜாக்கள் மற்றும் கிழக்கத்திய ராஜாக்கள்; பெயரளவிலாவது அவருக்கு கனம் செலுத்துகின்றனர், விக்டோரியா ராணி போன்றவர்கள் உண்மையாகவே வெளிப்படையான கனத்திற்கும் அதிகமான கனத்தை தருகின்றனர். ஆரம்ப கிறிஸ்தவ சரித்திரத்திலும் அப்படியே மற்றவர்களைப்போல காண்ஸ்டன்டைன் பேரரசரும் கிறிஸ்துவை கனம் பண்ணினார்.

> "ஏனெனில், தங்களுக்கு தெரிவிக்கப் படாதிருந்ததை அவர்கள் காண்பார்கள்; கேள்விப் படாதிருந்ததை அவர்கள் அறிந்து கொள்வார்கள்" (ஏசாயா 52:15).

தீர்க்கதரிசியால் முன்னறிவிக்கப்பட்ட படியே, கிறிஸ்துவின் சுவிசேஷம் உலக நாடுகள் எங்கும் பிரசித்தமாயிற்றுஇ

> "அவர் அநேகம் ஜாதிகளின் மேல் தெளிப்பார்" (ஏசாயா 52:15).

அமெரிக்காவின் குடியரசுத்தலைவர் கூட பெயரளவில் கிறிஸ்தவரானாலும், அவரது தலை சில சமயங்களில் சபையில் வணங்குகிறது கிறிஸ்துவுக்கு முன்பாக (அவரது) "வாயை அடைத்துக்" கொள்கிறார்.

ஆனாலும் இந்த அற்புதமான முன்னறிவிப்பு ஐரோப்பா, இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவைப் பற்றி ஒருகாலத்தில் சொல்லப்பட்டது போல மட்டுமல்ல. மேற்கத்திய சபைகள் "தாராளமய" உபதேசத்தால் அதிக குழப்பத்திலும் பிரச்னையிலும் சிக்கிக் கிடக்கிறது, சபையின் பெலவீனத்திற்கு காரணம் ஃபின்னி மற்றும் அவரால் பின்பற்றப்படும் "டிசிஸனிஸம்" கொள்கை உடையோரால் வெவ்வேறு விதத்தில் தாக்கம் பெற்றதும் ஆகும். எனினும், மூன்றாம் தர நாடுகளில் அநேக இடங்களில் பெரும் உயிர்மீட்சியும் எழுப்பதல்கள் நடைபெறுகின்றன. ஒரு காலத்தில் தவறான உபதேசத்திற்குக் காரணமான பெலவீனமாகப் பார்க்கப்பட்ட மேற்கத்திய சபைகள் இன்று வளர்ச்சி பெறுகின்றன. சீனாவிலும், தென் கிழக்கு ஆசிய, இந்திய நாடுகள் போன்றவைகளில் இந்த மணி நேரத்திலும் சுவிசேஷம் ஊடுருவிப் பாய்வது நமது இருதயங்களைக் குளிரப்பண்ணுகிறது! ஆம், சில சபைகள் உபத்திரவப் படுத்தப் படுகின்றன. ஆனால் தெர்த்துல்லியன் சொல்லியது போல "இரத்த சாட்சிகளின் இரத்தம் சபையின் வித்து" என்பது வளரும் நாடுகள் அனைத்திலும் மெய்யாகிறது. ஆமெரிக்காவும் மேற்கத்திய நாடுகளும் கிறிஸ்தவ பின்னணியத்திலிருந்து சந்தேகம் மற்றும் ஆவிக்குரிய குழப்பங்களில் விழுந்து கொண்டிருக்கும் நிலையில், ஸ்பர்ஜன் முன்னறிவித்தது போலவே,

> இயேசு .... யூதர் மீது மட்டும் இரத்தம் தெளிக்காமல், எங்குமுள்ள புறஜாதிகளிலும் இரத்தம் தெளிப்பார்... எல்லா தேசங்களும் உம்மைக் குறித்து கேள்விப்பட்டு, புல்களி;ன் மீது விழும் நீரைப் போல உம்மை உணர்வர். தூரத்தில் இருக்கும் கோத்திரங்கள், சூரியன் அஸ்;தமிக்கும் திசையில் வாழும் ஜனங்கள் உம் உபதேசத்தைக் கேட்டு அதைப் பருகுவார்கள். நீர் அநேக தேசங்களின் மீது உமது கிருபையுள்ள வார்த்தையால் தெளிப்பீர் (ibid. p. 248).

ஸ்பர்ஜனின் "தீர்க்கதரிசன" செய்தி 100 ஆண்டுகளுக்கு முன் அவர் சொன்ன காலகட்டத்தை விட இன்று அதிகமான சத்தியமாய் திகழ்கிறது. அது அப்படி இருப்பதால் சந்தோஷமடைகிறோம்! ஆமென்!

இந்த வாக்கு இன்னும் முழுமையாக நிறைவேறவில்லை. ஆனால் அது நிறைவேறும் - ஏனெனில் கர்த்தருடைய வாய் இதைச் சொல்லிற்று - ஏசாயா மூலமாக இவ்வாறு சொன்னார்,

> "உம்முடைய வெளிச்சத்தினிடத்திற்கு ஜாதிகள் கடந்து வருவார்கள்" (ஏசாயா 60:3).

> "ஜாதிகளின் பலத்த சேனை உன்னிடத்திற்கு வரும்" (ஏசாயா 60:5).

> "இதோ, இவர்கள் தூர தேசத்திலிருந்து வருவார்கள்;; இதோ அவர்கள் வடக்கிலும் மேற்கிலுமிருந்து வருவார்கள். இவர்கள் சீனீம் தேசத்திலுமிருந்து வருவார்கள்" (ஏசாயா 49:12).

சீன தேசத்திற்கு முதலில் ஊழியத்திற்குச் சென்ற ஜேம்ஸ் ஹட்சன் டெய்லர் "சீனீம்" சீன தேசத்தைக் குறிக்கிறது என்றார், அவ்வாறே ஸ்கோஃபீல்டு ஆய்வு வேதாகமமும் அதன் ஏசாயா 42:19 குறிப்பில் கூறுகிறது. இதே காரியம் சீனாவில் நம் கண் முன்னே நடந்து வரும் வேளையில் டெய்லருக்கும் ஸ்கோஃபீல்டுக்கும் நாம் எவ்வாறு மறுப்பு தெரிவிக்க முடியும்? அது மெய்யாகவே சத்தியம், மிக சிறிய அப்பியாசம்! இன்று ஆயிரக்கணக்கில் சீன மக்கள் கிறிஸ்;துவிடம் வந்து கொண்டிருக்கிறார்கள், அதைப்போலவே தூர தேசங்களிலுமிருந்தும் வருகிறார்கள். அதற்காய் சந்தோஷமடைகிறோம்!

அமெரிக்கா ஒவ்வொரு நாளிலும் மூவாயிரம் கர்ப்பத்தில் இருக்கும் நாதியற்ற கருக்கலைப்பு செய்து கொண்டிருக்கும் வேளையில், சபைகள் ஆயிரக்கணக்காய் மூடப்படும் சூழலில், தூர தேசங்களில் கிறிஸ்துவின் வேலை வளர்ந்து பெருகுகிறது! தேவனே அவர்களுக்கு இன்னும் அதிக ஆத்தும ஆதாயங்களைத் தாரும்! தேவனே ஜனங்கள் உம்மை அறிந்து,

கிறிஸ்துவின் நாமத்திற்காய் பாடுபட ஒப்புக்கொடுத்து, சீக்கிரத்தில் கிறிஸ்துவின் இரண்;டாம் வருகையில் ஜாதிகளுக்குள் மேற்கொள்பவர்களாய் இருப்பார்களாக!

ஆனால் இந்த காலையில் “உங்களுக்கு இயேசுவைத் தெரியுமா? என்று கேட்க விரும்புகிறேன். உங்கள் பாவத்திற்காக,ஆம் - உங்கள் பாவத்திற்காகவே ‘மனுஷரைப்பார்க்கிலும் அந்தக் கேடடைந்தவரை’ விசுவாசத்தில் நோக்கிப்பார்த்திருக்கிறீர்களா? அவர் உன் பாவத்தின் மீது இரத்தம் தெளித்து, தேவனுடைய புத்தகத்தில் உன் பெயரை எழுதியிருக்கிறாரா? உலகின் பாவத்தை சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தால் கழுவி சுத்தமாக்கப் பட்டிருக்கிறீர்களா? அப்படி இல்லை எனில், அவருடைய பிரசன்னத்தில் ‘வாயடைத்து மௌனமாய்’ அவருடைய பிரசன்னத்தில் பணிந்து இயேசுவை உங்கள் சொந்த இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்வீர்களா? இப்போதே அதைச் செய்வீர்களா?”

தயவாய் எழும்பி பாடல் தாளில் ஏழாம் பாடலைப் பாடலாம்.

அதிக பாரமான மானிட மாசு இரட்சகர் மீது சுமத்தப்பட்டது;
ஓலமுடன் கந்தையுடன், பாவிகளுக்காய் உடுத்தப்பட்டார்,
பாவிகளுக்காய் உடுத்தப்பட்டார்..
மரண ஓலத்தினிடையே கடந்து போய் அழுது,
அவர் எனக்காய் ஜெபித்தார்;
மாசான என் ஆத்துமாவை நேசித்து அணைத்து
சிலுவையில் தொங்கினார். சிலுவையில் தொங்கினார்.
ஓ ஆச்சரியமான அன்பு!
மனித நாவால் சொல்ல முடியா உயரமான அன்பு;
என்றும் பேசப்படப் போகும் நித்திய பாடல் பொருளாகிய அன்பு.
ஒரு நித்திய பாடல்.
(“Love in Agony” by William Williams, 1759;
To the tune of “Majestic Sweetness Sits Enthroned”)

கிறிஸ்துவை விசுவாசித்து கிறிஸ்தவராக மாற விரும்பினால், தயவாய் ஒரு படி முன்னே மேடைக்கு அருகில் வாருங்கள். டாக்டர். கேகன் உங்களை அமைதலான இடத்திற்கு அழைத்துச் சென்று உங்களோடு பேசுவார்கள்.

இப்போதே அதைச் செய்யுங்கள். டாக்டர். சான், தயவாய் முன் வந்தவர்களுக்காக ஜெபியுங்கள். ஆமென்.

# கர்த்தருடைய தாசரின் பாடு மற்றும் வெற்றி!

**(செய்தி எண்:1 ஏசாயா 53)**

முக்கியக் குறிப்புகள்

"இதோ, என் தாசன் ஞானமாய் நடப்பார். அவர் உயர்த்தப் பட்டு, மேன்மையும் மகா உன்னதமுமாயிருப்பார். மனுஷனைப்பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும், மனுபுத்திரனைப்பார்க்கிலும் அவருடைய ரூபமும், இவ்வளவு அந்தக்கேடு அடைந்தபடியினாலே அவரைக் கண்ட அநேகர் பிரமிப்படைந்தார்கள். அப்படியே, அவர் அநேகம் ஜாதிகளின் மேல் தெளிப்பார்; அவர் நிமித்தம் ராஜாக்கள் தங்கள் வாயை மூடுவார்கள்; ஏனெனில், தங்களுக்கு தெரிவிக்கப்படாதிருந்ததை அவர்கள் காண்பார்கள்; கேள்விப்படாதிருந்ததை அவர்கள் அறிந்து கொள்வார்கள். (ஏசாயா52:13-15).

(அப்போஸ்தலர் 8:34-35)

I. முதலாவதாக, கிறிஸ்து தேவனுக்குச் செய்யும் ஊழியத்தைக் காணலாம், ஏசாயா 52:13; பிலிப்பியர் 2:7; 2:9; அப்போஸ்தலர் 2:32-33.

II. இரண்டாவதாக, பாவத்திற்கான கிறிஸ்துவின் பரிகாரம் குறித்து நாம் காணலாம், ஏசாயா 52:14; லூக்கா 22:44; ஏசாயா 50:6; லூக்கா 22:64; மாற்கு 15:15; யோவான் 19:1-3; ஏசாயா 53:12.

III. மூன்றாவதாக, நடைமுறை வாழ்வில் கிறிஸ்துவின் இரட்சிப்பைப் பார்க்கலாம், ஏசாயா 52:15; 60:3இ5; 49:12.

# நிராகரிக்கப்பட்ட அறிக்கை

**(ஏசாயா 53ன் மீதான பிரசங்க எண் 2)**

# THE REJECTED REPORT

**(SERMON NUMBER 2 ON ISAIAH 53)**

Dr. R. L. ஹைமர்ஸ் ஜுனியர்அவர்களால்
Dr. R. L. Hymers, Jr.

மார்ச் 3, 2013 கர்த்தருடைய நாளன்று காலை லாஸ் ஏஞ்சலஸ் பாப்திஸ்து டேபெர்னெக்கிலில் பிரசங்கிக்கப்பட்டது
A sermon preached at the Baptist Tabernacle of Los Angeles
Lord's Day Morning, March 3, 2013

> "எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது?" (ஏசாயா 53:1).

கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து ஏசாயா பேசுகிறார். கடந்த ஞாயிற்றுக் கிழமை ஏசாயா 52ம் அதிகாரத்தின் கடைசி 3 வசனங்களிலிருந்து நான் பிரசங்கித்தேன். "மனுஷனைப் பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும் மனுப்புத்திரரைப் பார்க்கிலும் அவருடைய ரூபமும் இவ்வளவு அந்தக்கேடு அடைந்தபடியினாலே" (ஏசாயா 52: 14). பாடுப்பட்ட கிறிஸ்துவைக் குறித்து தீர்க்கதரிசி அங்கு கூறியுள்ளார். அடிக்கப்பட்டு நமது பாவங்களுக்காக சிலுவையில் அறையப்பட்ட பின் உயிரோடெழும்பிய இயேசுவின் காட்சி இது. "அவர் உயர்த்தப்பட்டு மேன்மையும் மகா உன்னதமுமாயிருப்பார்" (ஏசாயா 52: 13). ஆயினும் குறிப்பிடப்பட்டுள்ள வேத பகுதியில், தேவனுடைய சுவிசேஷத்தை சிலர் மட்டுமே விசுவாசிப்பார்கள் என வேதனையோடு தீர்க்கதரிசி குறிப்பிடுகிறார்.

பண்டிதர் எட்வர்ட் J.யெங் ஒரு பழைய ஏற்பாட்டின் விற்பன்னர். எனது முந்தைய போதகர் பண்டிதர் திமோத்தி லின் அவர்களின் நன்பரும்அவரோடுபடித்தவருமாவார்.

> "எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது?"

என்ற வசனத்தை விளக்குகையில், "இது ஒரு கேள்வி என்பதை விட ஒரு ஆச்சரியத்தை வெளிப்படுத்தும் வாசகம் எனலாம். இதற்கு ஒரு எதிர்மறையான பதில் தேவையில்லை. உலகில் சிறிய அளவிலுள்ள உண்மை விசுவாசிகள் மீது நமது கவனத்தைக் கொண்டு செல்லவே இவ்வாறு அது கேட்கப்பட்டுள்ளது. மக்களின் பிரதிநிதியாக விளங்கும் தீர்க்கதரிசியானவர், சிலர் மட்டுமே விசுவாசிப்பதைக் குறித்து தனது திகைப்பை வெளிப்படுத்திப் பேசுவதாக இவ்வசனம் அமைந்துள்ளது." (பண்டிதர் எட்வர்ட் J. யெங், ***ஏசாயா புத்தகம்***, வில்லியம் B. எர்டுமென்ஸ் வெளியீட்டு நிறுவனம், 1972, பாகம் 3, பக்கம் 230)

> "எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது?"

அறிக்கை என்னும் வார்த்தைக்கு "அறிவிக்கப்பட்ட செய்தி" என்று பொருள். மார்ட்டின் லுத்தர் இதனை "எமது பிரசங்கித்தல்" என மொழியாக்கம் செய்துள்ளார். "எமது பிரசங்கித்தலை விசுவாசித்தவன் யார்?" இதற்கு இணையாய் இவ்வசனப் பகுதியிலுள்ள இனனொறு வாசகம், "கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது?" கர்த்தருடைய புயம் என்பது கர்த்தருடைய பெலத்தைக் குறிக்கிறது. எங்களது பிரசங்கித்தலை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது? கிறிஸ்துவின் இரட்சிக்கும் வல்லமை யாருக்கு வெளிப்பட்டது?

> "எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது?" (ஏசாயா 53:1).

முதலாவது சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுதலை விசுவாசிக்க வேண்டும். பின்னர் கிறிஸ்துவிலுள்ள தேவ வல்லமையால் மாற்றப்பட வேண்டுமென இந்த வசனம் காண்பிக்கிறது. ஆயினும் ஒரு சிலரே விசுவாசித்து மனமாற்றம் அடைவர் என தீர்க்கதரிசியின் கேள்வி வெளிப்படுத்தப்படுகிறது.

> "எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது?" (ஏசாயா 53:1).

## I. முதலாவதாக, கிறிஸ்துவானவர் பூமியில் ஊழியம் செய்த போது சிலர் விசுவாசித்து மனமாற்றமடைந்தனர்.

இயேசுவானவர் லாசரு வைக்கப்பட்ட கல்லறைக்கு வந்தார். அவன் மரித்து நான்கு நாட்கள் ஆகிவிட்டது. இயேசு அவர்களிடம், “கல்லை எடுத்துப் போடுங்கள்” என்றார் (யோவான் 11: 39). லாசருவின் சகோதரி அவரைத் தடுக்க விரும்பினாள். அவள் சொன்னாள், “ஆன்டவரே, இப்பொழுது நாறுமே, நாலு நாளாயிற்றே” (அதே வசனம்). ஆனாலும் அவர்கள் இயேசுவின் சொல் கேட்டு கல்லறையின் வாசலை மூடியிருந்த கல்லை அகற்றினார்கள். பின்பு இயேசுவானவர் “சத்தமாய்க் கூப்பிட்டார், லாசரு வெளியே வந்தான். பிரேதச் சீலைகளினால் கால்களிலும் கைகளிலும் கட்டபட்டிருந்த, முகம் சீலைகளினால் மூடப்பட்டிருந்த மரித்துப்போனவன் வெளியே வந்தான். இயேசு அவர்களிடம், இவனைக் கட்டவிழ்த்து விடுங்கள் என்றார்” (யோவான் 11: 43-44).

> “அப்போழுது பிரதான ஆசாரியரும் பரிசேயரும் ஆலோசனைச் சங்கத்தைக் கூடிவரச் செய்து, நாம் என்ன செய்கிறது, இந்த மனுஷன் அநேக அற்புதங்களைச் செய்கிறானே என்றனர்” (யோவான் 11:47).

அவர் நடப்பித்த பல அற்புதங்களை அவர்கள் கண்டனர். சாதாரன மக்கள் தங்களை விட்டுவிட்டு இயேசுவானவரை பின்பற்றிப் போவார்களே என அவர்கள் அஞ்சினர்.

> “அந்நாள் முதல் அவரைக் கொலை செய்யும்படிக்கு ஆலோசனை பண்ணினார்கள்” (யோவான் 11:53).

பிரதான ஆசாரியரும் பரிசேயரும் கூட்டங்களை நடத்தி இயேசுவைத் தொலைக்க எது சிறந்த வழி என ஆலோசித்தனர். அது “அவரைக் கொன்றுவிடுவதுதான்”. அப்போஸ்தலனாகிய யோவான் கூறுகிறார்:

> “அவர் இத்தனை அற்புதங்களை அவர்களுக்கு முன்பாகச் செய்திருந்தும், அவர்கள் அவரை விசுவாசிக்கவில்லை. *கர்த்தாவே, எங்கள் மூலமாய் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு*

> *வெளிப்பட்டது?* என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்ன வசனம் நிறைவேறும்படி இப்படி நடந்தது*"* (யோவான் 12:37-38).

இயேசுவானவர் 5000 பேருக்கு அற்புதமாக உணவளித்ததை அவர்கள் கண்டனர். அவர் தொழுநோயாளிகளைச் சுகமாக்கினதையும், குருடரைக் காணச் செய்ததையும் அவர்கள் கண்டனர். அவர் பிசாசுகளை துரத்தியதையும், திமிர்வாதக்காரரை ஆரோக்கிய நிலைக்கு கொண்டு வந்ததையும் அவர்கள் பார்த்தனர். ஒரு விதவையின் மரித்த மகனை அவர் உயிரோடு எழுப்பினார். தண்ணீரை திராட்சரசமாக அவர் மாற்றினதை அவர்கள் கண்டதுமல்லாமல் அவரது வார்த்தைகளை அவர்கள் கேட்டனர்.

> "இயேசு ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருக்கிற சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி அவர்களை சொஸ்தமாக்கினார்" (மத்தேயு 9:35).

என்றபோதிலும், அவர் லாசருவை உயிரோடு எழுப்பியபோது அவர்கள், "அவரைக் கொலை செய்யும்படிக்கு ஆலோசனை பண்ணினார்கள்" (யோவான் 11:53).

> "அவர் இத்தனை அற்புதங்களை அவர்களுக்கு முன்பாகச் செய்திருந்தும், அவர்கள் அவரை விசுவாசிக்கவில்லை. கர்த்தாவே, *எங்கள் மூலமாய் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது?* என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்ன வசனம் நிறைவேறும்படி இப்படி நடந்தது*"* (யோவான் 12:37-38).

ஆம், கிறிஸ்துவானவரின் உலக ஊழியத்தின்போது வெகு சிலரே அவரை விசுவாசித்து மனமாற்றமடைந்தனர்.

## II. இரண்டாவதாக, அப்போஸ்தலருடைய காலத்திலும் வெகு சிலரே விசுவாசித்து மனமாற்றமடைந்தனர்.

உங்களது வேதாகமத்தில் ரோமர் 10: 11-16ஐ எடுத்துக்கொள்ளுங்கள். நாம் எழுந்து நின்று இவ்வேத பகுதியை வாசிக்கலாம்.

> "அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது. யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை; எல்லாருக்குங் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரியசம்பன்னராயிருக்கிறார். ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான். அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக்குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே. ஆனாலும் சுவிசேஷத்துக்கு எல்லாரும் கீழ்படியவில்லை. அதைக்குறித்து ஏசாயா: கர்த்தாவே, *எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்?* என்று சொல்லுகிறான்" (ரோமர் 10:11-16).

இப்பொழுது நீங்கள் அமரலாம்.

இந்த வேதாகமப் பகுதியில் வசனம் 12ல் கூறப்படுவதைக் கவனியுங்கள்,

> "*யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை*; எல்லாருக்குங் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரியசம்பன்னராயிருக்கிறார்" (ரோமர் 10:12).

இதை அப்போஸ்தலனாகிய பவுல் இயேசுவானவர் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு எறத்தாழ 30 ஆண்டுகளுக்குப் பின்னர் எழுதினார். இவ்வாறாக, அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்தின் பிற்பட்ட பகுதியில் ரோமர் புஸ்தகத்தை எழுதினார். இயேசுவானவர் கிட்டத்தட்ட முற்றிலும் யூதருக்காக பேசியிருக்கையில் பவுல் யூதரோடும் புறஜாதியாரோடும் பேசுகிறார். பவுல் சொன்னார், "யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை". மாந்தர் யாவருக்கும் இயேசு தேவை!

என்றபோதிலும், தமக்கு முன்பிருந்த யூதரல்லாதவருக்கு இயேசுவானவர் கூறிய அதே காரியத்தை ஏசாயா 53: 1ஐ சுட்டிக்காட்டி, சிறிய அளவு புறஜாதியானவர் மட்டுமே விசுவாசிப்பார்களென வேதனைப்பட்டுக் கூறுகிறார். புறஜாதியாரில் பெரும்பாலானோர் யூதர்களைக் காட்டிலும் சற்று அதிகமாக சுவிசேஷத்துக்கு செவிமடுப்பர் என ஏசாயா 53: 1ல் தீர்க்கதரிசி சொன்னதை சுட்டிக்காட்டி பவுல் கூறுகிறார். ஏசாயாவின் புகார் செய்தலை பவுல் மேற்கோள் காட்டுகிறார்.

> "எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது?" (ஏசாயா 53:1).

யூதர்களைக் காட்டிலும் புறஜாதி மக்கள் சுவிசேஷத்திற்கு அதிக திறந்த மனதோடிருந்தனர். அவ்வாறிருந்தாலும், பவுல் மற்றும் மற்ற அப்போஸ்தலரின் காலத்தில் குறைந்த அளவு புறஜாதியினர் மட்டுமே இயேசுவில் நம்பிக்கை வைத்தனர். அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்தில் நாம் காண்கிறபடி, அப்போஸ்தலர்களின் காலத்தில் பல பெரிய எழுப்புதல்கள் நடைப்பெற்றன. ஆனாலும் இவ்வாறான எழுப்புதல்களின் மூலம் மிகச் சிறிய அளவு புறஜாதிகளே கிறிஸ்துவில் இரட்சிக்கப்பட்டனர். சுவிசேஷம் அறிவித்தல் என்பது ரோமர் மத்தியில் கூட கடினமானதாயிருந்தது!

கிறிஸ்துவும் அப்போஸ்தலர்களும் சில மனம் மாறியவர்களை மட்டுமே கண்டனர். இவ்வாறாக, கி.பி. முதல் நூற்றாண்டில் கிறிஸ்தவர்கள் சிறுபான்மையினரை, அதுவும் துன்பப்படுத்தப்பட்ட சிறுபான்மையினர்! ஆனபடியால், சுவிசேஷத்தை பெரும்பாலோர் ஏற்காததை விளக்க நமது வேதவசனப் பகுதியைக் குறிப்பிடுகின்றனர் யோவானும் பவுலும் - அதாவது, தாங்கள் பிரசங்கித்ததைக் கேட்ட பெரும்பான்மையினர் ஏன் மனமாற்றமடையவில்லை என்பதை இவ்வாறாக விளக்குகின்றனர்.

> "எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது?" (ஏசாயா 53:1).

கிறிஸ்தவ வரலாற்றில் காலம் காலமாக இவ்விதமாகத்தான் நடந்து வருகிறது. எப்போதுமே, எந்த இடத்திலும் ஒரு சிறிய அளவு மக்கள் மட்டுமே சுவிசேஷத்தில் நம்பிக்கை வைத்து உண்மையில் மனமாற்றம் அடைகின்றனர். இன்றைய உலகத்திலும் ஆது அவ்வாறாகவே உள்ளது. எதுவும் மாறவில்லை. இது நம்மை நமது இறுதிக் குறிப்பிற்கு கொண்டு வருகிறது.

## III. மூன்றாவதாக, மிகச் சிலரே இன்று விசுவாசித்து மனமாற்றம் அடைகின்றனர்.

வேதனையின் கேள்வியான ஏசாயாயின் புலம்பல் என்னும் உண்மை நிலையை நமது நாட்களில் நாம் இன்று சந்தித்து வருகிறோம்.

> "எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது?" (ஏசாயா 53:1).

சுவிசேஷப் பிரசங்கித்தலை நம்புவோர் இன்று குறைவானவர்களே, கிறிஸ்துவின் வல்லமையால் இரட்சிக்கப்படுவோர் இன்றும் வெகு சிலரே என்பது வருத்தமளிக்கிறது. நமது மிகவும் நெருங்கிய உறவினர்கள் கூட கிறிஸ்துவை நிராகரிக்கின்றனர். பிரசங்கத்தைக் கேட்க நாம் ஆலயத்துக்குக் கூட்டி வருவோரில் சிலர் மட்டுமே மனமாற்றமடைகின்றனர் என்பதை உங்களில் பலரும் அறிவீர்கள். இதைப் பற்றி மூன்று காரியங்களைக் குறிப்பிட நான் விரும்புகிறேன்:

(1) முதலாவது, பெரும்பாலான மக்கள் இரட்சிக்கப்படுவார்களென பரிசுத்த வேதாகமத்தில் எங்கு கூறப்பட்டுள்ளது? உண்மையைச் சொல்லப்போனால், இதற்கு எதிரானதை இயேசுவானவர் கூறியுள்ளார்,

> "இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும் வழி விசாலமுமாயிருக்கிறது; அதன் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமாயிருக்கிறது;*அதைக் கண்டுப்பிடிக்கிறவர்கள் சிலர்."* (மத்தேயு 7:13-14).

அதை கண்டுப்பிடிக்கிறவர்கள் *சிலரே*! நாம் நம்பினதைவிடக் குறைவான மனமாற்றங்கள் நமது ஊழியத்தில் வரும்போது இதை நமது மனதிற்கு கொண்டுவர வேண்டும்.

அடுத்ததாக நான் கூற விரும்புவது:

(2) எத்தனை பேர் இரட்சிக்கப்படுவார்கள் என்பதன் அடிப்படையில் நமது சுவிசேஷம் அறிவித்தலின் உந்துவிசை இருக்கக் கூடாது. கொஞ்சம் பேரோ, அதிகம் பேரோ, எத்தனை பேர் மனமாற்றம் அடைகின்றனர் என்பதன் மீது நமது கண்களை வைக்கக் கூடாது. நமது நோக்கம் *தேவனுக்குக் கீழ்ப்படிவதை* அடிப்படையாய்க் கொண்டது. சுவிசேஷம் அறிவிக்கச் செல்கையில் நமது கண்கள் *தேவன்* மீது பதிக்கப்பட்டிருக்க வேண்டும். நமது கீழ்ப்படிதல் *தேவன்*மீது பதிக்கப்பட்டிருக்க வேண்டும. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கையில் நமது கண்கள் *தேவன்* மீதும் நமது கீழ்ப்படிதல் *அவரிலும்* நிலைத்திருக்க வேண்டும்! கிறிஸ்துவானவர் கூறியிருக்கிறார்,

> "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற்கு 16:15).

ஜனங்கள் செவிமடுப்பார்களோ இல்லையோ, அவர்கள் இரட்சிக்கப்படுவார்களோ இல்லையோ, கிறிஸ்து சொன்னதை நாம் அப்படியே செய்ய வேண்டும். கிறிஸ்துவானவர் கட்டளையின்படி நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும்!*மனிதரின் மாறுத்தரம் நமது வெற்றியை நிர்ணயிப்பதில்லை!ஆனபடியால், ஜனங்கள்*

*<u>சுவிசேஷத்தை விசுவாசித்தாலும் விசுவாசியாவிட்டாலும் நாம் சுவிசேஷம் அறிவிப்பதை விடாமல் செய்ய வேண்டும்</u>!*

அப்புறம், இதிலிருந்து மூன்றாவது காரியம் வெளிவருகிறது,

(3) கிறிஸ்துவின் மீது *நீங்கள்* நம்பிக்கை வைத்திருக்கிறீர்களோ? கிறிஸ்துவுக்குள் *நீங்கள்* மனமாற்றம் அடைந்துள்ளீர்களா? விசுவாசத்தினால் கிறிஸ்துவண்டை *நீங்கள்* வருவீர்களா? உங்களது குடும்பத்திலுள்ள மற்ற யாவரும், உங்களது நண்பர்கள் அனைவரும் கிறிஸ்துவை ஒதுக்கினாலும் *நீங்கள்* கிறிஸ்துவைத் தேடுவீர்களா? *நீங்கள்* அவரன்டை வருவீர்களா? கிறிஸ்துவானவர் சொன்னதை மறக்க வேண்டாம்,

> "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16:16).

நீங்கள் இயேசுவிடம் வந்து, மனமாற்றமடைந்து ஞானஸ்நானம் பெற ஆயத்தமா? அல்லது இரட்சகரை நிராகரித்து நரகத்தின் நித்திய அக்கினியில் வெந்து அழியும் கணக்கற்றோரில் நீங்களும் ஒருவரா?

> "விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16:16).

*நீங்கள்* நரகத்தில் அழியும் திரள்கூட்டத்திலிராதபடி, இந்த உள்ளூர் சபையின் உறுப்பினராக மாற வேண்டுமென்பதே எனது ஜெபமாகும். உலகை விட்டு வெளியே வாருங்கள்! விசுவாசத்தினால் இயேசுவன்டை வாருங்கள்! இந்த உள்ளூர் சபைக்குள் வாருங்கள். இயேசுவானவரின் இரத்தம் மற்றும் நீதியினால் எல்லா காலத்திற்கும், நித்தியமாக இரட்சிக்கப்படுவீர்களாக!

> "எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது?" (ஏசாயா 53:1).

விசுவாசித்து மனமாற்றமடைவோரில் *நீங்களும்* ஒருவராயிருப்பீர்களாக! பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷத்தை நம்புகின்ற ஒரு சிலரில் *நீங்களும்* ஒருவராயிருப்பீர்களாக! "ஆம், இயேசு என் பாவத்திற்காக கிரயம் செலுத்திவிட்டார். ஆம், அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார். ஆம், விசுவாசத்தினால் நான் அவரண்டை வருகிறேன்." என நீங்கள் சொல்லலாம். தேவனுடைய புயம் வெளிப்படுத்தப்பட்டு, இயேசுவை நம்புவதன் அடிப்படையில் இரட்சிப்பை அனுபவிக்கும் ஒரு சிலரில் *நீங்களும்* காணப்படுவீர்களாக! "இதோ, உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவாட்டுக் குட்டி" (யோவான் 1: 29). இயேசுவானவரிடம் வந்து, அவரது விலையேறப்பெற்ற இரத்தத்தால் சுத்திகரிக்கப்படும் நபர்களில் ஒருவராக *நீங்கள்* காணப்படுவீர்களாக! எங்களது அறிக்கையை விசுவாசிக்கும் கிருபையைத் தேவன் உங்களுக்கு அருளி, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக இரட்சிப்பளிக்கும் பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்வீர்களாக! ஆமேன்!

அனைவரும் எழுந்து நின்று பாடல் தாளிலுள்ள 7வது பாடல், "நான் முன் வருகிறேன்" பாடுவோம்.

உமது அழைப்பின் சத்தம் கேட்கிறேன், அது என்னை உம்மண்டை கூப்பிடுகிறது
கல்வாரியில் புரண்டோடும் உம் திவ்ய இரத்தத்தில் கழுவிட.
நான் வருகிறேன், ஆண்டவரே! இப்போதே உம்மண்டை வருகிறேன்!
கல்வாரியில் புரண்டோடும் இரத்தத்தால் சுத்திகரியும், கழுவிடும்.

பாவத்தோடு பலவீனனாய் வந்தாலும், என்னைப் பலப்படுத்த உறுதியாயுள்ளீர்;
எனது குற்றநிலை யாவும் கழுவினீர்; கறையின்றி எல்லாம் தூய்மையாகின.
நான் வருகிறேன், ஆண்டவரே! இப்போதே உம்மண்டை வருகிறேன்!
கல்வாரியில் புரண்டோடும் இரத்தத்தால் சுத்திகரியும், கழுவிடும்.
("நான் முன் வருகிறேன்", லூயிஸ் ஹாட்சௌ, 1828-1919, என்பவறால் இயற்றப்பட்டது)

இயேசுவானவரால் உங்களது பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்பட நீங்கள் விரும்பினால் பின்புறமுள்ள அரங்கத்திற்கு இப்போதே வாருங்கள். பண்டிதர் கேகன் உங்களை ஒரு அமைதியான இடத்திற்கு அழைத்துச் சென்று, அங்கு சம்பாஷிப்பார். அர்ப்பணித்து முன் வந்த யாவருக்காகவும் பண்டிதர் ச்சான் ஜெபிப்பார்.

பிரசங்க குறிப்பு

# நிராகரிக்கப்பட்ட அறிக்கை

**(ஏசாயா 53ன் மீதான பிரசங்க எண் 2)**

Dr. R. L. ஹைமர்ஸ் ஜுனியர்அவர்களால்

"எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது?" (ஏசாயா53:1).

(ஏசாயா52:14, 13)

I. முதலாவதாக, கிறிஸ்துவானவர் பூமியில் ஊழியம் செய்த போது சிலர் விசுவாசித்து மனமாற்றமடைந்தனர், யோவான் 11:39, 43-44, 47, 53; 12:37-38; மத்தேயு 9:35.

II. இரண்டாவதாக, அப்போஸ்தலருடைய காலத்திலும் வெகு சிலரே விசுவாசித்து மனமாற்றமடைந்தனர், ரோமர் 10:11-16.

III. மூன்றாவதாக, மிகச் சிலரே இன்று விசுவாசித்து மனமாற்றம் அடைகின்றனர், மத்தேயு 7:13-14; மாற்கு 16:15, 16; யோவான் 1:29.

# கிறிஸ்து – திரள் கூட்டத்தாரால் புறக்கணிக்கப்படுதல்

**(செய்தி எண்: 3 ஏசாயா 53)**

# CHRIST – REJECTED BY THE MASSES

**(SERMON NUMBER 3 ON ISAIAH 53)**

டாக்டர் ஆர். எல். ஹைமெர்ஸ் ஜூனியர் அவர்களால்

by Dr. R. L. Hymers, Jr.

மார்ச்13, 2013அன்று கர்த்தருடைய நாள் காலை வேளையில் லாஸ் ஏஞ்சலஸில் உள்ள பாப்திஸ்து கூடாரத்தில் பிரசங்கிக்கப்பட்ட செய்தி.

A sermon preached at the Baptist Tabernacle of Los Angeles
Lord's Day Morning, March 13, 2013

> "எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது? இளங்கிளையைப் போலவும், வறண்ட நிலத்திலிருந்து துளிர்கிற வேரைப் போலவும் அவனுக்கு முன்பாக எழும்புகிறார்; அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை. அவரைப் பார்க்கும்போது நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது." (ஏசாயா 53:1-2).

ஏசாயா தேவனுடைய தாசனின் பாடுகளைப் பற்றிய செய்தியை வெகுசிலர் மட்டுமே விசுவாசிப்பர், வெகுசிலர் மட்டுமே அவருடைய கிருபையை அனுபவிப்பர். ஏசாயா 53:1ஐ யோவான் மேற்கோள் காட்டி, கிறிஸ்துவின் காலத்தில் அநேக யூதர்களின் அவிவிசுவாசத்தை விளக்குவதைக் காணலாம்.

> "அவர் இத்தனை அற்புதங்களை அவர்களுக்கு முன்பாக செய்திருந்தும், அவர்கள் அவரை விசுவாசிக்கவில்லை. *கர்த்தாவே, எங்கள் மூலமாய் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது?* என்று (ஏசாயா) தீர்க்கதரிசி சொன்ன வசனம் நிறைவேறும்படி இப்படி நடந்தது" (யோவான் 12:37-38).

அப்போஸ்தலனாகிய பவுலும் இயேசு பரமேறிப்போனதற்கும் 30 ஆண்டுகளுக்கு பின்னர் இந்த வசனத்தை மேற்கோள் காட்டியுள்ளார். யூதரைப்

பார்க்கிலும் அதிகமான அளவில் புறஜாதியார் கிறிஸ்து இயேசுவை ஏற்றுக் கொள்வார்கள் என்பதை விளக்குகிறார். பவுல் சொன்னார்.

> "யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை; எல்லாருக்கும் கர்த்தரானவர் தம்மை தொழுது கொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரிய சம்பண்ணராயிருக்கிறார். ஆனாலும் சுவிஷேசத்துக்கு எல்லாரும் கீழ்ப்படியவில்லை. அதைக் குறித்து (ஏசாயா) *கர்த்தாவேஎங்கள்மூலமாய்க்கேள்விப்பட்டதைவிசுவாசித்தவன்யார்?* என்று சொல்லுகிறான்." (ரோமர் 10:12,16).

கர்த்தராகிய இயேசுவும் இதையே நமக்குச் சொன்னார். இரட்சிக்கப்படும் விதத்தில் அவரை வெகுசிலரே விசுவாசிப்பார்கள் என்றார்,

> "ஜீவனுக்குப் போகிற வாசல் (இடுக்கமும்), வழி நெருக்கமுமாயிருக்கிறது; *அதைக் கண்டுபிடிப்பவர்கள் சிலர்.*" (மத்தேயு 7:14).

கிறிஸ்து இதே கருத்தை மறுபடியும் வலியுறுத்துகிறார்,

> "இருக்கமான வாசல் வழியாக உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள். *அநேகர் உட்பிரவேசிக்க வகைதேடினாலும் அவர்களாலே கூடாமற்போகும் என்று உங்களுக்கு சொல்லுகிறேன்.*"(லூக்கா 13:24).

அநேகமாக அனைவரும் பரலோகம் போவார்கள் என்று உலக மக்கள் நம்புகிறார்கள். ஆனால் இயேசுவோ அதற்கு நேர் எதிரான காரியத்தை சொன்னார்,

> "அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்." (மத்தேயு 7:14).
> "அநேகர் உட்பிரவேசிக்க வகைதேடினாலும் அவர்களாலே கூடாமற்போகும் என்று உங்களுக்கு சொல்லுகிறேன்." (லூக்கா 13:24).

அந்தக் கடினமான சத்தியம் ஏசாயாவின் புலம்பலில் எதிரொலிக்கிறது,

> "எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது?"(ஏசாயா 53:1).

அது ஏன் அப்படி இருக்கிறது என்று நாம் கேட்கக்கூடும் யூதர்கள் பலம் பொருந்திய பெரிய ராஜாவை மகிமையும், ஐசுவரியமும் நிறைந்தவரை எதிர்நோக்க இருந்தனர். எனவே, பொதுவாக மனிதவர்க்கம் கிறிஸ்து ஒரு பாடு சகிக்கும் தாசனாக வந்து, அவர்கள் பாவங்களுக்கு கிரயம் செலுத்தும் விதத்தில் மரிப்பார் என எதிர்பார்க்கவில்லை.

அப்போஸ்தலர் 8ஆம் அதிகாரத்தில் எத்தியோப்பிய மந்திரி கூட யூத ஆசாரியர் மற்றும் பரிசேயரைப் போல இந்த உண்மைகளை காணமுடியாதவனாய் இருந்தான். அவன் ரதம் போய்க்கொண்டிருக்கையில் ஏசாயா 53 அதிகாரம் வாசித்து செல்ல பிலிப்பு என்னும் சுவிஷேசகன் அவனை சந்திக்கிறான்.

> “பிலிப்பு ஓடிப்போய்ச் சேர்ந்து (ஏசாயா) தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசிக்கிறதைக் கேட்டு: நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா? என்றான்... அது எனக்கு எப்படித் தெரியும்” (அப்போஸ்தலர் 8:30-31).

இந்த ஆப்பிரிக்கன் யூத மதத்திற்கு மாறியிருந்தவன். அவன் வெளிப்படையாகவே பழைய ஏற்பாட்டு வேதத்தை அறிந்தவன், ஆனாலும் யூத அறிஞர்களைப் போலவே இந்த வசனத்தை தெளிவாய் அறிய முடியாத குருடனாய் இருந்தான்.

இந்த வசனப்பகுதியை வாசிக்கும் எந்த நபரும், மேசியா வரும் போது, பணம் படைத்தவராக, பிரபலமானவராக, மனித மகிமை மேன்மையால் சூழ்ந்திருந்தவராக *வராமல்*, அவர் “துக்கம் நிறைந்தவராகவும் பாடு சகிக்கிறவராகவும்,” மேலும் “மனிதரால் புறந்தள்ளப்பட்டவராகவும்” வந்தார். எனினும், இந்த சத்தியம் வேதாகமத்தில் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது,

> “அவர் தமக்குச் சொந்தமானவைகளிடத்தில் (யூத ஜனங்கள்) வந்தார், அவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.” (யோவான் 1:11).

அவரைக் குறித்து வெளிப்படையாய் வேதாகம தீர்க்கதரிசனத்தில் சொல்லியிருந்தும் இஸ்ரவேல் தேசத்தார் முழுமையாக, இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொள்ளவில்லை. நமது தீர்க்கதரிசி நமக்குக் காண்பிக்கிறார்,

> “இளங்கிளையைப் போலவும், வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப் போலவும் அவனுக்கு முன்பாக எழும்புகிறார்; அவருக்கு அழகுமில்லை (அழகு, ***வல்லமை***) சௌந்தரியமில்லை (மேன்மை, ***வல்லமை***) நாம் அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது.” (ஏசாயா 53:2).

ஆதலால், யூதர்கள் அவரை வெறுத்ததை கடுமையாக நியாயத்தீர்க்கக்கூடாது, ஏனெனில் புறஜாதியாரும் அநேக பகுதிகளில் அவரை வெறுத்தனர். ஸ்பர்ஜன் சொன்னார்,

> யூதருக்கு மெய்யாய் காணப்படுவது புறஜாதியாருக்கும் அவ்வண்ணமே காணப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் சுவிஷேசம் இவ்வுலகத்தில் மிக எளிய ஒன்று, எனினும் எந்த மனிதனும் (தேவனால்) போதிப்படையும் வரை அதை புரிந்து கொள்வதில்லை... ஆவிக்குரியவைகளை புரிந்து கொள்ளும் புத்திக் கூர்மையை பாவம் மழுங்கடித்துவிட்டது... அது உன் வாழ்வில் எப்படி இருக்கிறது? நீயும் குருடனாய் இருக்கிறாயா? நீங்களும் குருடரா? நீங்கள் அப்படியிருந்தால், இயேசுவுக்கடுத்த விசுவாசம் குறித்து அவர் (தேவன்) உங்களுக்குப் போதிப்பாராக: (C.H. Spurgeon, "A Root out of Dry Ground"***The Metropolit Tabernacle Pulpit***, Pilgrim Publications, 1971 reprint, volume XVIII, pages 565-566).

இப்பொழுது, நமது வேதபகுதி வசனம் 2ல், இயேசு ஏன் புறக்கணிக்கப்பட்டார் எனும் மூன்று காரணங்களை நாம் காணப் போகிறோம். இரண்டாம் வசனத்தை சத்தமாய் வாசியுங்கள்,

> "இளங்கிளையைப் போலவும், வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப் போலவும் அவனுக்கு முன்பாக எழும்புகிறார்; அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை; அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது." (ஏசாயா 53:2).

## I. முதலாவதாக, கிறிஸ்து வெறுக்கப்பட காரணம், அவர் மனிதன் முன்பாக இளங்கிளையைப் போலத் தோன்றுகிறார்.

இந்த உண்மையின் காரணமாக வெகு சிலரே விசுவாசிக்கின்றனர்.

> "அவர் அவனுக்கு முன்பாக இளங்கிளையைப் போல எழும்புகிறார்…"(ஏசாயா 53:2)

அல்லது, டாக்டர். கில் சொன்னதுபோல, "ஒரு இளங்கிளையைப் போல, அந்த வார்த்தையின் படியே, ஒரு மரத்தின் வேரில் இருந்து வளரும்… ஒன்றைக் குறித்து கவனிப்பாரில்லை, அதிலிருந்து எவ்வித நம்பிக்கையும் இல்லை; மேலும்

அந்த (வாசகத்தின்) உருவகம் (தாழ்வான) மற்றும் கிறிஸ்துவின் எதிர்பார்ப்பு மிகுந்து இராத தோற்றம் (அவரது பிறப்பில்) வெளிப்பட்டது, ஆகவே யூதர்கள் அவரை விசுவாசியாமல், புறக்கணித்து அவரை அவமதித்தனர்" (John Gill, D.D., ***An Exposition of the Old Testament***, The Baptist Standard Bearer, 1989 reprint, volume I, pp. 310-311).

> "அவர் அவனுக்கு முன்பாக இளங்கிளையைப் போல எழும்புகிறார்…" (ஏசாயா 53:2).

இதன் அர்த்தம் என்னவெனில், கிறிஸ்து பிதாவாகிய தேவனுக்கு "முன்பாக" பிறந்து வளர்ந்து பிதாவால் காணப்பட்டு பெலப்படுத்தப்பட்டார். ஆனால், Dr. யங் சொல்வது போல், "மனிதனுக்கு முன்பாகவோ தாசர் (இயேசு) இளங்கிளைப் போல் காணப்பட்டார்… மனிதர்கள் இளங்கிளைகளை வெட்டி எரிவர், ஏனெனில் அது மரத்தில் இருந்து உயிர்சத்து பெற்று வாழ்ந்து கொண்டிருந்தது, மேலும் மனிதனின் பார்வையில் வெட்டி எரிய வேண்டியதாய் இருந்தது" (Edward J. Young, Ph.D., ***The Book of Isaiah***, William B. Eerdmars Publishing Company, 1972, volume 3, pp. 341-342).

இதே காரணத்தால் அல்லவா பிரதான ஆசாரியரும், பரிசேயரும் இயேசுவை ஒழிக்க விரும்பினர்? அவர்கள் சொன்னவை,

> "நாம் இவனை இப்படி விட்டுவிட்டால் எல்லாரும் இவனை விசுவாசிப்பார்கள்; அப்பொழுது ரோமர் வந்து நம்முடைய ஸ்தானத்தையும் ஜனத்தையும் அழித்துப் போடுவார்கள்" (யோவான் 11:48).

"மனிதர்கள் இளங்கிளைகளை வெட்டி எரிவர், ஏனெனில் அவை மரத்தின் சாரத்திலிருந்து உயிர் வாழ்கின்றதால் மனிதரின் பார்வையில் களைந்து வீசப்பட வேண்டியவை" (Young, ibid.). இயேசுவை விசுவாசித்தால், யூதர் நாங்கள் அடையாளத்தை இழந்துவிடுவோம் என அஞ்சினார். "இளங்கிளையைப்" போல, அவர்களின் ஐயம், இயேசு அவர்களது தேசம் என்னும் "மரத்தின் சாரத்தை உறிஞ்சிவிடுவார்,"என பயந்தனர்.

*அதே* காரணத்திற்காக அல்லவா நீங்களும் அவரை வெறுக்கிறீர்கள்? அதைக் குறித்து ஆழமாய் சிந்தியுங்கள்! உங்கள் வாழ்விலும் உண்மையல்லவா – உங்களுக்கு முக்கியமாய் இருக்கும் சிலதை *இழந்துவிடுவோம்* என்னும் பயம் – அவரிடத்தில் வந்து அவரை விசுவாசித்தால் நடக்கும் என நினைக்கிறீர்களல்லவா?

இதுபோலவே, “மரத்தின் சாரத்தை உறிஞ்சி விடுவது போல்” கிறிஸ்து உங்களில் வந்தால், மிக முக்கியமான என்று சிலவற்றை உறிஞ்சிவிடுவார் என்று பயப்படுகிறீர்கள் என்பது உண்மை அல்லவா?

'காயப்பட்டு' என்கிற வார்த்தை முக்கியமானது. *எபிரேய மொழியில்* இச்சொல்லின் அர்த்தம் *உருவக் குத்துவது* என பண்டிதர் யெங் கூறுகிறார். அதாவது, மரணமடையும்படி உருவக்குத்துவது என்னும் கருத்தை இவ்வார்த்தை கொடுக்கிறது. எபிரேய மொழியில் இவ்வார்த்தை உருவக்குத்துதல் அல்லது துளைத்துச் செல்லுதல் எனப் பொருள்படுகிறது. சகரியா 12:10லும் இவ்வார்த்தை வருகிறது,

> 'அப்பொழுது அவர்கள் தாங்கள் *குத்தின* என்னை நோக்கிப் பார்த்து'"(சகரியா 12:10).

இது கிறிஸ்துவைக் குறித்த ஐயத்துக்கிடமற்ற ஒரு தீர்க்கதரிசனம். முட்களால் வேயப்பட்ட கிரீடத்தால் அவரது மண்டை ஓடு துளைக்கப்பட்டது. அவரது கைகளும் கால்களும் சிலுவையில் ஆணிகளால் அடிக்கப்பட்டன. ரோம ஈட்டி அவரது விலாவில் குத்தப்பட்டது. அப்போஸ்தலனாகிய யோவான் கூறுகிறார்,

> 'ஆகிலும் போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவிலே *குத்தினான்*, உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது… வேதவாக்கியம் நிறைவேறும்படி இவைகள் நடந்தது. ஆல்லாமலும் தாங்கள் *குத்தினவரை* நோக்கிப் பார்பார்கள் என்று வேதவாக்கியம் சொல்லுகிறது' (யோவான் 19:34,36,37).

பின்பு, நமது வேத பகுதி கூறுகிறது, 'நமது அக்கிரமங்களுக்காக அவர் நொறுக்கப்பட்டார்' (ஏசாயா 53:5). நொறுக்கப்படுதல் என்பதற்கான எபிரெய வார்த்தை கசக்கிப் பிழியப்படுதல் எனவும் பொருள்படும். சிலுவையிலறையப்படுவதற்கு முந்தின இரவில் கெத்செமனே தோட்டத்தில் கிறிஸ்துவின் கசக்கிப் பிழியப்படுதலும் நொறுக்கப்படுதலும் ஆரம்பமாயின.

> ''அவர் மிகவும் வியாகுலப்பட்டார்... அவருடைய வேர்வை இரத்ததின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது' (லூக்கா 22:44).

கெத்செமனே தோட்டத்தில்அவர் மீது சுமத்தப்பட்ட நமது பாவத்தின் பாரத்தால் கிறிஸ்துவானவர் அழுத்தி நசுக்கப்பட்டார்.

சில மணி நேரத்திற்குப் பின், சிலுவையிலறையப்படுவதற்கு முன்பாக அடிபட்டு, கசையடிபட்ட கிறிஸ்துவானவர் சிதையுண்டு நசுக்கப்பட்டார். பின் விலாவில் ஈட்டியால் குத்தினார்கள். ஆயினும் அவர் நொறுக்கப்பட்டார் என்பதற்கான ஆழமான அர்த்தமென்னவெனில் அவர் மீது சுமத்தப்பட்ட நமது பாவச் சுமைகளின் அழுத்தமே. அப்போஸ்தலனாகிய பேதுருவும்,

> "அவர் தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்" (I பேதுரு 2:24).

> "*நம்முடைய மீறுதல்களினிமித்தம்* அவர் காயப்பட்டு, *நம்முடைய அக்கிரமங்களினிமித்தம்* அவர் நொறுக்கப்பட்டார்" (ஏசாயா 53:5).

தாம் எழுதிய பிரபலமான பாடல் மூலம்இதை பண்டிதர் ஐசக் வாட்ஸ் தெளிவுபடுத்துகிறார்,

> நான் செய்த பாதகச் செயலுக்காக அல்லவோ
> அவர் சிலுவை மரத்தில் வேதனையுடன் முணங்கினார்?
> வியக்கவைக்கும் இரக்க உணர்வு! இதுவரை அறிந்திராத கிருபை!
> எல்லை கடந்த அன்பின் பெருக்கு!
> சூரியன் இருளுக்குள் மறைந்து
> தனது மகிமைகளை மூடிக் கொண்டதோ,
> *வல்லமைமிக்க சிருஷ்டிகர், கிறிஸ்துவானவர்*
> *சிருஷ்டிப்பான மனிதனின் பாவத்திற்காய் மரித்தபோது.*

## II. இரண்டாவதாக, நமது ஸ்தானத்தில் கிறிஸ்து ஆக்கினை அடைந்தார்.

நமது வசனப் பகுதியிள்ள மூன்றாவது துணை வாசகத்தை கவனியுங்கள்,

> 'நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; *நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது...'* (ஏசாயா 53:5).

இந்த வசனத்தின் கருத்தை உணராமல் பல ஆண்டுகளாக இதை நான் வாசித்திருக்கிறேன். பண்டிதர் டெலிட்ஸ்ச் இதை, 'நமது சமாதானத்துக்கு நம்மை நடத்திடும் ஆக்கினை' என மொழியாக்கம் செய்துள்ளார் (C.F. கெய்ல் மற்றும் F டெலிட்ஸ்ச்,**பழைய ஏற்பாட்டு விளக்கவுரை**, எர்டுமென்ஸ் வெளியீட்டு நிறுவனம், 1973 மறுபதிப்பு, பகுதி VII, பக்கம் 319). 'நமது சமாதானம்... நமது பொதுவான ஆரோக்கிய நிலை, நமது ஆசீர்வதிக்கப்பட்ட நிலை இவைகளைத்தான் இந்த பாடுகள் பெற்றுத்தந்தன'. ஆக்கினை என்பது தண்டனையாகும். பண்டிதர் யெங் சொன்னார், 'சினந்தணிவிப்பு என்னும் நோக்கத்திற்காக கிறிஸ்துவின் மீது ஆக்கினை விழுந்ததென ஒருவர் உறுதிபடக் கூறுவாரென்றால் அவர் இவ்வசனப் பகுதியை சரியாக படிக்கவில்லை' (யெங், அதே புத்தகப் பகுதி, பக்கம் 349). பாவத்திற்கு எதிரான தேவ கோபத்தை தணிக்கின்ற சரிக்கட்டுகின்ற தேவனுடைய

நீதி கிறிஸ்துவின் மேல் விழுந்தது. நவீன கால விளக்கவுரையாளர்கள் செல்ல அஞ்சுகின்ற தூரம் வரை செல்லும் பண்டிதர் ஜான் கில் சரியாக கூறுகிறார்,

> நமது சமாதானத்திற்கேதுவான ஆக்கினை அவர் மீது சுமத்தப்பட்டது. அதாவது, நமது பாவங்களுக்கான தண்டனையை அவர் ஏற்றுக் கொண்டார். இவ்வாறாக நமது சமாதானமும் தேவனோடு ஒப்புரவாகுதலும் அவரால் செய்யப்பட்டன… இவ்வாறாக தேவ கோபாக்கினை ஈடுகட்டப்பட்டது, சமாதானம் ஏற்படுத்தப்பட்டது (ஜான் கில் D.D.,**பழைய ஏற்பாட்டிற்கான ஒரு விளக்கவுரை,** பாப்டிஸ்ட் கொடி பிடிப்போன், 1989 மறுபதிப்பு பாகம் I, பக்கம் 312).

கிறிஸ்து தேவ கோபாக்கினையை தணித்ததைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் எழுதும்போது,

> ‘கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார்' (ரோமர் 3: 24-26).

இந்தப் பிரசங்கதிற்கு முன் திரு க்ரிஃபித் பாடிய பாடலில், பவுல் எதைக் குறிப்பிடுகிறாரென ஆல்பர்ட் மிட்லேன் விளக்குகிறார்:

> அவர் சுமந்த கோபாக்கினையை நாவால் இயம்ப இயலாது
> அக்கோபாக்கினை எனக்குத்தான்
> பாவம் கைவிடப்பட்டது, அவர் அனைத்தையும் சுமந்தார்
> பாவியை விடுதலை செய்யும்படி.
>
> ஒரு துளிகூட இப்போது மிச்சமாயில்லை
> 'எல்லாம் முடிந்தது' அவரின் முழக்கம்
> ஒருவரின் பலனுள்ள வறட்சி
> கோபாக்கினை கிண்ணத்தை அவர் வறண்டிடச் செய்தார்.
> ('கோபாக்கினையின் கிண்ணம்' ஆல்பர்ட் மில்லேன், 1825-1909).

உங்களது பாவத்திற்கெதிரான தேவக்கோபாக்கினை என்னும் தெய்வீக சரிக்கட்டுதலை உண்டு பண்ணும்பொருட்டு உங்களது ஸ்தானத்தில் கிறிஸ்துவானவர் நொறுக்கப்பட்டு தண்டனை அனுபவித்தார்.

> 'நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது' (ஏசாயா 53:5).

## III. மூன்றாவதாக, தமது தழும்புகளின் மூலம் கிறிஸ்து நமது பாவத்தை குணமாக்குகிறார்.

நமது வேத பகுதியை எழுந்து நின்று சத்தமாய் வாசியுங்கள், அதன் கடைசிப் பகுதியைக் கவனியுங்கள் 'அவரது தழும்புகளால் குணமாகிறோம்.'

> "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது; *அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்*" (ஏசாயா 53:5).

இப்போது நீங்கள் அமரலாம்.

'அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்'. எபிரெய மொழியில் தழும்புகள் என்பது காயங்கள் எனப் பொருள்படுகிறது (**ஸ்ட்ராங்**). I பேதுரு 2:24ல் பேதுரு இவ்வசனத்தைக் குறிப்பிடுகிறார். இங்கு பேதுருவின் வார்த்தை கிரேக்க மொழியில் 'தழும்புகள்' என மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. அதாவது காயத்தினால் ஏற்பட்ட வடுக்கள் (**ஸ்ட்ராங்**). ஏசாயா 53:5லும் I பேதுரு 2:24லிலும் 'அவரது தழும்புகளால் நாம் குணமாகிறோம்' என வருவது சவுக்கடிகளால் இயேசுவை அடித்ததைக் குறிப்பதாக நான் திட்டமாக நம்புகிறேன். சிலுவையில் கிறிஸ்து அறையப்படுவதற்கு சற்று முன்பாக, யூதேயாவின் ரோம அதிபதியான பிலாத்துவின் கட்டளைப்படி கிறிஸ்துவானவர் போர்சேவகரால் சவுக்கடிபட்டதையே இவ்வசனம் குறிக்கிறது,

> 'பிலாத்து இயேசுவை பிடித்து *வாரினால்அடிப்பித்தான்*' (யோவான் 19:1).

> 'அப்பொழுது, அவன் பரபாசை அவர்களுக்கு விடுதலையாக்கி, இயேசுவையோ *வாரினால்அடிப்பித்து*, சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக்கொடுத்தான்' 7(மத்தேயு 27:26).

'வாரினால் அடித்தல்' என்பதை விளக்கும் W E வைன், அது கிறிஸ்துவால் பொறுமையாய் சகித்துக் கொள்ளப்பட்டதும் பிலாத்துவின் கட்டளையின்படி நிறைவேற்றப்பட்டதையும் தெரிவிக்கிறது என்கிறார். ரோம சவுக்கடி முறைமையின்படி, ஒருவர் நிர்வாணமாக்கப்பட்டு, குனிந்த நிலையில் ஒரு தூணில் கட்டி வைக்கப்படுவார். அந்த சவுக்கானது தோல் வார்களால் செய்யபட்டு, அவற்றின் முனைகளில் கூரான எலும்பு அல்லது ஈயத்துண்டுகள் வைக்கப்பட்டிருக்கும். அவை முதுகிலும், மார்பிலும் சதையை கிழித்துவிடும். இவ்வாறான தண்டனை முறையினால் மரணமடைந்த இரத்த சாட்சிகளைத் தான் பார்த்ததாக யூஸேபியஸ் (நாளாகமம்) பதிவு செய்திருக்கிறார் (W E வைன், **புதிய ஏற்பாட்டு வார்த்தைகளின் விளக்க அகராதி**, ஃப்ளெமிங் H ரெவெல் கம்பெனி, 1966 மறுபதிப்பு, பகுதி III, பக்கம் 327, 328).வரப்போகிற தமது பாடுகளைக் குறித்து தீர்க்கதரிசனமுறைத்த இயேசுவும் 'வாரினால் அடிக்கப்படுதலை குறித்து பேசுகிறார்,

> 'இதோ, எருசலேமுக்கு போகிறோம்; மனுஷகுமாரன் பிரதான ஆசாரியரிடத்திலும் வேதப்பாரகரிடத்திலும் ஒப்புக்கொடுக்கப்படுவார்; அவர்கள் அவரை மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, அவரை பரியாசம் பண்ணவும், *வாரினால் அடிக்கவும்*, சிலுவையில் அறையவும், புறஜாதியாரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பார்கள்' (மத்தேயு 20:18,19).

கிறிஸ்துவானவர் வாரினால் அடிக்கப்பட்டதை ஸ்பர்ஜன் இவ்வாறு விளக்குகிறார்:

> அமைதியாக நின்று, இயேசுவானவர் ஒரு ரோம தூணில் கட்டப்பட்டு வாரினால் அடிக்கப்பட்டுவதைக் காணுங்கள். சவுக்கின் பயங்கரமான அடிகள் குருதி வழியும் காயங்களை ஏற்படுத்துகின்றனர். அவரது ஆசீர்வதிக்கப்பட்ட சரீரத்தோடு அவர் எவ்வாறாக ஒரு வேதனையின் பிண்டமாக மாறுவதை கவனித்துப் பாருங்கள். பின்னர் அவரது ஆவியும் எவ்வாறு நொறுக்கப்பட்டது என்பதைக் கவனியுங்கள். கொடூரச்செயலால் தாங்க முடியாத அளவுக்கு அவரது உள்ளான இருதயம் காயமடையும் வரை அவருடைய

> ஆவியில் விழுந்த சவுக்கடிகள்தான் எத்தனை! இவை யாவற்றையும் நமக்காக அவர் சகித்துக்கொண்டார்... மனதில் சற்றும் அலைப்பாயாமல் இந்த புனிதமான கருத்தைத் தியானியுங்கள். தேவனுக்கு நன்றி தெறிவிக்கும் அன்பால் நமது சொந்த இருதயங்கள் நமக்குள்ளாக உருகும்வரை நானும் நாமும் இக்கருத்தை சேர்ந்து யோசிக்குமாறு நான் ஜெபிக்கின்றேன் (C H ஸ்பர்ஜன், 'கிறிஸ்தியம்' **மாநகர ஆசரிப்புக் கூடார பலிபீடம்**, யாத்ரீகன் வெளியீடுகள், 1976 மறுபதிப்பு, பாகம் XLIII, பக்கம் 13).

நமது பாவங்களுக்காக கிறிஸ்துவானவர் கசையடிகளையும் சிலுவைப் பாடுகளையும் அனுபவித்தாரென திரும்பவும் ஸ்பர்ஜன் கூறுகிறார். உனக்காகவும் எனக்காகவும் இயேசு கசையடிபட்டு சிலுவையில் அறையப்பட்டு தழும்புகளை அடைந்தார். ஸ்பர்ஜன் கூறுகிறார்:

> அவரது துக்கங்களில் நிச்சயமாகவே நமக்கு ஒரு பங்கு உண்டு, 'அவரது தழும்புகளால் குணமாகிறோம்' என்பதை நாம் நிச்சயப்படுத்திக்கொள்வோமா? நீங்கள் அவரை அடித்தீர்கள். அன்பு நன்பரே, நீங்கள் அவரைக் காயப்படுத்தினீர்கள். ஆகையால், 'அவரது தழும்புகளால் நாம் குணமாகிறேன்' என சொல்லக் கூடும் வரை இளைப்பாற வேண்டும். *அவரது தழும்புகளால் நாம் குணமடைய வேண்டுமானால் பாடுபட்ட இயேசுவைக் குறித்த ஒரு தனிப்பட்ட உறவு நமக்கு வேண்டும்*. இந்த மாபெரும் தியாக பலியின் மீது நமது கரங்களை வைத்து அது நமக்காக நடந்து முடிந்துவிட்டது என நம்பி ஏற்றுக்கொள்ள வேண்டும். கிறிஸ்து அடிக்கப்பட்டாடிரன அறிந்தும் 'அவரது தழும்புகளால் நாம் குணமாகிறோம்' என அறியாமலிருப்பது பரிதாபமானது! பாவம் ஒரு வியாதி என தேவன் கருதவில்லையென்றால், சுகமாக்கப்படுதலைப் பற்றய பேச்சுக்கே இடமில்லை (பக்கம் 14). 'அவரது தழும்புகளால் குணமாகிறோம்' இது ஒரு தற்காலிகமான நிவாரணமன்று. உங்களது ஆத்துமாவை முழுமையாகக் குணமாக்கும் ஆரோக்கிய நிலையைக் கொண்டுவரும் மருந்தாகும் இது. ஆகவே இறுதியில் பரலோகத்திலுள்ள

> சிங்காசனம் முன்பாக பரிசுத்தர் கூட்டம் நடுவில் மனிதன் நின்று பலரோடும் இணைந்து, 'அவரது தழும்புகளால் நாம் குணமாகிறோம்' என பாடுவான். இரத்தம் சிந்தும் கிறிஸ்துவுக்கே மகிமை! எல்லா புகழும் மாட்சிமையும் ஆட்சியும் துதியும் அவருக்கே எப்போதும் உண்டாவதாக. பாவ வியாதியிலிருந்து விடுப்பட்ட யாவரும், 'ஆமேன், ஆமேன்' என்று சொல்வார்களாக! (பக்கம் 21).

.

> 'நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்' (ஏசாயா 53:5).

வெறுமனே இவ்விஷயங்களை அறிந்திருப்பது உங்களை இரட்சிக்காது! *நமது வேதபாடப் பகுதியில் வலியுறுத்தப்படும் கிறிஸ்துவின் பாடுகளைக் குறித்த உண்மைகள் உங்கள் உள்ளத்தை பற்றிப் பிடிக்கவில்லையென்றால் நீங்கள் மனமாற்றம் அடைய முடியாது!* இவ்வேத வசனங்கள் உங்கள் உள்ளத்தைப் பற்றிக் கொள்வதாக. இவ்வசனங்கள் உங்கள் ஆத்துமா கிறிஸ்துவை வாஞ்சிப்பதை உறுதிப்படுத்தட்டும்.

> 'நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்' (ஏசாயா 53:5).

இவ்வசனங்கள்நீங்கள்கிறஸ்துவைநம்புவதைஉறுதிசெய்வதாக, ஒவ்வொருபாவத்திலுமிருந்துசுகமானநீங்கள், 'அவரதுதழும்புகளால்ஒவ்வொருபாவத்தின்வாதிப்பிலிருந்தும்நான்இப்போதும்எப் போதும்சுகமாக்கப்பட்டுவிட்டேன்.' என்றுகூறுங்கள்.ஆமென்.

பிரசங்க குறிப்பு

# காயப்பட்டு, நொறுக்கப்பட்டு, அடிக்கப்பட்டஇயேசு

**(ஏசாயா53ல்பிரசங்கம்எண்6)**

Dr. R. L. ஹைமர்ஸ், Jr.

'நம்முடையமீறுதல்களினிமித்தம்அவர்காயப்பட்டு,
நம்முடையஅக்கிரமங்களினிமித்தம்அவர்நொறுக்கப்பட்
டார்;நமக்குச்சமாதானத்தைஉண்டுபண்ணும்ஆக்கினை
அவர்மேல்வந்தது;
அவருடையதழும்புகளால்குணமாகிறோம்' (ஏசாயா 53:5)

(ரோமர் 1:21, 28)

I. முதலாவதாக,
கிறிஸ்துவானவர்நம்முடையமீறுதல்களினிமித்தம்காயப்பட்டு, நம்முடையஅக்கிரமங்களினிமித்தம்நொறுக்கப்பட்டார்,ஏசாயா 53:5a; சகரியா 12:10; யோவான் 19:34, 36, 37; லூக்கா 22:44; I பேதுரு 2:24.

II. இரண்டாவதாக,
நமதுஸ்தானத்தில்கிறிஸ்துஆக்கினைஅடைந்தார்,ஏசாயா 53:5b; ரோமர் 3:24-25.

III. மூன்றாவதாக,
தமதுதழும்புகளின்மூலம்கிறிஸ்துநமதுபாவத்தைகுணமாக்குகிறார், ஏசாயா 53:5c; யோவான் 19:1; மத்தேயு 27:26; 20:18-19.

# அண்டத்தின் பாவம், குறிப்பிட்ட பாவம் மற்றும் பாவத்திற்கான குணமடைவு

(பிரசங்க எண் 7 ஏசாயா 53ன் மீதானது)

# UNIVERSAL SIN, PARTICULAR SIN, AND THE CURE FOR SIN

(SERMON NUMBER 7 ON ISAIAH 53)

Dr. R. L. ஹைமர்ஸ், Jr.

பாப்டிஸ்ட்டேபர்னேக்கல், லாஸ்ஏஞ்சலஸில்பிரசங்கிக்கப்பட்டஒருசெய்தி
கர்த்தருடையநாள்காலை, மார்ச் 24, 2013
A sermon preached at the Baptist Tabernacle of Los Angeles
Lord's Day Morning, March 24, 2013

> "நாமெல்லாரும் ஆடுகளைப்போல் வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்" (ஏசாயா53:6).

தென்னக பாப்திஸ்து குழுமத்தின் அறநெறி மற்றும் சமய விடுதலையுரிமைக் குழுவின் தலைவராக பண்டிதர் ரிச்சர்டு லேண்ட் உள்ளார். கிறிஸ்தவத்தின் அடிப்படைத் தகவுகளைக் குறித்து வியத்தகு விதத்தில் அறிவற்ற ஒரு கலாச்சாரத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோமென பண்டிதர் லேண்ட் அறிந்திருக்கிறார். அவர் சொன்னார்:

> அமெரிக்காவில் சமயப் பற்று இல்லாதிருப்பதைக் குறித்து டைம் பத்திரிக்கையில் ஒரு செய்திக் கட்டுரையை வாசித்தேன். ஒரு ஆலய ஆராதனையில் கலந்து கொண்ட ஒரு தம்பதியர் போதகரைப் பார்க்க வந்தனர். அவர்கள் சொன்னார்கள், "கூட்டல் அடையாளத்தில் தொங்கிக்கொண்டிருக்கிற அந்த மனிதர் யாரென எங்களது விடலைப் பருவ மகன் தெரிந்துக்கொள்ள

> விரும்புகிறான்."அவர் இயேசு என்றோ, அது சிலுவையென்றோ அப்பெற்றோருக்குக் தெரியவில்லை. ("கூட்டல் அடையாளத்தில் ஒரு மனிதர்," ***உலகம்பத்திரிக்கை***, ஆகஸ்டு 1, 2009, பக்கம் 24).

இயேசு யார் என்பதைப் பற்றியோ அவர் என்ன செய்தார் என்பதைப் பற்றியோ பல மாந்தர் மிகவும் சொர்ப அறிவுள்ளவர்களாயிருப்பது திகைப்பைத் தருகிறது. தவறு எங்கிருக்கிறதென்றால், நமது சபைகளில் பெரும்பாலானவற்றில் கிறிஸ்துவானவரைப் பற்றி மிகவும் குறைவாகவே பிரசங்கிக்கப்படுகிறது. ஆனால் பாவிகளுக்காக அவர் சிலுவையில் மரித்தார்என்ற உன்மையைக் கேட்காமல் எந்த ஒரு ஞாயிரு ஆராதனையிலும் நீங்கள் கலந்துகொள்ள முடியாது. இயேசு சிலுவையில் மரித்தபோது அவர் நமது பாவங்களைச் சுமந்து அவற்றிற்காக பரிகாரம் செய்தார். நமது எல்லாப் பாவங்களையும் சுத்திகரிக்க அவர் சிலுவையில் இரத்தம் சிந்தினார். ஸ்பர்ஜன் சொன்னார்: "இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தைக் குறித்து பிரசங்கிக்காத சில பிரசங்கிமார்கள் இருக்கிறார்கள். அவர்களைக் குறித்து ஒன்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன் - *அவர்கள் பிரசங்கிப்பதைக் கேட்க ஒருபோதும் போகாதீர்கள்! அவர்கள் சொல்வதை கேளாதீர்கள்!* இரத்தமில்லாத எந்த ஒரு ஊழியமும் ஜீவனற்றது, அந்த ஊழியம் யாருக்கும் பிரயோஜனமற்றது" (C H ஸ்பர்ஜன், 'கிறிஸ்துவின் இரத்தம் மூலம் விடுதலை' ஆகஸ்டு 2, 1874). கிறிஸ்து நமது பாவங்களைச் சுமப்பாரென்னும் கருத்து ஏசாயா 53ம் அதிகாரத்தில் திரும்ப குறிப்பிடப்படுகிறது.

> "மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு, நம்முடைய துக்கங்களைச்சுமந்தார்" (ஏசாயா 53:4).

> "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர்நொறுக்கப்பட்டார்" (ஏசாயா 53:5).

> "நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது" (ஏசாயா 53:5).

> "அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" (ஏசாயா 53:5).

> “கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்” (ஏசாயா 53:6).
>
> “என் ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார்” (ஏசாயா 53:8).
>
> “அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரண பலியாக ஒப்புக்கொடுக்கும்போது” (ஏசாயா 53:10).
>
> “அவர்களுடையஅக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார்” (ஏசாயா 53:11).
>
> “அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து...” (ஏசாயா 53:12).

கிறிஸ்துவானவர் நமது குற்றங்களைத் தம்மேல் ஏற்றுக்கொண்டு, நமது பாவங்களினிமித்தம் நம் ஸ்தானத்தில் பாடுப்பட்டு அவைகளுக்கு முழுமையான பரிகாரத்தை உண்டாக்குவாரென ஏசாயா 53ல் பல முறை கூறப்பட்டுள்ளது.

ஆனால், நமது வேதபகுதியில் ஒரு புதிய கருத்து கொடுக்கப்படுகிறது. *ஏன் கிறிஸ்து பாடுபட வேண்டும், ஏன் பாவமறியாத கிறிஸ்துவானவர் மனிதரின் பாவத்தைச் சுமக்க வேண்டும்* என்பதைப் பற்றி இங்கு கூறப்பட்டுள்ளது.

> “நாமெல்லாரும் ஆடுகளைப்போல் வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்” (ஏசாயா 53:6).

நமது வேதபகுதி மூன்று குறிப்புகளாக பிரிக்கப்படலாம்.

## I. முதலாவதாக, அனைத்து மனுக்குலத்தின் பாவத்தின் பொதுவான அறிக்கை.

தீர்க்கதரிசி சொன்னார்,

"ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து ..." (ஏசாயா 53:6).

அனைத்து மனுக்குலத்தின் உலகளாவிய பாவநிலை குறித்த ஒரு தெளிவான கூற்று இது. *"நாமெல்லாரும்* ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து." இதனை அப்போஸ்தலனாகிய பவுல் இன்னும் தெளிவுபடுத்துகிறார்,

> "யூதர் கிரேக்கர் யாவரும் பாவத்திற்குட்பட்டவர்களென்பதை முன்பு திருஷ்டாந்தப்படுத்தினோமே. அந்தப்படியே: நீதிமான் ஒருவனாகிலும் இல்லை; உணர்வுள்ளவன் இல்லை; தேவனைத் தேடுகிறவன் இல்லை." (ரோமர் 3:9-11).

*"நாமெல்லாரும்* ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து," நாம் ஒவ்வொருவரும் அப்படித்தான்!

ஆடுகளைப்போல, தேவனுடைய கட்டளையென்னும் வேலியை நாம் உடைத்துப் போட்டுவிட்டோம், வழிதப்பிச் சென்று, நாமெல்லாரும் தேவனை விட்டுத் தூரம் சென்றுவிட்டோம். அப்போஸ்தலனாகிய பேதுரு சொன்னார்,

"'சிதறுண்ட ஆடுகளைப் போலிருந்தீர்கள்" (I பேதுரு 2:25).

பேதுரு இங்கு பயன்படுத்தியுள்ள கிரேக்க வார்த்தையின் பொருள், பாதுகாப்பு மற்றும் சத்தியத்தைவிட்டு அலைந்து திரிவதும் ஏமாற்றப்படுவதுமாகும் (**ஸ்ட்ராங்**). பரிசுத்த வேதாகமம் அனைத்துலக மாந்தரையும் இவ்வாறாகவே விவரிக்கிறது.

> "நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து..." (ஏசாயா 53:6).

பாவம் மனிதனைத் தரங்கெட்டுப் போகப் பண்ணுகிறப்படியால் அவன் ஒரு மிருகத்தோடு ஒப்பிடப்படுகிறான். அவன் மிருகம் போல மாறி விடுகிறான். ஆனால் நாம் ஒரு புத்திசாலித் தனமான விலங்கோடு ஒப்பிடப்படவில்லை. எளிய மனதுடைய ஆட்டோடு மனிதன் ஒப்பிடப்படுகிறான்.

நகரத்தில் வாழும் உங்களுக்கு ஆடுகளின் பேதைத்தனத்தை அறிய ஒரு வாய்ப்பு இல்லாமலிருக்கலாம். ஆயினும் பரிசுத்த வேதாகம நாட்களின் மக்களுக்கு ஆடுகளின் அறிவற்ற நிலை குறித்து நன்றாகத் தெரியும். மேய்ப்பன் அவைகளைக்

கவனமாய் பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில் அவை வழிதவறிச் சென்றுவிடும்.

ஆடுகளுக்கு ஒன்று மட்டும் நன்றாகத் தெரியும் - வழிதவறிச் செல்வது! தொழுவத்தில் எங்காவது ஒரு சிறு திறப்பு இருந்தால் போதும். அதை ஆடுகள் எளிதில் கண்டுபிடித்து, வழிதவறிச் சென்றுவிடும். ஆயினும் தொழுவத்திற்கு வெளியே சென்ற ஆடு திரும்ப உள்ளே வர முயலுவதில்லை. பாதுகாப்பான இடத்தை விட்டு ஆடுகள் இன்னும் தொலைவாக, இன்னும் தொலைவாக சென்று விடுகின்றன. மனிதனும் அப்படித்தான். தீமை செய்வதில் ஞானமாயிருக்கும் அவன், நல்லதைச் செய்வதில் முட்டாளாயிருக்கிறான். கிரேக்க கட்டுக் கதையில் வருவதைப் போல, பாவத்தைத் தேடிச் செல்வதில் மனிதனுக்கு ஒரு நூறு கண்கள் இருக்கின்றன. ஆனால் தேவனைத் தேட வேண்டும் என்கிறபோது பர்திமேயுவைப் போல அவன் குருடனாகிவிடுகிறான். அண்டம் தழுவிய வியாதியான பாவத்தைப் பற்றி அப்போஸ்தலானகிய பவுல் இவ்வாறு கூறுகிறார்:

> “அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடனபடிக்கைகளுக்கு அந்நியரும் நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக் கொள்ளுங்கள்.” (எபேசியர் 2:12).

> “அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதயக் கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து...” (எபேசியர் 4:18).

மனுக்குலம் தேவனைவிட்டு விலகி வெகுதூரம் சென்றுவிட்டதை இவ்வசனங்கள் வெளிப்படுத்திக் காட்டுகின்றன.

> “நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து...” (ஏசாயா 53:6).

நமது வேதவசனப் பகுதியில், அனைத்து மனுக்குலத்தின் பாவத்தைக் குறித்த ஒரு பொதுவான அறிக்கையிடுதல் காணப்படுகிறது. தேவனை விட்டு விலகிச்

சென்ற மனுக்குலம் நூற்றுக் கணக்காண போலி மதங்களுக்குள்ளும் தவறான கொள்கைகளுக்குள்ளும் சென்று விக்கிரகங்களையும் மாயையான தேவர்களையும் பொய் கிறிஸ்துக்களையும் வழிபாடு செய்ய ஆரம்பித்துவிட்டது. 'அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு தங்கள் இருதயக் கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்தார்கள்' (எபேசியர் 4: 18).

## II. இரண்டாவதாக, ஒவ்வொருவரும் அந்த குறிப்பிட்ட பாவத்தை தனிப்பட்ட ரீதியில் அறிக்கை செய்தல்.

நமது வேத வசனப் பகுதி தொடர்ந்து சொல்கிறது,

> "நாமெல்லாரும் ஆடுகளைப் போல *வழித்தப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்*" (ஏசாயா 53:6).

மனித வம்சத்தின் பாவத்தை அறிக்கையிடுதலை ஆதரிக்கும் வண்ணமாக ஒவ்வொரு தனி மனிதனும் குறிப்பிட்ட பாவத்தை அறிக்கையிடும் தனிப்பட்ட அறிக்கையிடுதல் உள்ளது. 'நாமெல்லாரும் அவனவன் தன்தன் வழியிலே போனோம்'. ஒருவன் கூட தேவனுடைய வழியில் செல்ல தாமாக தெரிவு செய்யவில்லை. ஒவ்வொறு நிகழ்விலும் மனிதர் 'தன்தன் வழியை' தெரிவு செய்தனர். பாவத்தின் இதயமே இங்குதான் உள்ளது. *அதாவது தேவ சித்தத்திற்கு எதிராக நமது சொந்த வழியைத் தெரிந்துகொள்வது.* நமது சொந்த வாழ்வை நாமே கட்டுப்படுத்த விரும்பினோம். தேவனுக்கு ஒப்புக்கொடுக்க நமக்கு மனமில்லை. கிறிஸ்துவை நம்ப மறுக்கும் நாம் அவரின் ஆளுமைக்கு நம்மை அர்ப்பணிக்க மனமற்றிருக்கிறோம்.

நமது வேத பகுதி, 'அவனவன் தன்தன் வழி' என ஒருவனது சொந்த தனிப்பட்ட பாவத்தை சுட்டிக் காட்டுகிறது. ஓவ்வொரு மனிதனும் மனுஷியும் மற்றவர்களிடமிருந்து மாறுபடக்கூடிய ஒரு பிரதான பாவத்தைப் பெற்றிருக்கிறார்கள். ஒரே பெற்றோரால் வளர்க்கப்படும் இரு பிள்ளைகள் வெவ்வேறான, வாடிக்கையான பாவங்களைக் கொண்டிருப்பார்கள். ஒரு மகன் ஒரு விதமான பாவம் செய்வான், மற்றொருவன் வேறு விதமான பாவம் செய்வான். 'நாமெல்லாரும் *அவனவன் தன்தன்* வழியிலே போனோம்'. ஒருவன் வலது புறமும்

அடுத்தவன் இடது புறமும் செல்கிறார்கள். ஆனால் இருவரும் தேவனுடைய வழியை நிராகரிக்கிறார்கள்.

கிறிஸ்துவானவரின் நாட்களில் தேவனுடைய பிரமானத்தைக் கடுமையாய் எதிர்த்த அஞ்ஞானிகள் இருந்தனர். தேவனை தங்களது வாழ்வினில் விட்டுவிட்டு மாம்சத்துக்குரிய பாவங்களை வாஞ்சித்துச் செய்த பாவிகள் இருந்தனர். தங்களது சுயநீதியினால் இறுமாப்படைந்து, பிறரைக் காட்டிலும் தாங்கள் நல்லவர்களென எண்ணிய பரிசேயர்கள் இருந்தார்கள். தேவதூதர்களையும் பிசாசுகளையும் நம்பாத சதுசேயர் இருந்தனர். அவர்கள் மாம்சீக பாவங்களில் ஈடுப்படவில்லை. அவர்கள் ஆயக்காரரைப் போல பாவத்தில் வாழவில்லை, பரிசேயரைப் போல போலிப் பற்றுடையவர்களாயும் இருக்கவில்லை. ஆனாலும் *தங்களது சொந்த வழியில்* தேவனுடைய சத்தியத்திற்கு எதிராய் அவர்கள் செயல்பட்டனர். அவர்கள் ஒவ்வொருவரையும் குறித்து இவ்விதமாகக் கூறலாம்,

> “நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழித்தப்பித் திரிந்து,
> அவனவன் தன்தன் வழியிலே போனோம்” (ஏசாயா 53:6).

உங்களில் சிலர் கிறிஸ்தவக் குடும்பங்களில் வளர்க்கப்பட்டிருக்கலாம், ஆயினும் சுவிஷேத்தின் வெளிச்சத்தை நிராகரித்ததினால் நீங்கள் பாவம் செய்திருக்கிறீர்கள். அது உங்களது'சொந்த வழி'. மற்றவர்கள் சில குறிப்பிட்ட பாவத்தைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கலாம். அதை நினைத்துப் பார்க்கும்போது உங்களுக்கு மிகுந்த கலக்கமுண்டாகிறது. ஆயினும் நம்மில் சிலர் கிறிஸ்துவானவரை நம்பி மன்னிப்பையும் சமாதானத்தையும் கண்டடைவதைவிட குற்ற உணர்வோடு தொடர்ந்து வாழ்வதைத் தெரிந்துக்கொள்கிறார்கள். வேறு சிலர் கிறிஸ்துவானவரைத் தொடர்ந்து நம்ப மறுக்கிறார்கள். 'நாமெல்லாரும் அவனவன் தன்தன் வழியிலே போனோம்'.

இன்னொறு நபர் இவ்வாறு கூறலாம், 'நான் என் இருதயத்தைக் கடினப்படுத்தியிருக்கிறேன். கிறிஸ்துவானவர் தேவை என்னும் மன உறுத்தல் எனக்கு இருந்தது, ஆனால் இப்போது அவ்வாறாக நான் உணரவில்லை. தேவன் தமது உக்கிர கோபத்தில் இனிமேல் நான் அவரது இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லை என ஆணையிட்டுள்ளாரோ இப்போது என அஞ்சுகிறேன். தேவன் என் மீது நம்பிக்கையை இழந்து விட்டாரென பயமாயிருக்கிறது.' ஆனால் நமது வேத பகுதியின் மீதமுள்ள பாகத்தை கவனமாய்ப் பார்போமென்றால், நமக்கு இன்னும் நம்பிக்கை உண்டு என்பதை அது தெளிவுபடுத்தும்!

## III. மூன்றாவதாக, பொது நலனுக்காகவும் பாவிகளுக்கும் பதிலாகவும் தன்னைப் பலியாக ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவானவரின் மரணம்.

எழுந்து நின்று நமது வசனப் பகுதியை வாசியுங்கள். வசனத்தின் கடைசிப் பாகத்தைச் சற்று கவனமாகப் படிக்கவும், "கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்."

> "நாமெல்லாரும் ஆடுகளைப்போல் வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் வழியிலே போனோம்;*கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்"* (ஏசாயா 53:6).

இப்போது நீங்கள் அமரலாம். பண்டிதர் எட்வர்டு J.யெங் சொன்னார்,

> இவ்வசனத்தின் முதல் பாதி தாசரின் பாடுகளுக்கான காரணத்தை வரையறுக்கிறது. நம்மெல்லாருடைய அக்கிரமங்களையும் தாசரின் மீது தேவன் தாமே சுமத்தி அவரைப் பாடுகளுக்குட்படுத்துவதை மறு பாதி உறுதிப்படுத்துகிறது. 'விழப் பண்ணினார்' என்பதின் அர்த்தம் *கடுனமாக தாக்குவது* அல்லது *அடிப்பதாகும்.* நாம் செய்த தவறின் தண்டனை திரும்பி நம்மைத் தாக்காமல் நமது ஸ்தானத்தில் கிறிஸ்துவைத் தாக்குகிறது. நமது பாவம் அவரைத் தாக்கும்படி தேவன் செய்தார். நமக்கு சொந்தமான குற்ற உணர்வு நமது பதிலாளியான அவரைத் தாக்கும்படி தேவன் செய்தார். நமது குற்றங்களுக்கான தண்டனையை பதிலாளியான கிறிஸ்து சுமந்து தீர்த்தார். ஆடுகளுக்காக மேய்ப்பனானவர் தமது ஜீவனைக் கொடுத்துள்ளார் (எட்வர்டு J. யெங், Ph.D., ***ஏசாயா புஸ்தகம்,*** எர்டுமென்ஸ், 1972, பகுதி 3, பக்கம் 349-350).

> "நாமெல்லாரும் ஆடுகளைப்போல் வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் வழியிலே போனோம்; *கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப் பண்ணினார்"* (ஏசாயா 53:6).

"இயேசுவின் மீது சுமத்தப்பட்ட தனிநபரின் பாவம்" என்ற தலைப்பிலான பிரசங்கத்தில் ஸ்பர்ஜன் கூறுகிறார்,

> ஒழுங்குணர்ச்சியைக் குலைக்கின்ற பாவங்கள், லோத்தின் பாவங்கள் இங்கு உள்ளன. அவைகளை நான் குறிப்பிட இயலாது. தாவீதின் பாவங்களைவிட அவை வேறுப்பட்டவை. தாவீதின் பாவங்கள் மனாசேயின் பாவங்களைப் போலன்று. மனாசேயின் பாவங்கள் பேதுருயின் பாவங்களைப் போல் அல்ல. பேதுரு வத்தியாசமான விதத்தில் பாவம் செய்தார். பாவியான ஸ்திரீ, அவளை பேதுருவோடு ஒப்பிட இயலாது. அவளது குணலட்சனத்தை லீதியாளோடு சேர்த்துப் பார்க்க முடியாது. லீதியாளை பிலிப்பிய சிறைத் தலைவனில்லாமல் பார்க்க இயலாது. இவர்கள் யாவரும் ஒன்றுபோல் இருக்கிறார்கள், இவர்களனைவரும் ஏகமாய்க் கெட்டுப் போனார்கள். ஆயினும் இவர்களெல்லாரும் வேறுப்பட்டவர்கள். இவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் வழிகளுக்குத் திரும்பிவிட்டார்கள். ஆண்டவரோ அவர்களுடைய அக்கிரமத்தை தம் மேல் விழப் பண்ணினார். இயேசுவின் இரத்தமென்னும் மாபெரும் சுவிசேஷ மருந்தண்டைக்கு நாம் வருகையில், பண்டைக்கால மருத்துவர்களால் *கெத்தோலிக்கோன்* என அழைக்கப்பட்ட சர்வலோக ஔஷதம் அங்கு இருக்கிறது. அது அனைத்து ரோகத்தையும் போக்குகிறது. அது குற்ற உணர்வால் ஏற்படும் தனிமைப்படுத்துதலை அகற்றுகிறது. இந்தப் பாவத்திற்காகவே இந்த ஔஷதம் உண்டாக்கப்பட்டதுபோல இருக்கிறது. (C. H. ஸ்பர்ஜன், "இயேசுவின் மீது சுமத்தப்பட்ட தனிநபரின் பாவம்," ***மாநகர ஆசரிப்புக் கூடார பலிபீடம்,*** யாத்ரீகன் வெளியீடுகள், 1977 மறுபதிப்பு, பாகம் XVI,பக்கம் 213-214).

கிறிஸ்துவானவரை நம்புங்கள். கிறிஸ்துவானவருக்கு அர்பணியுங்கள். அவரை விசுவாசிக்கிற நீங்கள் ஒருபோதும் வெட்கம் அடைவதில்லை. ஏனெனில், 'கர்த்தர் நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப் பண்ணினார்'.

நாம் குற்றவாளிகள், கெட்டவர்கள், உதவியில்லாதவர்கள்;
அவரோ அப்பழுக்கற்ற தேவாட்டுக் குட்டி;
"முழு பாவப் பரிகாரம்," சாத்தியமா?
அல்லேலூயா! எவ்வளவு பெரிய இரட்சகர்!
("அல்லேலூயா! எவ்வளவு பெரிய இரட்சகர்!" –
இயற்றியவர் பிலிப் P. ப்ளிஸ், 1838-1876).

நீங்கள் இயேசுவை நம்புவீர்களா? அவருக்கு உங்களை அர்ப்பணித்து, ஒப்புக்கொடுத்து அவரின் மேல் நம்பிக்கை வைப்பீர்களா? அவரது இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட்டு, சிலுவையில் பதிலாளியாக அவர் தம்மைப் பலியிட்டுவிட்டபடியால் நியாயத்தீர்ப்பிலிருந்து மீட்கப்படுவீர்களா? கிறிஸ்துவானவர் மீது மட்டும் சார்ந்துகொள்ளும் விசுவாசத்தைத் தேவன் உமக்களித்து, அவருக்கு ஒப்புக்கொடுத்து இரட்சிக்கப்பட பிதாவாகிய கடவுள் கிருபை செய்வாராக!

நாம் அனைவரும் எழுந்து நிற்போம். இயேசுவானவர் மீது நம்பிக்கை வைப்பதைப் பற்றி நீங்கள் எங்களோடு பேச விரும்பினால் உடனடியாக உங்களது இருக்கையை விட்டு, இந்த பிரசங்க மண்டபத்தின் பின்னால் செல்லவும். ஒரு அமைதியான அறையில் பண்டிதர் கேகன் உங்களோடு பேசுவார். கிறிஸ்துவானவருக்கு ஒப்புக்கொடுத்து அவரது பரிசுத்த இரத்தத்தால் பாவத்திலிருந்து கழுவப்படுவதைக் குறித்து நாம் பேசலாம்! சகோ லீ அவர்கள் முன்னாக வந்து மாறுத்தரம் அளித்தவர்களுக்காக ஜெபிப்பார்.

பிரசங்க குறிப்பு

# அண்டத்தின் பாவம், குறிப்பிட்ட பாவம் மற்றும் பாவத்திற்கான குணமடைவு

**(பிரசங்க எண் 7 ஏசாயா 53ன் மீதானது)**

Dr. R. L. ஹைமர்ஸ், Jr.

> "நாமெல்லாரும் ஆடுகளைப்போல் வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்" (ஏசாயா 53:6).

(ஏசாயா53:4, 5, 6, 8, 10, 11, 12)

I. முதலாவதாக, அனைத்து மனுக்குலத்தின் பாவத்தின் பொதுவான அறிக்கை,ஏசாயா53:6a; ரோமர் 3:9-11; I பேதுரு 2:25; எபேசியர் 2:12; 4:18.

II. இரண்டாவதாக, ஒவ்வொருவரும் அந்த குறிப்பிட்ட பாவத்தை தனிப்பட்ட ரீதியில் அறிக்கை செய்தல், ஏசாயா53:6b.

III. மூன்றாவதாக, பொது நலனுக்காகவும் பாவிகளுக்கும் பதிலாகவும் தன்னைப் பலியாக ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவானவரின் மரணம், ஏசாயா53:6c.

# ஆட்டுக் குட்டியானவரின் மௌனம்

**(செய்தி எண்: 8ஏசாயா 53)**

# THE SILENCE OF THE LAMB

**(SERMON NUMBER 8 ON ISAIAH 53)**

டாக்டர் ஆர். எல். ஹைமெர்ஸ் ஜூனியர் அவர்களால்
by Dr. R. L. Hymers, Jr.

மார்ச் 24, 2013 அன்று கர்த்தருடைய நாளில் மாலை வேளையில் லாஸ் ஏஞ்சலஸில் உள்ள பாப்திஸ்து கூடாரத்தில் பிரசங்கிக்கப்பட்ட செய்தி
A sermon preached at the Baptist Tabernacle of Los Angeles
Lord's Day Evening, March 24, 2013

> "அவர்நெருக்கப்பட்டும்ஒடுக்கப்பட்டும்இருந்தார்,
> ஆனாலும்தம்முடையவாயைஅவர்திறக்கவில்லை;
> அடிக்கப்படும்படிகொண்டுபோகப்படுகிறஒருஆட்டுக்கு
> ட்டியைப்போலவும்,
> தன்னைமயிர்க்கத்தரிக்கிறவனுக்குமுன்பாகச்சத்தமிடாதி
> ருக்கிறஆட்டைப்போலவும்,
> அவர்தம்முடையவாயைத்திறவாதிருந்தார்" (ஏசாயா 53:7).

கிறிஸ்தவ இரத்த சாட்சிகளின் கடைசி வார்த்தைகள் எப்போதும் சவால் நிறைந்தவை. அவர்களது மரண நேர வார்த்தைகள் நமது இருதயங்களை உயிர்ப்பிக்கின்றன. பாலிகார்ப் இரண்டாம் நூற்றாண்டின் துவக்கத்தில் வாழ்ந்த பிரசங்கியார். ஆங்கிலத்தில் அவரது பெயர் பாலிகார்ப், லத்தீனில் அவரது பெயர் பாலிகார்பஸ். அப்போஸ்தலன் யோவானின் சீடராய் இருந்தவர் பாலிகார்ப். அநேக வருடங்கள் கழித்து அவர் புறஜாதி நீதிபதி முன்பதாக நின்றார், அந்த நீதிபதி, "நீர் ஒரு வயோதிபர். நீர் மரிக்க வேண்டிய அவசியமில்லை... வாக்குப்பண்ணிவிடும் நான் உம்மை விடுவிப்பேன். 'அதிபர் சீசர்' என்று சொல்லி, அவருக்கு தூபம் காட்டுவதால் என்ன தீங்கு நேரப்போகிறது? சீசரின் நாமத்தில்

வாக்குப்பண்ணிவிடும் நான் உம்மை சந்தோஷமாய் விடுவித்துவிடுவேன். கிறிஸ்துவை மறுதலியும் நீர் உயிர்வாழ்வீர்."

பாலிகார்பஸ் பதிலளித்தார், "எண்பத்தாறு ஆண்டுகள் அவரை [கிறிஸ்து] நான் சேவித்திருக்கிறேன், அவர் எனக்கு ஒருபோதும் தவறு செய்ததில்லை. என்னை இரட்சித்த என் இராஜாவை நான் எப்படி தூஷிப்பேன்?" நீதிபதி சொன்னார், "நான் உம்மை அக்கினியில் தகனிக்க வேண்டியிருக்கும்." பாலிகார்பஸ் பதிலாக, "நீர் என்னிடம் பயமுறுத்தும் அக்கினி ஒரு மணி நேரம் மட்டுமே எரிந்து அவிந்து போய் விடும். பக்தியில்லாதவருக்காக [இழந்து போனவர்கள்] வரப்போகிற நியாயத்தீர்ப்பின் நித்திய அக்கினியைப் பற்றி உமக்குத் தெரியுமா? ஏன் தாமதிக்கிறீர்? வாரும், நீர் விரும்புகிறதைச் செய்யும்."

இதைக் கேட்ட நீதிபதி தன் தூதுவனை அனுப்பி மக்களிடம் சத்தமாய், "பாலிகார்ப் தன்னை ஒரு கிறிஸ்தவனென்று அறிக்கை பண்ணினான்!" என்று பிரகடனம் செய்ய அனுப்பினான். புறஜாதி மக்கள் இதைக் கேட்டு, "அவனை உயிரோடே எரியுங்கள்!" என்று உரக்கக் கத்தினர். தீ ஆயத்தமாக்கப்பட்டது. தண்டனையை நிறைவேற்றுகிறவன் அவரிடம் வந்து அவரை ஒரு தூணில் ஆணிகளால் அறைந்துவிடும்படி வந்தான். பாலிகார்ப் அமைதியாக சொன்னார், "என்னை இப்படியே விட்டுவிடுங்கள். நீர் ஆணிகளால் எதிர்பார்க்கும் பாதுகாப்பை விட, அக்கினியை சகிக்க உதவி செய்பவர் அசையாமல் அக்கினியில் நிற்க என்னை வலுப்படுத்துவார்".

இதற்குப் பின்பு பாலிகார்ப் உரத்த சத்தமாய் ஜெபித்து, "மரணத்திற்கு பாத்திரனாய் எண்ணின" தன் தேவனை துதித்தார். அக்கினி எரிய விடப்பட்டு அக்கினி ஜுவாலை அவரை வளைந்து கொண்டது. அக்கினியால் அவரது சரீரம் தளர்ந்துவிடாததைக் கண்ட போது, ஒரு சேவகன் ஈட்டியினால் அவரைக் குத்தினான். இவ்வாறு சிமிர்னா சபையின் போதகனும், அப்போஸ்தலன் பவுலின் சீடனுமான பாலிகார்ப்பஸின் வாழ்வு முடிவுக்கு வந்தது. (see James C. Hefley, ***Heroes of the Faith***, Moody Press, 1963, pp. 12-14).

ஸ்பர்ஜன் "ஜேன் பவுச்சியர் என்னும் நமது மகிமையான பாப்திஸ்து இரத்த சாட்சி… கிரான்மர் மற்றும் ரிட்லி" என்னும் இரண்டு இங்கிலாந்து பேராயர்களுக்கு முன்பாக நிறுத்தப்பட்டதைக் குறித்து பேசுகிறார். அவர்கள் இந்த சகோதரியை அக்கினியால் சுட்டெரிக்கப்பட ஒப்புக்கொடுத்து அவ்வாறு செய்வது சுலபமான மரணம் என்றனர். அவள் அவர்களைப் பார்த்து, "உங்களைப் போலவே நானும் இயேசுவின் உண்மையான ஊழியக்காரி தான்; உங்கள் எளிய சகோதரியை அக்கினியால் அவித்துப் போடுவீர்களானால்,பார்த்துக் கொள்ளுங்கள்

[எச்சரிக்கையாயிருங்கள்] தேவன் ரோமிலிருந்து நரியை அவிழ்த்து விட்டு, நீங்களும் பாடுபட வேண்டியதாயிராதபடிக்கு ஜாக்கிரதை காண்பியுங்கள்" என்றாள். அவள் எவ்வளவு உண்மையாய் சொன்னாள், அந்த இருவரும் சில காலத்திற்குப் பின்பு இரத்த சாட்சிகளாய் மாறினர்! (see C. H. Spurgeon, "All-Sufficiency Magnified", ***The New Park Street Pulpit,*** volume VI, pp. 481-482).

அநேக நூற்றாண்டு இடைவெளிகளுக்கு மத்தியிலும், பாலிகார்ப் மற்றும் ஜேன் பவுச்சியர் விசுவாசத்தில் உறுதியை அறிக்கையிட்டு தீக்கிரையாயினர். *ஆனால் இயேசுவோ துன்புறுத்தல் மற்றும் மரணத்திற்கு மத்தியில் அவ்வாறு அறிக்கையிடவில்லை!* ஆம், அவர் பிரதான ஆசாரியனிடம் பேசினார். ஆம், அவர் ரோம ஆளுநர் பொந்தியு பிலாத்துவிடம் பேசினார். ஆனால் அவர் சவுக்கடிகளால் குற்றுயிராக்கப்படும்போதும் சிலுவையில் அறையப்படும்போதும், ஏசாயா தீர்க்கதரிசியின் வார்த்தைகள் அவரது மௌனம் என்னும் அற்புத உண்மையை விளக்குகிறது!

> "அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும், தன்னை மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்" (ஏசாயா 53:7).

*அவர்கள் அவரை அடிக்கும்போதும் அவர் ஒரு வார்த்தையும் பேசவில்லை! அவரை சிலுவையில் ஆணிகளால் அறையும் போதும் அவர் ஒரு வார்த்தைகூட பேசவில்லை!* நமது வேத பகுதிக்கு வந்து மூன்று கேள்விகளைக் கேட்டு அதற்கு பதில் சொல்லும் வாயிலாக அதன் ஆழத்திற்குள் கடந்து செல்வோம்.

## I. முதலாவதாக, இயேசு எனஅழைக்கப்படும் இந்த மனிதன் யார்?

யாரைக் குறித்து தீர்க்கதரிசி இவ்வாறு பேசினான்,

> "அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடையவாயைஅவர் திறக்கவில்லை…?" ஏசாயா 53:7).

வேதாகமம் சொல்கிறது அவர் மகிமையின் கர்த்தர், பரிசுத்த திரித்துவத்தின் இரண்டாம் நபர், மனித சரீரத்தில் வந்த தேவகுமாரன்! விசுவாசப் பிரமாணம் சொல்வது போலவே அவர் "தெய்வீகத்தின் தெய்வீகமானவர்". ஒரு சாதாரண மனிதனாகிய போதகர் எனவோ அல்லது சாதாரண தீர்க்கதரிசி எனவோ நாம் அவரை நினைக்கக் கூடாது! இவ்வாறு அவரைக் குறித்து சிந்திக்க அவர் இடமளிக்கவில்லை, அவர் சொன்னார்,

> "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்"(யோவான் 10:30).

மறுபடியும், அவர் சொன்னார்,

> "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன்மரித்தாலும்பிழைப்பான்" (யோவான் 11:25).

வேறு எந்த மனிதனும் இவ்வாறு சொல்லியிருந்தால் நாம் அந்நபரை பிசாசு பிடித்தவனெனவும், பைத்தியக்காரனெனவும், திசை மாறியவனெனவும், மூளை குழம்பியவனெனவும் அல்லது நிலை குலைந்தவனென்றும் சொல்லியிருப்போம்! ஆனால் இயேசு தானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்று சொன்ன போதும், "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்று சொன்ன போதும், நாம் சற்று யோசித்து, *நம்மில் மோசமானவர்கள் கூட, அவர் சொல்வது சரியா என யோசிப்போம்!*

சி.எஸ். லூவிஸ் சொல்லும் சில காரியங்களில் நான் மாறுபட்டாலும், இயேசு கிறிஸ்துவைக் குறித்து அவர் சொன்ன பிரசித்த பெற்ற வார்த்தைகளை நாம் எப்படி மறுக்க இயலும்? சி.எஸ். லூவிஸ் சொன்னார்,

> அவரைக் குறித்து ஜனங்கள் சொல்லும் உண்மையிலேயே முட்டாள்தனமான காரியங்களை ஒருவரும் சொல்லாதபடி இங்கே தடை செய்ய முயற்சிக்கிறேன்: "இயேசுவை பெரிய ஒழுக்கரீதியான போதகர் என்று ஏற்றுக்கொள்கிறேன், ஆனால் அவர் தன்னை தேவன் என்று சொல்வதை ஏற்க முடியாது". இந்த ஒரு காரியத்தைத்தான் நாம் சொல்லக்கூடாது. சாதாரணமான ஒரு மனிதனாய் இருந்து இயேசு சொன்னது போன்ற

> காரியங்களை சொன்னவர் ஒழுக்கரீதியான போதகர் என்று சொல்ல முடியாது. அவர் ஒருவேளை பைத்தியக்காரனைப்போல - தன்னை ஓடில்லாத முட்டை என்று சொல்பவனாகவோ - அல்லது அவர் நரகத்தின் பிசாசாய் இருக்க வேண்டும். நீங்கள் உங்கள் தெரிவை செய்ய வேண்டும். ஓன்று அவர் அப்போதும் இப்போதும் தேவ குமாரன்: அல்லது பைத்தியக்காரன் அல்லது அதற்கும் மோசமானவன். *நீங்கள் அவரை முட்டாள் என்று அடைத்துப்போடலாம், நீங்கள் அவர் மீது துப்பி அவரை பிசாசு என்று கொன்று போடலாம்; அல்லது நீங்கள் அவர் பாதத்தில் வீழ்ந்து அவரை கர்த்தர் என்றும் ஆண்டவர் என்றும் அழைக்கலாம். ஆனால் அவரைஏதோவொரு மனித போதகரெனக் கூறும் முட்டாள்தனத்திற்கு உட்படாமலிருப்போமாக. அவர் அவ்வாய்ப்பை நமக்குத் திறந்து வைக்கவில்லை.அவ்வாறு அவர் நினைக்கவில்லை*(C. S. Lewis, Ph.D., ***Mere Christianity,*** Harper Collins, 2001, p. 52).

“நீங்கள் அவர் மீது துப்பி அவரை பிசாசு என்று கொன்று போடலாம்; அல்லது நீங்கள் அவர் பாதத்தில் வீழ்ந்து அவரை கர்த்தர் என்றும் ஆண்டவர் என்றும் அழைக்கலாம்… உங்கள் தெரிந்து கொள்ளுதலை நீங்கள் தான் செய்ய வேண்டும்”, இயேசு சொன்னார்,

> “நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல்ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்” (யோவான் 14:6).

இங்கே அனைத்தும் சொல்லப்பட்டாயிற்று! நீங்கள் இயேசுவை புத்தமதத்துடனோ அல்லது இந்து மதத்துடனோ அல்லது இஸ்லாமிய மதத்துடனோ கலக்கமுடியாது ஏனெனில் “அவர் அவ்வாய்ப்பை நமக்குத் திறந்து வைக்கவில்லை. அவ்வாறு அவர் நினைக்கவில்லை”. இயேசு நமக்கு வேறொரு மார்க்கத்தையும் வைக்கவில்லை. அவர் சொன்னார், “என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்”. சி.எஸ். லூவிஸ் சொல்வது போல “நீங்கள் அவர் மீது துப்பி அவரை பிசாசு என்று கொன்று போடலாம்… அல்லது நீங்கள் அவர் பாதத்தில் வீழ்ந்து அவரை கர்த்தர் என்றும் ஆண்டவர்என்றும் அழைக்கலாம்…

உங்கள் தெரிந்து கொள்ளுதலை நீங்கள் தான் செய்ய வேண்டும்". இது அல்லது வேறே. ஒருவரும்*நிச்சயமாக* இதில் நடுநிலையில் இருப்பதில்லை! அவ்வாறு இருப்பது போல அவர்கள் நடிக்கலாம், அவர்கள் ஒருபோதும் நடுநிலையாளர்கள் இல்லை. "அவர் அவ்வாய்ப்பை நமக்குத் திறந்து வைக்கவில்லை".

## II. இரண்டாவதாக, ஏன் இயேசு தன்னை துன்புறுத்திக் கொலை செய்தோறுக்கு முன்பாக தன்னைப் பாதுகாக்கவில்லை?

அதற்கு காரணம் என்ன?

> "அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடையவாயைஅவர் திறக்கவில்லை?" (ஏசாயா 53:7).

மிகப்பெரிய விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், கிறிஸ்தவரல்லாதிருந்தும், இவ்வாறு சொன்னார்,

> ஒருவரும் [நான்கு] சுவிசேஷங்களை வாசித்துவிட்டு இயேசுவின் பிரசன்னத்தை உணராமல் இருக்க முடியாது. ஒவ்வொரு வார்த்தையிலும் அவரது ஆள்தத்துவம் வெளிப்படுகிறது. அப்படிப்பட்ட வாழ்வில் எந்த ஒரு புனைகதையும் நிரம்பியில்லை (Albert Einstein, Ph.D., ***The Saturday Evening Post,*** October 26, 1929).

எனினும் அவர் சவுக்கடி பெறும் போதும் சிலுவையில் அடிக்கப்படும் போதும் ஒன்றும் பேசவில்லை! அவரை அடித்து கொலை செய்தவர்களுக்கு முன்பாக இயேசு ஏன் தன்னைத் தற்காத்துக் கொள்ளவில்லை? ரூஸோ என்னும் பிரெஞ்சு தத்துவ ஞானி, ஒரு நாத்திகனாயிருந்தும், விநோதமாக அந்த கேள்விக்கான பதிலுக்கு அருகே வந்து இவ்வாறு உரைத்தார்,

> சாக்ரடீஸ் வாழ்ந்து தத்துவ ஞானி போல மரித்தால், இயேசு தேவனைப் போல வாழ்ந்து மரித்தார் (Jean-Jacques Rousseau, French philosopher, 1712-1778).

*இயேசு தன்னைப் பாதுகாத்துக் கொள்ளாததற்குக் காரணம் இவர் பூமிக்கு வந்ததன் காரணமே பாடுபட்டு சிலுவையில் மரிப்பதற்காகத்தான்.* இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு ஒரு வருடத்திற்கு முன்பதாக இதைத் தெளிவாக எடுத்துரைத்தார்.

> "அது முதல் இயேசு [அந்த காலம் முதல்], தாம் எருசலேமுக்குப் போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும், வேதபாரகராலும் பலபாடுகள்பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்கவேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத் தொடங்கினார்" (மத்தேயு 16:21).

***The Applied New Testament*** விளக்கஉரை சொல்லுகிறது,

> பேதுரு தற்போதுதான் இயேசுவை கிறிஸ்து என்றும், மேசியா என்றும், ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்றும் அறிக்கை செய்திருக்கிறார் [மாற்கு 8:29]. ஆனால் [பேதுரு] இன்னமும் இயேசு எதற்காக இந்த உலகிற்கு வந்தார் என்று புரிந்து கொள்ளவில்லை. அவரும் மற்ற யூதரைப் போலவே, குறிப்பாக, இயேசு பூமிக்குரிய இராஜாவாக வந்ததாக நினைத்தார். ஆகவே, இயேசு [தாம்]பலவகையில் பாடுபட்டு... கொல்லப்பட வேண்டும் என்று சொன்ன போது, பேதுருவால் அதை ஏற்றுக்கொள்ளமுடியவில்லை.அவ்வாறு சொன்னதற்காக அவன் இயேசுவைக் கடிந்து கொண்டான். இயேசு மூன்றாம் நாளிலே [தாம்] உயிருடன் எழும்பப் போவதையும் சொல்லியிருந்தார். தாம் மரிக்கப்போவது மட்டுமல்ல, மூன்றாம் நாளிலே மரித்ததிலிருந்து உயிர்த்தெழப்போவோம் என்றும் இயேசுவுக்குத் தெரியும். சீஷர்கள் இதைப் புரிந்து கொள்ளவே இல்லை(Thomas Hale, ***The Applied New Testament Commentary,*** Kingsway Publications, 1996, pp. 260-261).

ஆனால் *நாமோ* இதைப் புரிந்து கொள்ள வேண்டும். வேதாகமம் சொல்லுகிறது,

> "பாவிகளை இரட்சிக்கவே கிறிஸ்து இயேசு உலகத்திற்கு வந்தார்"(1 தீமோத்தேயு 1:15).

நம்முடைய பாவங்களுக்காக சிலுவையில் அவருடைய மரணம், உயிர்த்தெழுதல், ஆகியவை நமக்கு ஜீவன் தருகின்றன. இயேசு அடிக்கப்பட்டு சிலுவையில் அறையப்படும்போது தம்மைக் காத்துக்கொள்ளும்படி தம் வாயைத் திறக்கவில்லை காரணம், அவர் பிலாத்துவிடம் சொன்னது தான், "சாட்சி கொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே நான் இந்த உலகத்திற்கு வந்தேன்" (யோவான் 18:37).

## III. மூன்றாவதாக, இயேசுவின் அமைதியான பாடுகளைக் குறித்து நமது வேதபகுதி என்ன சொல்கிறது?

தயவு செய்து எழும்பி ஏசாயா 53:7ஐ சத்தமாய் மீண்டும் ஒருவிசை வாசிக்கலாம்.

> "அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும்,தன்னைமயிர்க்கத்தரிக்கிற வனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற [மௌனம்] ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்"(ஏசாயா 53:7).

நீங்கள் அமர்ந்து கொள்ளலாம்.

"அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார்". டாக்டர் யங் இந்த வசனம் இவ்வாறு மொழிபெயர்க்கலாம் என உரைக்கிறார், "அவர் ஒடுக்கப்பட தம்மை [அனுமதித்திருந்தார்]"."ஒடுக்கப்படுதலில் அவர் தாமே முன்வந்து பாடுகளை ஏற்றுக்கொண்டார்... சுயகாப்பு அல்லது மறுப்பு அவர் வாயிலிருந்து புறப்படவில்லை. இதன் நிறைவேறுதலை யோசிக்காமல் [இந்த தீர்க்கதரிசனத்தை] ஒருவராலும் வாசிக்க முடியாது, பிலாத்துவின் நியாயாசானத்திற்கு முன்பாக உண்மையான ஊழியக்காரனாகிய அவர் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. 'அவர் வையப்படும்போது, பதில்வையவில்லை'[துன்புறுத்தப்பட்ட போது, அவர் பயமுறுத்திப் பேசவில்லை]"(Edward J. Young, Ph.D., ***The Book of Isaiah,*** Eerdmans, 1972, volume 3, pp. 348-349).

> "பிலாத்து அவரை நோக்கி: இவர்கள் உன்மேல் எத்தனையோ குற்றங்களைச் சாட்டுகிறார்களே, நீ அவைகளைக் கேட்கவில்லையா என்றான். *அவரோ ஒரு வார்த்தையும் மாறுத்தரமாகச் சொல்லவில்லை;* அதனால் தேசாதிபதி மிகவும் ஆச்சரியப்பட்டான் [மிகவும் பிரமித்தான்]" (மத்தேயு 27:13-14).

> "பிரதான ஆசாரியர்கள் அவர்மேல் அநேகங்குற்றங்களைச் சாட்டினார்கள்:*அவரோ மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை.* அப்பொழுது பிலாத்து மறுபடியும் அவரை நோக்கி: இதோ, இவர்கள் உன்மேல் எத்தனையோ குற்றங்களைச் சாட்டுகிறார்களே, அதற்கு நீ ஒன்றும் சொல்லுகிறதில்லையா என்று கேட்டான். *இயேசுவோ அப்பொழுதும் பதில் ஒன்றும் சொல்லவில்லை;* அதினால் பிலாத்து ஆச்சரியப்பட்டான் [மிகவும் அதிசயப்பட்டு பிரமித்தான்]" (மாற்கு 15:3-5).

> "அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும், தன்னை மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற [மௌனம்] ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்"(ஏசாயா 53:7).

ஏசாயா 53:7ல் கிறிஸ்து ஆட்டுக்குட்டியுடன் ஒப்பிடப்பட்டுள்ளார். பழைய ஏற்பாட்டில், மனிதர்கள் தேவனுக்கு முன்பாக பலியிடும்படி ஆட்டுக்குட்டியைக் கொண்டு வருவர். ஆட்டுக்குட்டியை பலிக்கு ஆயத்தம்பண்ணும் விதமாக அதன் ரோமங்களை கத்தரித்து, எல்லா முடியையும் எடுத்து விடுவர். அதைச் செய்யும் வேளையில் ஆடு அமைதியாக நின்றது. பலி செலுத்தப்படும் ஆட்டுக்குட்டியானது மயிர்க்கத்தரிக்கப்படும்போதும் கொல்லப்படும்போதும் அமைதி காத்தது போல, "அவரும் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்" (ஏசாயா 53:7).

யோவான் ஸ்நானகனும் இயேசுவை பலி செலுத்தப்படும் பலியைப் போல ஒப்பிட்டுப் பேசினான்,

> “இதோ, உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி” (யோவான் 1:29).

*நீங்கள்* கிறிஸ்து இயேசுவை விசுவாசித்தீர்களானால், அவரது சிலுவை பலி உங்கள் பாவத்திற்கான கிரயத்தை செலுத்திவிடுகிறது, நீங்கள் தேவனுக்கு முன்பாக குற்றமற்றவர்களாய் நிற்கிறீர்கள். உங்களுடைய குற்றம் சிலுவையில் கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் சரிக்கட்டடப்பட்டு விட்டது. அங்கே சிந்தப்பட்ட இரத்தத்தினால் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டன.

அமெரிக்க இந்தியர்களின் மிஷனரியான டேவிட் பிரைனார்டு, இந்த சத்தியத்தை தன் ஊழியத்தின் நாட்களில் அதிகம் பகிர்ந்தார். அவர் அமெரிக்க இந்தியர்களுக்கு பிரசங்கிக்கும் வேளையில், அவர் சொன்னார், “இயேசுவையும் சிலுவையில் அறையப்பட்ட அவரையும் விட்டு நான் விலகவே இல்லை. இந்த மகத்தான சத்தியத்தை இந்த ஜனங்கள் புரிந்து கொண்ட உடனே… கிறிஸ்து நமக்காக பலியானதன் அர்த்தத்தை பெற்றுக்கொண்டால், அவர்களது வாழ்க்கை முறைகளை மாற்றுவது குறித்து நான் அதிகம் பேச வேண்டிய அவசியம் இல்லை” (Paul Lee Tan, Th.D., ***Encyclopedia of 7,700 Illustrations,*** Assurance Publishers, 1979, p. 238).

அது இன்றும் உண்மையாகிறது என்பதை அறிந்திருக்கிறேன். நீங்கள் இந்த காரியத்தைப் பார்க்கும் போது

> “வேத வாக்கியங்களின்படியே கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார்”(1 கொரிந்தியர் 15:3),

சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழுந்த இரட்சகருக்கு உங்களை அர்ப்பணிக்கும் போது, நீங்கள் கிறிஸ்தவராகிறீர்கள். மற்ற அனைத்தும் விளக்குவதற்கும் புரிந்து கொள்வதற்கும் எளியவையே. *கிறிஸ்துவை விசுவாசத்தினால் நம்புங்கள்நீங்கள் இரட்சிப்படைவீர்கள்!*

ஸ்பர்ஜனின் மரணப் படுக்கையில் இவ்வாறு சொன்னார், “என்னுடைய இறையியல் நான்கு சிறிய வார்த்தைகளில் அடக்கம் - ‘*இயேசு கிறிஸ்து எனக்காக* மரித்தார்’. நான் மறுபடியும் எழுந்திருந்தால் இதை மட்டும் பிரசங்கிக்கப் போதுமானது அல்ல, ஆனால் இதற்காக என் ஜீவனையும் கொடுக்கலாம். *இயேசு எனக்காக* மரித்தார்” (Tan, Ibid.). *நீங்கள்* அதைச் சொல்வீர்களா? “இயேசு எனக்காக மரித்தார்”, என்று நீங்கள் சொல்வீர்களா? இல்லையெனில்,உயிர்த்தெழுந்த இரட்சகருக்கு உங்களை அர்ப்பணித்து அவரை இன்றிரவு நம்புவீர்களா? “இயேசு

எனக்காக மரித்தார், நான் என்னை அவருக்கு அர்ப்பணித்து அவருடைய இரத்தத்தினாலும் நீதியினாலும் வரும் முழுமையான இரட்சிப்பினை நம்புகிறேன்" என்று சொல்வீர்களா? தேவன் அதைச் செய்வதற்கான எளிமையான விசுவாசத்தை உங்களுக்குத் தருவாராக. ஆமென்.

தயவு செய்து எழுந்து நின்று உங்கள் கையிலுள்ள தாளில் பாமாலை எண் 6 ஆகிய சார்லஸ் வெஸ்லியின்"And Can It Be?" என்று துவங்கும் பாடலைப்பாடுவோம்.

இரட்சகரின் இரத்தத்தில் ஆர்வம் பெற
என்னால் எப்படி ஆகுமோ?
மரித்தார் எனக்காய் அவர், அவருடைய வேதனை வருவித்ததாரோ?
எனக்காகவோ, அவர் மரணம்வரை பின் தொடர்ந்தார்?
ஆச்சரியமான அன்பு! இது எப்படி ஆகும்,
என் ஆண்டவரே, நீர் எனக்காய் மரிப்பதென்பது?
ஆச்சரியமான அன்பு! இது எப்படி ஆகும்,
என் ஆண்டவரே, நீர் எனக்காய் மரிப்பதென்பது?
("And Can It Be?" by Charles Wesley, 1707-1788).

இயேசு உங்கள்பாவத்தை மன்னித்து உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லவர் என்று நீங்கள் நிச்சயித்துக் கொண்டீர்களானால், நீங்கள் கிறிஸ்தவராவது குறித்து உங்களோடு பேச விரும்புகிறோம். தயவு செய்து உங்கள் இருக்கையில் இருந்து எழுந்து இந்த அறையின் பின்புறம் செல்லுங்கள். நாம் பேசும்படியாக ஒரு அமைதியான அறைக்கு டாக்டர் கேஹன் உங்களை அழைத்துச் செல்வார். இந்த அரங்கிற்குப் பின்னாக இப்பொழுதே செல்லுங்கள். திரு. லீ, தயவு செய்து முன்பாக வந்து அர்ப்பணித்தவர்களுக்காக ஜெபியுங்கள். ஆமென்.

முக்கியக்குறிப்புகள்

# ஆட்டுக்குட்டியானவரின் மௌனம்

(செய்தி எண்: 8ஏசாயா 53)

டாக்டர் ஆர். எல். ஹைமெர்ஸ் ஜூனியர் அவர்களால்

"அவர்நெருக்கப்பட்டும்ஒடுக்கப்பட்டும்இருந்தார்,
ஆனாலும்தம்முடையவாயைஅவர்திறக்கவில்லை;
அடிக்கப்படும்படிகொண்டுபோகப்படுகிறஒருஆட்டுக்கு
ட்டியைப்போலவும்,
தன்னைமயிர்க்கத்தரிக்கிறவனுக்குமுன்பாகச்சத்தமிடாதி
ருக்கிற[மௌனம்]ஆட்டைப்போலவும்,
அவர்தம்முடையவாயைத்திறவாதிருந்தார்"(ஏசாயா
53:7).

I. முதலாவதாக, இயேசுஎனஅழைக்கப்படும்இந்தமனிதன்யார்? (யோவான் 10:30; 11:25; யோவான் 14:6.

II. இரண்டாவதாக, ஏன்இயேசுதன்னைதுன்புறுத்திக்கொலைசெய்தோறுக்குமுன்பாகதன்னைப்பாதுகாக்கவில்லை? மத்தேயு 16:21; 1 தீமோத்தேயு 1:15; யோவான் 18:37.

III. மூன்றாவதாக, இயேசுவின்அமைதியானபாடுகளைக்குறித்துநமதுவேதபகுதிஎன்னசொல்கிறது? மத்தேயு 27:13-14; மாற்கு 15:3-5; யோவான் 1:29; 1 கொரிந்தியர் 15:3.

# சாந்தப்படுத்துதலின் விளக்கம்

(செய்தி எண்: 9ஏசாயா 53)

# A DESCRIPTION OF THE ATONEMENT

(SERMON NUMBER 9 ON ISAIAH 53)

டாக்டர் ஆர். எல். ஹைமெர்ஸ் ஜூனியர் அவர்களால்
by Dr. R. L. Hymers, Jr.

ஏப்ரல்7, 2013 அன்று கர்த்தருடைய நாளில் காலை வேளையில் லாஸ் ஏஞ்சலஸில் உள்ள பாப்திஸ்து கூடாரத்தில் பிரசங்கிக்கப்பட்ட செய்தி
A sermon preached at the Baptist Tabernacle of Los Angeles
Lord's Day Evening, April 7, 2013

"இடுக்கணிலும்நியாயத்தீர்ப்பிலுமிருந்துஅவர்எடுக்கப்பட்டார்; அவருடையவம்சத்தையாரால்சொல்லிமுடியும்;
ஜீவனுள்ளோருடையதேசத்திலிருந்துஅறுப்புண்டுபோனார்;
என்ஜனத்தின்மீறுதலினிமித்தம்அவர்வாதிக்கப்பட்டார்" (ஏசாயா 53:8).

இதற்குமுன்வசனத்திலேகிறிஸ்துவின்அமைதியைக்குறித்துஏசாயாநமக்கு சொன்னார்,

"அவர்நெருக்கப்பட்டும்ஒடுக்கப்பட்டும்இருந்தார்ஆனாலும் தம்முடையவாயைஅவர்திறக்கவில்லை;
அடிக்கப்படும்படிகொண்டுபோகப்படுகிறஒருஆட்டுக்குட்டியைப்போலவும்,
தன்னைமயிர்கத்தரிக்கிறவனுக்குமுன்பாகச்சத்தமிடாதிருக்கிறஆட்டைப்போலவும்,
அவர்தம்முடையவாயைத்திறவாதிருந்தார்" (ஏசாயா 53:7).

டாக்டர்எட்வர்டுஜே. யங் கூறுகிறார், "கிறிஸ்துபாடுபடும்போதுபொறுமையும்அமைதியுமாகஇருந்தார் என்பதை

அழுத்தமாக எடுத்துரைத்தபின்பு, தீர்க்கதரிசிஇப்பொழுது மிக விளக்கமாகஅவரதுபாடுகளைஎடுத்துரைக்கிறார்"(Edward J. Young, Ph.D., ***The Book of Isaiah,*** Eerdmans, 1972, volume 3, p. 351).

> "இடுக்கணிலும்நியாயத்தீர்ப்பிலுமிருந்துஅவர்எடுக்கப்பட்டார்; அவருடையவம்சத்தையாரால்சொல்லிமுடியும்; ஜீவனுள்ளோருடையதேசத்திலிருந்துஅறுப்புண்டுபோனார்; என்ஜனத்தின்மீறுதலினிமித்தம்அவர்வாதிக்கப்பட்டார்" (ஏசாயா 53:8).

இந்தவசனத்தைஇயற்கையாகமூன்றுபகுதிகளாகப்பிரிக்கலாம். (1) கிறிஸ்துவின்பாடுகள், (2) கிறிஸ்துவின்வம்சம்மற்றும் (3) நமதுபாவங்களின்நிமித்தமாககிறிஸ்துவின்கொடூரமானபலி.

**I. முதலாவதாக, இந்தபாடம்கிறிஸ்துவின்பாடுகளைக்குறித்தவிளக்கத்தைத்தருகிறது.**

> "இடுக்கணிலும்நியாயத்தீர்ப்பிலுமிருந்துஅவர்எடுக்கப்பட்டார்…
> ஜீவனுள்ளோருடையதேசத்திலிருந்துஅறுப்புண்டுபோனார்" (ஏசாயா 53:8).

கிறிஸ்துகெத்சமனேதோட்டத்திலேகைதுசெய்யப்பட்டார். அவர்தேவாலயக்காவலர்களாலேபிரதானஆசாரியர்களிடம்கொண்டுபோய்விடப்பட்டார். அவர்கள்பிரதானஆசாரியனாகியகாய்பாவுக்கும்மற்றும் யூதருடையசனகரீப்சங்கத்திற்கும்முன்பாகஅவரைகொண்டுவந்தார்கள். இந்தசங்கத்திலேபொய்சாட்சிகள்மூலமாகஅவர்நியாயந்தீர்க்கப்பட்டார். இயேசு கூறுவதாவது,

> "மனுஷகுமாரன்சர்வவல்லவருடையவலதுபாரிசத்தில்வீற்றிருப்பதையும்வானத்தின்மேகங்கள்மேல்வருவதையும்இதுமுதல்காண்பீர்கள்" (மத்தேயு 26:64).

அதன்பிறகுபிரதானஆசாரியன்சொன்னான்,

“உங்களுக்குஎன்னமாய்த்தோன்றுகிறதுஎன்றுகேட்டான். அதற்குஅவர்கள் [சனகரீப்சங்கத்தார்] மரணத்திற்குப்பாத்திரனாயிருக்கிறான்என்றார்கள். அப்பொழுதுஅவருடையமுகத்தில்துப்பி, அவரைகுட்டினார்கள் [அடித்தார்கள்]; சிலர்அவரைகன்னத்தில்அறைந்து” (மத்தேயு 26:66-67).

“விடியற்காலமானபோது, சகலபிரதானஆசாரியரும்ஜனத்தின்மூப்பரும், இயேசுவைகொலைசெய்யும்படி, அவருக்குவிரோதமாகஆலோசனைபண்ணி” (மத்தேயு 27:1).

ஆனால்ரோமசட்டப்படிஇதைசெய்யஅவர்களுக்குசட்டப்பூர்வமானஅதிகாரமில்லை, அதனால்,

“அவரைக்கட்டி, கொண்டுபோய், தேசாதிபதியாகிய (ரோம) பொந்தியுபிலாத்துவினிடத்தில்ஒப்புகொடுத்தார்கள்” (மத்தேயு 27:2).

பிலாத்துஇயேசுவைவிசாரித்தான்,

“இயேசுவையோவாரினால்அடிப்பித்து, சிலுவையில்அறையும்படிக்குஒப்புகொடுத்தான்” (மத்தேயு 27:26).

இவ்வாறாக, நமதுஇந்தபாடப்பகுதிநிறைவுபெறுகிறது,

“இடுக்கணிலும்நியாயத்தீர்ப்பிலுமிருந்துஅவர்எடுக்கப்பட்டார் [பிரதானஆசாரியர்களிடம்மற்றும்பிலாத்துவுக்குமுன்பாக கொண்டுபோய்விடப்பட்டார்] .... ஜீவனுள்ளோருடையதேசத்திலிருந்துஅறுப்புண்டுபோனார் [சிலுவைமரணத்தின்மூலமாக]” (ஏசாயா 53:8).

யூதசனகரீப்சங்கம்மற்றும்பிலாத்துமூலமாகஇயேசுவானவர்சிறைபடுத்தப்பட்டதால் "இடுக்கணிலுமிருந்துஅவர்எடுக்கப்பட்டார்" என்றவார்த்தைகள்நிறைவேற்றப்பட்டது.
காய்பாவுக்கும்மற்றும்பிலாத்துவுக்கும்முன்பாகஅவர்சோதிக்கப்பட்டபோது
"நியாயத்தீர்ப்பிலுமிருந்துஅவர்எடுக்கப்பட்டார்"
என்றவார்த்தைகள்நிறைவேறினது.
"ஜீவனுள்ளோருடையதேசத்திலிருந்துஅறுப்புண்டுபோனார்"
என்றவார்த்தைகளைநிறைவேற்றஅவர்இடுக்கணிலும்நியாயத்தீர்ப்பிலுமிருந்துஎடுக்கப்பட்டு,
கல்வாரிமலைக்குகொண்டுபோகப்பட்டுசிலுவையிலேஅறையப்பட்டுமரித்தார்.

டாக்டர்ஜான்கில் (1697- 1771) சொன்னார்,

> *இடுக்கணிலும்நியாயத்தீர்ப்பிலுமிருந்துஅவர்எடுக்கப்பட்டார்;*அதாவது, நீதிஎன்றபெயரிலே, அவருடையஜீவன்கொடூரமானமுறையில்எடுக்கப்பட்டது; ஆனால் [மெய்யாகவே] அவருக்கு [படுமோசமான] அநீதிஇழைக்கப்பட்டது;
> பொய்யானகுற்றச்சாட்டுஅவருக்குவிரோதமாகசுமத்தப்பட்டது, பொய்சாட்சிகள் மூலம் [லஞ்சம்கொடுத்து பொய்யான சாட்சியம் கூற வைத்து, அவருக்கு எதிராக பொய் வாக்குமூலம் வாங்கினார்கள்], அவருடையஜீவன்பொல்லாதவர்களின்கரங்களால்எடுக்கப்பட்டது [கொடுக்கப்பட்டது] அப்போஸ்தலர் 8:32ன்படி, ["அவர்ஒருஆட்டைப்போலஅடிக்கப்படுவதற்குக்கொண்டுபோகப்பட்டார்;
> மயிர்கத்தரிக்கிறவனுக்குமுன்பாகசத்தமிடாதிருக்கிறஆட்டுக்குட்டியைப்போலஅவர்தமதுவாயைத்திறவாதிருந்தார்" ].
> *அவர்தம்மைத்தாழ்த்தினபோதுஅவருடையநியாயம்எடுத்துப்போடப்பட்டது;*அவருக்குபொதுவானநீதியும் [பெற்றுக்கொள்ளவில்லை] கிடைக்கவில்லை(John Gill, D.D., ***An Exposition of the Old Testament,*** The Baptist Standard Bearer, 1989 reprint, volume V, p. 314).

நமதுபாடம்சொல்லுவதுபோல,

> “இடுக்கணிலும்நியாயத்தீர்ப்பிலுமிருந்துஅவர்எடுக்கப்பட்
> டார்…
> ஜீவனுள்ளோருடையதேசத்திலிருந்துஅறுப்புண்டுபோனா
> ர்...” (ஏசாயா 53:8).

**II. இரண்டாவதாக,**

**இந்தபாடத்தில்கிறிஸ்துவின்வம்சம்வம்சத்தைப்பற்றினவிளக்கம்கொடுக்கப்படுகிறது.**

இந்தவாக்கியத்தின்மையத்திலுள்ளபகுதியைவிளக்குவதுசற்றுகடினமானதாகும்,

> “இடுக்கணிலும்நியாயத்தீர்ப்பிலுமிருந்துஅவர்எடுக்கப்பட்
> டார்; *அவருடையவம்சத்தையாரால்சொல்லிமுடியும்*;
> ஜீவனுள்ளோருடையதேசத்திலிருந்துஅறுப்புண்டுபோனா
> ர்…” (ஏசாயா 53:8).

“அவருடையவம்சத்தையாரால்சொல்லிமுடியும்?” இந்தவாக்கியம் எதைப்பற்றிச் சொல்கிறது என்று டாக்டர்கில் கூறுவதாவது “அந்தகாலத்தையும் [அல்லதுஅவர்இருந்தசமயத்திலிருந்தசந்ததியையும்], அவர்வாழ்ந்தகாலத்திலிருந்தவர்களையும், அவரிடம்காட்டுமிராண்டித்தனமாகநடந்துகொண்டாவர்களையும், பொல்லாதகுற்றம்செய்தவர்களையும், அவற்றைவாயால் [முழுமையாக] விவரிக்கமுடியாதவையாகவும், மனிதஎழுதுகோலால் [முழுமையாக] எழுதமுடியாததாகவுமானது” (Gill, ibid.). தீமையில்லாததேவகுமாரனைஅவர்கள்அநீதியாகமற்றும்கொடூரமாகநடத்தினதை வாசிக்கும்போதுநமதுஇருதயத்தில்கண்ணீர்வருகிறது! இதைஜோசப்ஹார்ட் (1712-1768) தமதுதுக்ககீதத்தில்இவ்வாறாகஎழுதுகிறார்,

> புறக்கணிக்கப்பட்டஅந்த (பயங்கரஇடத்திலே) – இயேசு
> பொறுமையாகநிற்கிறார்பாருங்கள்!
> பாவிகள்சர்வவல்லவரின்கைகளைகட்டினார்கள்,
> தங்கள்சிருஷ்டிகரின்முகத்தில்துப்பினார்கள்.

முட்களால்அவர்சிரசைகாயப்படுத்தினார்கள் – அவரின்
ஓவ்வொருபாகத்திலும்இரத்தம்ஊற்றெடுத்தது,
உலோகம்தைக்கப்பட்டசாட்டையால்உழப்பட்டார்,
கூரானஈட்டியால்இருதயத்தில்குத்தப்பட்டார் .
ஆணிகளால்குற்றவாளிகொலைமரத்தில்அடித்தார்கள்,
பூமிக்கும்வானத்திற்கும்நடுவாகத்தொங்கினார்,
அவர்அடைந்தகாயமும்அதில்வடிந்தஇரத்தமும்,
அருகதையற்றவர்களைஅன்பினால்தம்மோடுசேர்க்கவே!
(“His Passion”ஜோசப்ஹார்ட், 1712-1768; பாஸ்டரால் “‘Tis Midnight, and on Olive’s Brow” என்ற இசைக்கு மாற்றியமைக்கப்பட்டது,).

ஜான்டிராப் (1601-1669) சொன்னார், “அவருடையவம்சத்தையாரால்சொல்லிமுடியும்? [யாரால்விவரிக்கமுடியும்] அவர்வாழ்ந்தகாலத்திலிருந்தமனிதர்களின்பொல்லாப்பை?” (John Trapp, ***A Commentary on the Old and New Testaments,*** Transki Publications, 1997 reprint, volume 3, p. 410).

ஏன் யூத தலைவர்கள் இயேசுவை சிலுவையில் அறைய வேண்டும் என்று எண்ணினார்கள் என்பதையும் ஏன் ரோமாபுரி வீரர்கள் “அவரைச்சிரசில்கோலால்அடித்து, அவர்மேல்துப்பி… அவரைச்சிலுவையில்அறையும்படிவெளியேகொண்டுபோனார்கள்” (மாற்கு 15:19-20) என்பதையும் மனித வார்த்தைகளால் விவரிப்பது கடினம்.

> “மரணத்திற்கேதுவானதொன்றும்அவரிடத்தில்காணாதிருந்தும்,
> அவரைக்கொலைசெய்யும்படிக்குப்பிலாத்துவைவேண்டிக்கொண்டார்கள்” (அப்போஸ்தலர் 13:28).

ஜான்டிராப்இதை, “அவருடையவம்சத்தையாரால்சொல்லவோ அல்லது விவரிக்க முடியும்?… அவர்வாழ்ந்தகாலத்திலிருந்தமனிதர்களின்பொல்லாப்பை” என்றுஎழுதுகிறார்.

> “இடுக்கணிலும்நியாயத்தீர்ப்பிலுமிருந்துஅவர்எடுக்கப்பட்டார்; *அவருடையவம்சத்தையாரால்சொல்லிமுடியும்*; ஜீவனுள்ளோருடையதேசத்திலிருந்துஅறுப்புண்டுபோனார்….” (ஏசாயா 53:8).

டாகடர்யங்சொன்னார், “அந்தவினைச்சொல் [விவரிக்கிறது] தியானத்தைதிணிக்கிறதுஅல்லதுஏதோஒன்றைக்குறித்ததீவிரமானகருத்தைகொடுக்கிறது.... அவர்கள் [அவரதுமரணத்தின்அர்த்தத்தை] யோசித்திருக்கவேண்டும், ஆனால்அவர்கள்அப்படிச்செய்யவில்லை” (Young, ibid., p. 352).

இந்தநாளில்ஏதாவதுவித்தியாசமிருக்கிறதா? லட்சக்கணக்கானமக்கள்கிறிஸ்துசிலுவையிலேமரித்ததைப்பற்றிஅதற்குதீவிரமானகவனம்செலுத்தாதபடிக்குக்கேள்விப்பட்டார்கள்.
“அவர்கள்அவரதுமரணத்தின்அர்த்தத்தையோசித்திருக்கவேண்டும்,
ஆனால்அவர்கள்அப்படிச்செய்யவில்லை.”
கிறிஸ்துசிலுவையில்அறையப்பட்டதையார் தீவிரமாக எடுத்துக்கொள்ளுகிறார்கள்? *நீங்கள்*எடுத்துக்கொள்ளுகிறீர்களா? கிறிஸ்துவின்மரணத்தைக்குறித்துயோசிக்கநேரம்செலவிடுகிறீர்களாமற்றும்அதுஉங்களுக்குஎன்னஅர்த்தத்தைக்கொடுக்கிறது?

“அவருடையவம்சத்தையாரால்சொல்லிமுடியும்?
அவர்வாழ்ந்தகாலத்திலிருந்தமனிதர்களின்பொல்லாப்பை”
என்றுஜான்ட்ரேப்எழுதுகிறார்.
இருந்தாலும்இன்றுமனந்திரும்பாதிருக்கிறமக்கள்மெய்யாகவேஇயேசுவைசிலுவையிலரைந்தமக்களைப்போலவேஇருக்கிறார்கள்.
கிறிஸ்துவின்மரணத்தின்முக்கியத்துவத்தை தீவிரமாக நினைக்கவிருப்பமில்லை. நமதுதியேட்டர்களில் “கிறிஸ்துவின்பாடுகள்” (The Passion of the Christ) என்றதிரைப்படம்வெளியிடப்பட்டபோதுஅநேகசெய்திவியாக்கியானர்கள்இந்தபடத்தைபார்ப்பவர்கள்மத்தியில்அதிகமானவிளைவைஉண்டாக்கும்என்றுசொல்லிஇருந்தார்கள். நற்செய்தியில்பெரியஎழுப்புதலைஏற்படுத்தும்என்றுசொன்னார்கள். சிலர்அதிகமானவாலிபர்கள்கூட்டம்சபைகளுக்குவரும்என்றுசொன்னார்கள்.

2004ல்அந்ததிரைப்படம்வெளியிடப்பட்டது.
அதுஒன்பதுவருடங்களுக்குமுன்பாக. அநேககாலங்கள்கடந்தனஆனால்அந்தசெய்திவியாக்கியானர்கள்சொன்னதுசரியா.
மெய்யாகவேகோரமானவகையில்கிறிஸ்துவின்பாடுகளைபடத்தில்விவரித்துஇருக்கிறார்கள்அதைப்பார்த்தஅநேகரிடையில்மனதளவில்தான்விளைவுஏற்பட்டிருக்கிறது.
ஆனால்இப்பொழுதுஅதைப்பார்ப்பவர்களிடையில்நிலையானஎண்ணத்தைஉண்டாக்கவில்லை.

அவர்கள்தங்கள்சுயத்தைமையமாகக்கொண்டமற்றும்பாவமானவாழ்க்கைக்குத்திரு ம்பிபோய்விட்டார்கள்.

அதுதான்பாவத்தின்மெய்யானசாராம்சம்.

கிறிஸ்துவின்பாடுகளைப்பற்றிமனந்திரும்பாதமக்களுக்குஒருசிறியதுக்கஅனுபவம் மட்டுமேஇருக்கும். ஆனால், சிறிதளவில்பட்சாதாபப்படுவார்கள்அவ்வளவுதான். அதன்பிறகு மணிக்கணக்கில் "வலைதளங்களிலும்", பணப்பேராசையிலும், தேவனற்றவாழ்க்கையிலும், முடிவில்லாவீடியோவிளையாட்டுகளிலும் ஈடுபட்டு, ஞாயிற்றுக்கிழமைசபைக்குச்செல்லாமல், தங்களைபடைத்ததேவனைப்பற்றிமிகச்சிறியஅளவில்சிந்தித்து, தங்களைஇரட்சிக்கசிலுவையிலேபாடுபட்டகிறிஸ்துவைமறப்பார்கள். "அவருடையவம்சத்தையாரால்சொல்லிமுடியும்?"

இயேசுசிலுவையில்அறையப்பட்டபோதுஇருந்தமக்களைப்போலவேஉங்கள்வமச த்திலும்காணப்படுவதுஏன்! அவர்கள் சுயநேசத்துக்காகவும், தேவனற்றகாரியங்கள் செய்பவர்களாகவும், பாவத்தால் கிடைக்கும் சந்தோஷத்துக்காகவே வாழ்பவர்களாகவும் உள்ளனர். உங்கள்மத்தியிலிருக்கும்மக்களைப்போன்றபரிபூரணபடம்போலஇதுஇல்லையா? நீமெய்யாகவேஉனக்குநேர்மையாகஇருப்பாயானால், உன்னையே இது விளக்குவதாக உணரவில்லையா? எல்லாவற்றையும்விட தேவனைப்பற்றிசிந்திப்பதற்குநீஎவ்வளவுநேரம்செலவிடுகிறாய்? ஒவ்வொருநாளும்ஜெபத்திற்காக எவ்வளவுநேரம்செலவிடுகிறாய்? உன்னுடையஅனுதினவாழ்க்கையைகிறிஸ்துசிலுவையில்சிந்தினஇரத்தம்எவ்வள வாகபாதித்திருக்கிறது? நீமெய்யாகவேஉனக்குநேர்மையாகஇருப்பாயானால், இயேசுசிலுவையில்அறையப்பட்டபோதுஇருந்தமக்கள் கிறிஸ்துவைபுறக்கணித்தார்கள், சிலுவையில் அறைந்தார்கள், பிறகு தங்கள்பாவவழியில்நடந்து தங்கள் வாழ்க்கையைத் தொடர்ந்தார்கள்; இவர்களுக்கும் உனக்கும் எந்த வித்தியாசமும் இல்லை என்று ஒப்புக்கொள்வாய் என்றுநான்நினைக்கிறேன். <u>அதுதான்</u>பாவத்தின்மெய்யானசாராம்சம். <u>அதுதான்</u>பாவத்தின்மெய்யானகுணாதிசயம். <u>அதுதான்</u>நீஒருபாவிஎன்றுநிரூபிக்கிறது.

இயேசுசிலுவையில்அறையப்பட்டபோதுஇருந்தமக்களைப்போலவேஒவ்வொருஅ ணுஅளவிலும்குற்றவாளியாககாணப்படுகிறாய். நீஇங்கே ஆலயத்திற்கு ஒவ்வொருஞாயிற்றுக்கிழமைகளிலும்தவறாமல்வந்தாலும், உனக்கு "தேவபக்தியின்வேஷம்" மட்டுமேஇருக்கிறது (II தீமோத்தேயு 3:5).

இதுஉனக்குஉண்மையாகதெரியவில்லையா?
“எல்லாரும்பாவம்செய்துதேவமகிமையற்றவர்களானார்கள்” (ரோமர் 3:23) என்பது உனக்குஉண்மையில்லையா?
அப்படியாகஇவையெல்லாம்உனக்குஉண்மையாகஇருக்கும்பொழுது, சர்வவல்லமையுள்ளதேவனுடையகோபத்திலும்மற்றும்நியாயத்தீர்ப்பிலுமிருந்துநீஎப்படித்தப்பித்துக்கொள்ளுவாய்? Rev. Iain H. Murrayதமதுசமீபவெளியீட்டுப்புத்தகமானடாக்டர்மார்டீன்லாய்டு-ஜோன்ஸ்ஸின்வாழ்க்கை குறிப்பில் சொல்கிறார்,

> லாய்டு-ஜோன்ஸ்அவர்கள்மனிதனுடையகுற்றத்திற்குவரும்அபாயத்தைகுறித்துபிரசங்கிக்கும்போது, தேவகோபத்தின்நிச்சயத்தைஅர்த்தப்படுத்துவார். மனம்மாறாதவர்கள்மீதுஏற்கனவேஇருக்கும்கோபம்வரப்போகும்பாவத்திற்குத்தண்டனையாகியநரகம்... அந்தஇடத்தில்அவர்கள் ‘புழுசாகாதுஅக்கினிஅவியாது’ (Iain H. Murray, ***The Life of Martyn Lloyd-Jones,*** The Banner of Truth Trust, 2013, p. 317).

**III. மூன்றாவதாக, கிறிஸ்துவின்பாடுகளின்ஆழமானஅர்த்தத்தைவிளக்கும்பாடம்.**

தயவுசெய்துஎழுந்துநின்றுஏசாயா 53:8ஐசத்தமாகவாசிக்கவும். கடைசிவாக்கியத்திற்குஅதிககவனம்செலுத்திபடிக்கவும், “என்ஜனத்தின்மீறுதலினிமித்தம்அவர்வாதிக்கப்பட்டார்”.

> “இடுக்கணிலும்நியாயத்தீர்ப்பிலுமிருந்துஅவர்எடுக்கப்பட்டார்; அவருடையவம்சத்தையாரால்சொல்லிமுடியும்; ஜீவனுள்ளோருடையதேசத்திலிருந்துஅறுப்புண்டுபோனார்; *என்ஜனத்தின்மீறுதலினிமித்தம்அவர்வாதிக்கப்பட்டார்*” (ஏசாயா 53:8).

நீங்கள்அமரலாம்.

டாக்டர்மெரில்எப். அங்கர்சொன்னார்,

> பதினேழுநூற்றாண்டுகளாக [ஏசாயா 53ம்அதிகாரத்தின்மேசியாவைபற்றினவிளக்கம்] *ஒரே*விளக்கமாககிறிஸ்தவர்கள் [மற்றும்] யூதஅதிகாரிகாரிகளுக்குஇருந்துவந்தது. [அதன்பிறகு யூதர்கள்] கிறிஸ்துவுக்குள்அந்தஅதிகாரத்தின்வசங்கள்குறிப்பிட்டவகையில்நிறைவேறினபடியினால்வெளிப்படையாகவிளக்கமளித்தார்கள்(Unger, ibid., p. 1293).

இன்றுஅநேக யூதஅறிஞர்கள்ஏசாயா 53ம்அதிகாரம்முழுவதும்கிறிஸ்துவைகுறித்ததுஅல்ல, அவைகள்ஒட்டுமொத்த யூதர்களின்பாடுகளைக்குறிப்பதாகும்என்றுசொல்லுகிறார்கள். யூதர்கள்பொய்கிறிஸ்தவர்களால்கொடுமையாகதுன்புறுத்தப்பட்டிருக்கலாம், அதுநமதுபாடத்தின்மெய்யானஅர்த்தமல்ல, அதுதெளிவாகச்சொல்லுகிறது, "என்ஜனத்தின்மீறுதலினிமித்தம் [பாவம்] அவர்வாதிக்கப்பட்டார்" (ஏசாயா 53:8). இந்தவாக்கியத்தில் "என்ஜனத்தின்மீறுதலினிமித்தம்அவர்வாதிக்கப்பட்டார்," டாக்டர்ஹன்றிஎம். மோரீஸ்சொன்னார், "அவர் '*என்னுடையமக்களுக்காக'* மரித்தார் - அதாவதுஇஸ்ரவேலருக்காக - இந்தபகுதியிலேஇஸ்ரவேலர்அல்லஅநேகர்குற்றஞ்சாட்டினார்கள்" [கிறிஸ்துவை] (Henry M. Morris, Ph.D., ***The Defender's Study Bible,*** Word Publishing, 1995, p. 767).இவ்வாறாக, அடிக்கப்பட்டது யூதர்அல்ல, அவர்களுடையஸ்தானத்திலே, அவர்களுடையபாவங்களுக்காக, அவர்களின்மற்றும்*நம்முடைய*பாவத்தண்டனைக்கிரயத்தைசெலுத்தும்படியாக, கிறிஸ்துஅடிக்கப்பட்டார். நம்முடையபாவத்தண்டனைக்கிரயத்தைசெலுத்தும்படியாகஅவர்சிலுவையில்அறையப்பட்டார்!

டாக்டர்ஜான்கில்சொன்னார் "என்ஜனத்தின்மீறுதலினிமித்தம்அவர்வாதிக்கப்பட்டார்", இந்தவார்த்தைகள் யூதமக்களுக்கும்மற்றும்தெரிந்துகொள்ளப்பட்டகிறிஸ்தவர்களுக்கும்கூடபொறுந்தும் - யூதமக்களின்பாவங்களுக்காகவும்மற்றும் "தமதுமக்களாகிய" கிறிஸ்தவர்களின்பாவங்களுக்காகவும்கிறிஸ்துஅடிக்கப்பட்டார்என்பதைக்காட்டும்படியாக (கில், ஐபிட்., பக்கம் 314). டாக்டர்கில்இந்தவார்த்தையின்சரியானஅர்த்தத்தைகொண்டுவெளியேவருகிறார்என்றுநான்நினைக்கிறேன்,

"என்ஜனத்தின்மீறுதலினிமித்தம்அவர்வாதிக்கப்பட்டார்"
(ஏசாயா 53:8).

தமதுமக்களின்பாவத்தண்டனைக்கிரயத்தைசெலுத்தும்படியாககிறிஸ்துசிலுவையிலே "அடிக்கப்பட்டார்", அது யூதர்களோஅல்லதுபுறஜாதிகளோயாராகிலுமிருக்கலாம். அவருடையமரணமானதுபதிலிடையானது (Substitutionary), நம்முடையபாவத்தண்டனைக்கிரயத்தைசெலுத்தும்படியாகஅவர்மரித்தார். அதுசாந்தப்படுத்தக்கூடியது(propitiatory),பாவிகள்மீதுஇருந்ததேவகோபத்தைத்திருப்பக்கூடியது.

ஆனால்ஒருநிபந்தனைஇருக்கிறது. கிறிஸ்துஉன்பாவத்தண்டனைக்கிரயத்தைசெலுத்தும்படியாகமரித்ததைநீகண்டிப்பாகநம்பிவிசுவாசிக்கவேண்டும். கிறிஸ்துவைநம்பத்தவறினவர்களைஅவர்பாவத்தண்டனைக்கிரயத்தைசெலுத்தும்படியாகசிலுவையிலேமரித்ததுஇரட்சிக்கமுடியாது. நீஇயேசுவிடம்உன்னைஒப்புவித்தால்மட்டுமேஉன்னுடையபாவங்கள்தேவனுடையபதிவேட்டிலிருந்துஇரட்சகரின்இரத்தத்தின்மூலமாகமுற்றிலும்நீக்கப்படும்.

நீஇந்தவசனத்திலுள்ளஎல்லாசத்தியங்களையும்அறிந்திருந்தும்நீஇழக்கப்பட்டுபோய்விடலாம். பிசாசுகளுக்குஇந்தசத்தியங்களைக்குறித்தமுழுமையானஅறிவுஇருக்கிறது, ஆனால்அதுஅவைகளைஇரட்சிக்காது. அப்போஸ்தலனாகியயாக்கோபுசொல்லுகிறார், "பிசாசுகளும் [பேய்கள்] விசுவாசித்து, நடுங்குகின்றன" (யாக்கோபு 2:19). பிசாசுகளுக்குகிறிஸ்துவின்தியாகபலியாகியமரணத்தைப்பற்றிய "தலைஅறிவு" (Head Knowldege )மட்டுமேஇருக்கிறது. நீஇரட்சிக்கப்படவேண்டும்என்றுவிரும்பினால்கண்டிப்பாகஇன்னும்தொடர்ந்துபோகவேண்டியதாகஇருக்கிறது. நீஉண்மையாககிறிஸ்துவுக்குஒப்புகொடுத்துஅவரைநம்பிகீழ்ப்படிந்திருக்கவேண்டும். கர்த்தருடையகிருபையுள்ளகிரியையினாலேமாறுதலடையவேண்டும்அல்லதுசிலுவையிலறையப்பட்டஉன்னுடையமனப்பாடத்திலுள்ளஅவரைப்பற்றயநினைவோடுநரகத்திற்குப்போவாய்.

டாக்டர் A.W. டோசர்(Tozer) “முடிவாக்கப்படுதலை” எதிர்த்தும், உண்மையான மத மாற்றத்தை ஆதரித்தும் கூறுவதை கவனியுங்கள். டாக்டர் A.W. டோசர் கூறுகிறார்,

> மதமாற்றம்முழுமையும்எந்திரமயமானதும்மற்றும்ஆவியற்றதுமாகநடைபெறுகிறது. நீதியானவாழ்க்கைவாழாமல்விசுவாசம்அப்பியாசிக்கப்படலாம்மற்றும்ஆதாமின்தான்என்றஅகந்தைதன்னிலிருப்பதைஅறியாமல்செயல்படலாம். கிறிஸ்துவை “ஏற்றுக்கொள்பவர்கள்”, அவருக்காகஎந்தவிதமானசிறப்பானஅன்பும்காட்டப்படாமல்தங்கள்ஆத்துமாவிலேஅவரைஏற்றுக்கொள்ளலாம். (A. W. Tozer, D.D., ***The Best of A. W. Tozer***, Baker Book House, 1979, page 14).

“மதமாற்றம்முழுமையும்எந்திரமயமானதும்மற்றும்ஆவியற்றதுமாகநடைபெறுகிறது” – *இதோடு,* அது கிறிஸ்தவமற்றது என்றும் நான் கூற விரும்புகிறேன்! அடிக்கடிகிறிஸ்துஇல்லாமல் “தீர்மானம்எடுக்கச்செய்பவர்கள்” எளிமையானமற்றும்விரைவானஒருஜெபத்தைசெய்வித்து, ஞானஸ்நானம்கொடுத்து, அதோடுகாரியத்தைமுடிவிற்குகொண்டுவந்துவிடவிரும்புவார்கள். அடிக்கடிகிறிஸ்துவின்மரணமும்மற்றும்உயிர்த்தெழுதலும்குறிப்பிடுவதுகடினமாகக்காணப்படுகிறது. அடிக்கடிஅவற்றைமுழுவதுமாகவிட்டுவிடுகிறார்கள்! வேதாகமம்அப்படி*போதிப்பதில்லை.* நீஉன்னுடையபாவக்குற்றத்தைஉணரவேண்டும், பாவத்திலிருந்தும்அதன்விளைவுகளிலிருந்தும்தப்பித்துக்கொள்ளகிறிஸ்துவிடம்வருவதைத்தவிரவேறுவழிஇல்லைஎன்றுகண்டுகொள்ளவேண்டும், அவருக்குமுன்பாகஉதவியற்றநிலையில்உன்னைஒப்புக்கொடுக்கவேண்டும், உன்னுடையஉள்ளத்தின்ஆழத்திலிருந்துஅவரைவிசுவாசிக்கவேண்டும். அப்பொழுதுதான், அப்பொழுதுமட்டுமே, தீர்க்கதரிசியாகியஏசாயாசொல்லுவதைஅனுபவப்பூர்வமாகநீஅறிந்துகொள்ளமுடியும்.

> “என்ஜனத்தின்மீறுதலினிமித்தம்அவர்வாதிக்கப்பட்டார்” (ஏசாயா 53:8).

நீஇயேசுகிறிஸ்துவைநம்பிவிசுவாசிக்கும்போது, அவருடையஇரத்தம்உனதுபாவங்களைச்சுத்தம்செய்கிறதுமற்றும்நீமனமாற்றம்அடைகிறாய் - ஆனால்அதற்குமுன்பாகஇதுநடைபெறுவதில்லை. இல்லை, இதற்குமுன்னர்இதுஒருபோதும்*நடைபெறவில்லை*. நீஇரட்சிக்கப்படவிரும்பினால்இயேசுகிறிஸ்துவைநம்பவேண்டும்!

நாம்அனைவரும்எழுந்துநிற்போம். இயேசுவைநம்புவதைப்பற்றிநீங்கள்எங்களோடுபேசவிரும்பினால்தயவுசெய்துஉங்களிடத்தைவிட்டுபின்பகுதியில்இருக்கும்ஆடிட்டோரியத்திற்குசெல்லவும். டாக்டர்கேகான்உங்களைஒருஅமைதியானஇடத்திற்குஅழைத்துச்செல்வார். அங்கேகிறிஸ்துவுக்குஉங்களைஒப்புகொடுப்பதைப்பற்றியும்மற்றும்உங்கள்பாவங்கள்அவருடையபரிசுத்தஇரத்தத்தால்கழுவிசுத்திகரிப்பதுபற்றியும்நாங்கள்உங்களோடுபேசமுடியும்! திரு. லீஅவர்களே, தயவுசெய்துவந்துஒப்புகொடுத்தவர்களுக்காகஜெபிக்கவும். ஆமென்.

முக்கியக்குறிப்புகள்

# சாந்தப்படுத்துதலின்விளக்கம்

**(செய்தி எண்: 9ஏசாயா 53)**

டாக்டர் ஆர். எல். ஹைமெர்ஸ் ஜூனியர் அவர்களால்

"இடுக்கணிலும்நியாயத்தீர்ப்பிலுமிருந்துஅவர்எடுக்கப்ப
ட்டார்; அவருடையவம்சத்தையாரால்சொல்லிமுடியும்;
ஜீவனுள்ளோருடையதேசத்திலிருந்துஅறுப்புண்டுபோ
னார்;
என்ஜனத்தின்மீறுதலினிமித்தம்அவர்வாதிக்கப்பட்டார்"
(ஏசாயா 53:8).

(ஏசாயா 53:7)

I. முதலாவதாக,
இந்தபாடம்கிறிஸ்துவின்பாடுகளைக்குறித்தவிளக்கத்தைத்தருகிறது. ஏசாயா 53:8அ; மத்தேயு 26:64, 66-67; 27:1-2, 26; அப்போஸ்தலர் 8:32.

II. இரண்டாவதாக,
இந்தபாடத்தில்கிறிஸ்துவின்வம்சத்தைப்பற்றினவிளக்கம்கொடுக்கப்படுகிறது. ஏசாயா 53:8ஆ; மாற்கு15:19-20; அப்போஸ்தலர் 13:28; II தீமோத்தேயு 3:5; ரோமர் 3:23.

III. மூன்றாவதாக,
கிறிஸ்துவின்பாடுகளின்ஆழமானஅர்த்தத்தைவிளக்கும்பாடம்ஏசாயா 53:8இ; யாக்கோபு 2:19.

# கிறிஸ்துவின் அடக்கத்தின் முரண்பாடு

**(பிரசங்க எண் 10 ஏசாயா 53ன் மீதானது)**

# THE PARADOX OF CHRIST'S BURIAL

**(SERMON NUMBER 10 ON ISAIAH 53)**

அறிவர் R. L. ஹைமர்ஸ்ஜுனியர்அவர்களால்

2013ம் ஆண்டு ஏப்ரல் 7 அன்று லாஸ் ஏஞ்சலஸிலுள்ள பாப்திஸ்து ஆசரிப்புக் கூடாரத்தின் கர்த்தருடைள நாள் மாலை ஆராதனையில் பிரசங்கிக்கப்பட்டது.

A sermon preached at the Baptist Tabernacle of Los Angeles
Lord's Day Evening, April 7, 2013

> "துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார்; அவர் கொடுமை செய்யவில்லை, அவரது வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை" (ஏசாயா 53:9).

இயேசு கிறிஸ்துவின் அடக்கம் குறித்து இதுவரை எத்தனை பிரசங்கங்களை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள்? நான் இதுவரை *ஒரு பிரசங்கம் கூட* கேட்கவில்லை. 55 ஆண்டுகளாக நான் பிரசங்கித்து வந்தும் 59 ஆண்டுகளாக திருச்சபை பணியில் இருந்தபோதும் கிறிஸ்துவின் அடக்கத்தைக் குறித்த ஒரு பிரசங்கத்தை நூலில் படித்த ஞாபகம் கூட எனக்கு இல்லை! இன்னும் அதிகமானதை நாம் கேட்டிருக்க வேண்டும். அவரது அடக்கம் ஒன்றும் முக்கியமற்றது அன்று. உண்மையைச் சொல்லப்போனால், சுவிசேஷத்தின் இரண்டாவது குறிப்பாக அது உள்ளது!

> "கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார்" (I கொரிந்தியர் 15:3).

இதுதான் சுவிசேஷத்தின் முதல் குறிப்பு.

"அடக்கம் பண்ணப்பட்டார்" (I கொரிந்தியர் 15:4).

இது சவிசேஷத்தின் இரண்டாவது குறிப்பு.

சுவிசேஷத்தின் இரண்டாவது குறிப்பை ஒருபோதும் குறிப்பிவில்லையென்றால், சுவிசேஷத்தை நாம் அறிவிக்கிறோமென எப்படிக் கூறலாம்? ஆனால் இந்நாட்களில் முதலாவது அல்லது மூன்றாவது குறிப்புகளை குவிமையமாய்க் கொண்ட சில முழுமை நலன்மிக்க பிரசங்கங்களும் இருக்கின்றன! நவீனகால பிரசங்கித்தலின் பெரிய பலவீனங்களில் இதுவும் ஒன்று. சுவிசேஷத்தை நாம் மையமாய்க் கொள்ள வேண்டும். கிறிஸ்துவிற்கு மேலான கனத்தை அளித்து, நமது பிரசங்கித்தலில் அவருக்கும் அவரது பாவ பரிகார கிரியைக்கும் மிகுந்த முக்கியத்துவத்தைக் கொடுக்க வேண்டும்.

இந்நாட்களில் தரமான பிரசங்கங்கள் மிகக் குறைவே எனப் பலரும் புலம்புகின்றனர். இதை நான் முற்றிலும் ஆமோதிக்கிறேன். நல்ல பிரசங்கங்கள் இன்று மிகவும் சொற்பமே. இது ஏன் இப்படி இருக்கிறது? பெரும்பாலும் மிகக் குறைவான சுவிசேஷப் பிரசங்கித்தல் இருப்பதால்தான் இந்நிலை. அழிவை நோக்கி ஓடும் மக்களால் தங்களது சபை நிரம்பி வழிந்தாலும், அழிவோருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கியாமல், போதகர்கள் "கிறிஸ்தவர்களுக்குப்" போதிப்பதில் மும்முரமாயிருக்கிறார்கள்! கிறிஸ்தவர்களுக்கு வழங்கப்படும் "அறநெறி போதனைகள்" சிறந்த பிரசங்கித்தலாக ஒருபோதும் கருத முடியாது. *கிறிஸ்துவானவரை மையப்படுத்தாத பிரசங்கம் உண்மையிலேயே சிறந்த பிரசங்கமாகாது!*

சுவிசேஷத்தைப் பற்றிய அறிவென்பது கிறிஸ்துவைப் பற்றிய சில தகவல்களை அறிந்திருப்பதைவிட மிகவும் மேலானது. சுவிசேஷத்தை உண்மையாக அறிந்திருப்பதென்பது *கிறிஸ்துவானவரை* அறிந்திருப்பதே. இயேசு சொன்னார்,

> "*ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும்* அறிவதே நித்தியஜீவன்*"*(யோவான் 17:3).

இங்கு 'அறிவது' என குறிப்பிடப்படுவதின் அர்த்தம் 'அனுபவத்தால் அறிந்துகொள்வது' என்பதென ஜார்ஜ் பேக்கர் பெர்ரி கூறுகிறார் (**கிரேக்க-ஆங்கில புதிய ஏற்பாட்டு சொல்லகராதி**). *நீங்கள் உண்மையான கிறிஸ்தவனாய் இருக்க வேண்டுமானால் கிறிஸ்துவை அனுபவத்தில் அறிந்திருக்க வேண்டும்*. வெரும் சில தகவல்களை

அறிந்திருப்பது உங்களை இரட்சிக்காது. நமது பாவங்களுக்காக அவர் மரித்ததை நீங்கள் அனுபவமாய் அறிந்திருக்க வேண்டும். அவரது அடக்கத்தை அனுபவத்தில் அறிந்திருக்க வேண்டும். அவரது உயிர்த்தெழுதலை அனுபவமாய் அறிந்திருக்க வேண்டும். இதுவே இரட்சிப்புக்கான மார்க்கம். இதுதான் நித்திய ஜீவனுக்கு வழி.

> "*ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும்* அறிவதே நித்தியஜீவன்*"* (யோவான் 17:3).

இந்த அனுபவங்களை நீங்கள் பெற்றிருக்கவில்லையென்றால், நான் கூறியவை உங்களுக்கு சற்று சிரமமாய்த் தோன்றலாம். நீங்கள் மனமாற்றத்தை அனுபவிக்காதவரை உங்களை உண்மைக் கிறிஸ்தவர் எனக் கூற இயலாது. நீங்கள் மனதில் மாற்றம் அடையும் வரை சில கஷ்டங்களும் சிரமங்களும் உங்களுக்கு வருகிறது. இயேசுவின் பாதத்தில் விழுந்து அவரில் மட்டுமே உண்மையான இரட்சிப்பை நீங்கள் கண்டுகொள்ளலாம்.

கிறிஸ்துவை அறியும்படி நீங்கள் சிலுவையண்டை சென்று, நமது பாவங்களுக்கு பரிகாரம் தேட சிலுவையிலறையப்பட்ட அவரை விசுவாசத்துடன் நோக்கிப் பார்க்க வேண்டும். மேலும் விசுவாசத்தோடு கிறிஸ்துவின் கல்லறைக்குள் நீங்கள் இறங்கிச் செல்ல வேண்டும்.

> "அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்" (ரோமர் 6:4a),

ஏனெனில் அவரோடு மரிப்பதில்தான் "புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு" நாம் எழும்புகிறோம் (ரோமர் 6:4b).

ஆனபடியால், அவரோடு நாமும் அதை அனுபவிக்கும்படி நமது வேதபாடப் பகுதியிலுள்ள அவரது அடக்கம் பண்ணுதலுக்குத் திரும்புவோமாக.

> "துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார்; அவர் கொடுமை செய்யவில்லை, அவரது வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை" (ஏசாயா 53:9).

இந்த வசனத்தில்கிறிஸ்துவின் அடக்கத்தின் முரண்பாட்டையும், அதன் ஒவ்வாதத்தன்மையும் அதன் புதிரான நிலையையும் காண்கிறோம். பின்பு இந்தப் புதிரின் பதிலை நாம் கண்டு கொள்கிறோம்.

## I. முதலாவதாக, அவரது அடக்கத்தின் முரண்படு மெய்மை.

> "துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார் …" (ஏசாயா53:9).

இயேசுவானவரின் காலத்தில், "துன்மார்க்கர்" என்பது கொடுங்குற்றம் செய்தோரைக் குறிக்கும் சொல். "ஐசுவரியவான்" என்பவர்கள் கனத்திற்குரியோராயிருந்தனர். அப்படியானால் ஒரே சமயத்தில் எப்படி அவர் கல்லறையில் துன்மார்க்கரோடும் மரணத்தில் ஐசுவரியவான்களோடும் இருக்க முடியும்? இது பண்டைக் கால யூத வேதவியாக்கினிகளை மிகவும் குழப்பியது. அவர்களது மனங்களைப் பொறுத்தவரையில் இது ஒரு முரண்பாடு, பொருந்தி வராத ஒன்று.

ஆனால் இந்த விடுகதை யோவான் சுவிசேஷத்தில் விடுவிக்கப்படுகிறது. இரண்டு கள்வர்கள் நடுவில், அவரது வலது பக்கத்தில் ஒருவன் அவரது இடது பக்கத்தில் ஒருவன், இயேசு சிலுவையில் மரித்தார். நமது வேத வசனப் பகுதியில் 'துன்மார்க்கர்' எனக் குறிப்பிடப்படுகிறவர்கள் இவர்களே. இயேசு முதலாவது மரித்தார், அவ்விரு கள்வர்களும் இன்னும் சற்று நேரம் உயிரோடிருந்தனர்.

> "நாள் பெரிய ஓய்வுநாளுக்கு ஆயத்த நாளாயிருந்தபடியினால், உடல்கள் அந்த ஓய்வுநாளிலே சிலுவைகளில் இராதபடிக்கு, யூதர்கள் பிலாத்துவினிடத்தில் போய், அவர்களுடைய காலெலும்புகளை முறிக்கும்படிக்கும், உடல்களை எடுத்துப் போடும்படிக்கும் உத்தரவு கேட்டுக்கொண்டார்கள்" (யோவான் 19:31).

போர்ச்சேவகர்கள் அவ்விரு கள்வர்களின் கால்களை முறித்தார்கள். கள்வர்கள் மேல் நோக்கி நகர்ந்து நன்றாக மூச்சு வாங்க முடியாதபடியும், எனவே விரைவில் மரணமடையும்படிக்கும் அப்படிச் செய்தார்கள். ஆயினும் இயேசுவிடம் அவர்கள் வந்தபோது, அவர் ஏற்கெனவே மரணமடைந்திருந்தார். அவர் மரித்துவிட்டார்

என்பதை உறுதிசெய்ய போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவரது விலாவிலே குத்தினான். தண்ணீரும் இரத்தமும் உடனே வெளிப்பட்டு அவர் மாரடைப்பால் மரித்து விட்டதை தெளிவுபடுத்தின.

> யானைத் தந்த சிங்காசனத்தில் அவர் ஆளவில்லை,
> கல்வாரிச் சிலுவையில் அவர் மரித்தார்;
> பாவிகளுக்காக தனது உடைமைகளை நஷ்டமாய் எண்ணினார்,
> சிலுவையிலிருந்தபடி தமது இராஜ்யத்தை அளவிட்டார்.
> ஒரு அழகற்ற சிலுவை அவரது சிங்காசனமானது,
> அவரது இராஜ்யம் இருதயங்களில் மட்டுமே;
> இரத்தச் சிவப்பில் தமது அன்பை வரைந்தார்,
> தமது தலையில் முட்களைச் சூடிக் கொண்டார்.
> (“முள்ளாலான ஒரு கிரீடம்” by ஐரா F. ஸ்டான்ஃபில், 1914-1993).

ஆனால் சற்றும் எதிர்பாராத ஒன்று அப்போது நடந்தது. இரு பிரபலமான மனிதர்கள் இயேசுவின் சரீரத்தைக் கேட்டார்கள். அவர்களில் ஒருவன் ஐசுவரியவானும் யூத சனகெரிம் மாமன்ற உறுப்பினருமான அரிமத்தியா ஊர் யோசேப்பு. இன்னொருவன், முன்பு இராக்காலத்தில் இயேசுவிடம் வந்து சென்ற நிக்கொதேமு எனப்படும் யூதத் தலைவன் (யோவான்3:1-2). இதுவரை இயேசுவின் இரகசிய சீஷர்களாயிருந்த இவர்கள், முதல் முறையாக இப்போது தங்களது விசுவாசத்தை வெளிப்படையாய் காண்பித்தனர். தங்களது உயிரைப் பணயம் வைத்து அவ்வாறு செய்தனர். பண்டிதர் மக்கீ சொல்கிறார்:

> இவ்விருவரையும் நாம் மோசமாக விமர்சிக்க வேண்டாம். புpன்னணியில் இவர்கள் சீஷராயிருந்து வந்தனர். ஆண்டவரது சீஷர்கள் ஆடுகளைப் போல இப்போது சிதறிப்போன போது, இவ்விரு மனிதரும் தங்களை வெளிச்சத்தில் நிறுத்தினர். (J. வெர்னான் மக்கீ, Th.D., ***வேதாகமத்தின் ஊடாக பயணத்தில்,*** தாமஸ் நெல்சன் வெளியீடு, 1983, பகுதிIV, பக்கம் 494).

இயேசுவானவரின் சரீரத்தை அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பும் நிக்கொதேமுவும் எடுத்துச் சென்றனர். ஐசுவரிவானாயிருந்த யோசேப்பு ஒரு புதிய கல்லறையில் இயேசுவானவரின் சரீரத்தை வைத்தான்.

> "தான் கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடையபுதிய கல்லறையிலே அதை அவத்து, கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டி வைத்துப் போனான்" (மத்தேயு 27:60).

இவ்வாறாக கிறிஸ்துவினது அடக்கத்தின் முரண்பாடு விளக்கப்படுகிறது. ஆம், சிலுவையில் அவர் மரிக்கும்போது இரு கள்வரின் நடுவே, தமது கல்லறையை துன்மார்க்கரோடே பெற்றிருந்தார். எனினும் அடக்கம் பண்ணப்படும்போது பணக்காரனின் கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார் (ஏசாயா 53:9). ஒரு பொல்லாதவனைப் போல மரித்த கிறிஸ்துவானவர் ஐசுவரியவானோடே கனம் மிக்க விதமாய் அடக்கம் பண்ணப்பட்டார். நமது ஆண்டவரின் சிறுமைபடுதல் முடிந்து போனதை இது காண்பிக்கிறது. பொதுவான கல்லறையில் இரு கள்வரைப்போல அவரது சரீரம் தூக்கி எறியப்படவில்லை. அவருக்குப் பொருத்தமான மிகுந்த மரியாதையோடும் பயபக்தியோடும் ஒரு பணக்கார பெரிய மனிதனின் கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இந்த முரண்பாடு பண்டைக் கால யூத மத ரபிகளை மிகவும் குழப்பியது, நமக்கோ இவ்வசனம் தெளிவுபடுத்தப்பட்டுவிட்டது.

> "துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார்" (ஏசாயா 53:9).

கிறிஸ்துவானவர் தனது கல்லறையை ஐசுவரியவானோடு வைத்துக் கொண்டதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. நான் ஏற்கெனவே கூறியபடி, யூத சமுதாயம் கொடுஞ்செயல் புரிவோரையும் சட்டத்தை மீறுகிறவர்களையும் துன்மார்க்கராகவும், ஐசுவரியவான்களைக் கனமான மக்களாகவும் பார்த்தது. இந்த இரு குழுவினரோடும் இயேசுவானவர் தமது கல்லறையைப் பகிர்ந்து கொண்டதன் மூலம், பாரம்பரிய யூத ரபிமார்கள் துன்மார்க்கரெனவும் ஐசுவரியவான்கள் எனவும் பிரிப்பது தவறு என நிரூபிக்கப்பட்டுவிட்டது. அவர்கள் இரு பிரிவினர் அல்லர். இரு பிரிவினருமே பாவிகள்!

அது இன்னும் அப்படித்தான். மதிப்புமிக்க மனிதரும் அவர்கள் 'துன்மார்க்கர்' என அழைப்போரைப் போல பாவிகளே. இந்தப் பிரசங்கத்தை நான் எழுதிக்கொண்டிருக்கையில் ஒரு விற்பனையாளர் என்னோடு தொலைபேசியில் பேசி 'பழமைப்பற்றுமிக்க' ஒரு ஊழியத்துக்கு நன்கொடை அளிக்குமாறு

வேண்டினார். அவர் சொன்னார்: 'அமரிக்காவை எதிர்நோக்கியுள்ள மிக முக்கியமான பிரச்சனையாக பின்வருவனவற்றுள் எதை நீங்கள் கூறுவீர்கள் - கருக்கலைப்பு, இஸ்ரவேல் தேசத்தை ஆதரிக்க மறுப்பது அல்லது ஓரினச் சேர்க்கை திருமணம்?' நான், இது எதுவுமில்லை என்றேன். தங்களது திருச்சபையின் அங்கத்தினர்களது பாவத்தைக் குறித்து போதகர்கள் பிரசங்கியாமல் இருப்பதுதான் அமரிக்காவை எதிர்நோக்கியுள்ள மிகப் பெரிய பிரச்சனை. ஆதன் அர்த்தம் என்ன? இதன் அர்த்தமாவது, கருக்கலைப்பும், ஓரினச் சேர்கையும் இஸ்ரவேல் நாட்டை ஆதரிக்கத் தவறுவதும் அறிகுறிகள்தான், அவை உண்மையான நோயல்ல. வியாதியின் அறிகுறிகள்தான் அவை! அறிகுறிகளைக் குணமாக்க நீங்கள் முயலலாம். அவைகளைக் கொண்டுவரும் வியாதியைக் குணமாக்கவில்லையென்றால் பிரயோஜனமில்லை. உண்மையான வியாதி பாவமே. அது திறந்த மனப்பான்மையுள்ளோரையும் பழமைவாதிகளையும் அழித்துக் கொண்டிருக்கிறது; பாவமானது குடியரசுக் கட்சியினரையும் ஜனநாயகக் கட்சியினரையும் கொன்றுகொண்டிருக்கிறது. அது 'துன்மார்கரையும்' 'ஐசுவரியவான்களையும்' குழியில் தள்ளுகிறது.

பாவம் இருதயத்தில் தங்கியிருக்கிறது. மனிமனது வெளிப்புற கிரியைகள் மட்டுமல்ல, அவனது இருதயம் தவறானது. பாவம் மனிதனது உள்ளான நினைவுகளையும் விருப்பங்களையும் கட்டுப்படுத்துகிறது. பாவமானவற்றைச் சிந்திக்குமாறு பாவமுள்ள இருதயம் மனிதனைத் தூண்டிவிடுகிறது. பின்பு உங்களது பாவ சுபாவம் தேவனுக்கு விரோதமாக எழுப்பிவிட்டு, நீங்கள் சிந்தித்த பாவத்தைச் செய்ய வைக்கிறது. பாவம் உங்களது உள்ளான வாழ்வை ஆட்டிப் படைத்து, அதிகாரத்திற்கெதிராகவும் தேவனுக்கெதிராகவும் உங்களைச் செயல்பட வைக்கிறது. அதை மாற்றவோ அதன் கட்டுப்பாட்டை முறிக்கவோ கூடாதபடிக்கு தேவனுக்கெதிரான பாவச் செயல்பாடு மிகவும் வல்லமையுடையதாயிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் புலம்புவதைப் போன்ற ஒரு நிலைக்கு நீங்கள் வந்துவிடுவீர்கள், 'நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?' (ரோமர் 7:24). அப்பொழுதுதான் இயேசுவானவர் துன்மார்க்கரோடும் ஐசுவரியவான்களோடும் தமது கல்லறையைப் பெற்றிருந்ததன் முக்கியத்துவத்தை நீங்கள் புரிந்துகொள்வீர்கள். நீங்கள் எப்படிப்பட்ட பின்னணியத்தை உடையவராயிருந்தாலும், உங்களது பாவங்கள் மன்னிக்கப்பட்டு அகற்றப்படும்படியாக கிறிஸ்து மரித்தார். பண்டிதர் J. வில்பர் ச்சாப்மேன் தனது கவிதையில் குறிப்பிடுகிறார், 'அடக்கம் பண்ணப்பட்ட அவர் எனது பாவத்தை மிகுந்த தூரமாய் விலக்கினார்' (பண்டிதர் J. வில்பர் ச்சாப்மேன், 1859-1918 எழுதிய 'ஒரு நாள்'). கிறிஸ்துவானவர் ஒருவர் மட்டுமே உங்களது எதிர்த்துச் செல்லும் சுபாவமுடைய இருதயத்தை மாற்ற முடியும்!

> "துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார்" (ஏசாயா 53:9).

## II. இரண்டாவதாக, முரண்பாடு விளக்கப்படுகிறது.

மதிப்புக் குறைவான விதத்தில் கள்வர்களோடு கிறிஸ்துவானவர் மரித்தபோதிலும் மரியாதையோடும் மதிப்போடும் அவர் ஏன் அடக்கம் செய்யப்பட்டார் என்பதை நமது வேத பகுதியின் பின்பகுதி காண்பிக்கிறது. தயவுசெய்து எழுந்து நின்று, 'அவர் கொடுமை செய்யவில்லை' (ஏசாயா 53:9) என்பதில் தொடங்கி, நமது வேத வசன பகுதியை வாசியுங்கள்.

> "துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார்;*அவர் கொடுமை செய்யவில்லை, அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை"* (ஏசாயா 53:9).

இப்போது நீங்கள் அமரலாம்.

இயேசுவானவர் கனத்தோடு அடக்கம் பண்ணப்பட்டதற்கான காரணத்தை இது அளிக்கிறது. இந்த மரியாதை அவருக்கு ஏன் தகுதியானதென்றால் *அவர் எந்தக் கொடுமையும் செய்யவில்லை*, அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை. அவர் யாரையும் காயப்படுத்தவில்லை. ஒடுக்குதல், திருட்டு, கொலை அல்லது எவ்விதக் கொடுமையிலும் அவர் குற்றவாளியல்ல. அவர் எந்த புரட்சியிலும் ஒருபோதும் ஈடுபடவில்லை. ரோம அல்லது யூத அரசாங்கங்களுக்கு எதிரான எந்தக் கலவரத்திலும் அவர் பங்கேற்கவில்லை. *அவர் வாயில் ஒரு வஞ்சனையும் இருந்ததில்லை*. அவர் எந்த துர்உபதேசத்தையும் போதிக்கவில்லை. அவர் மீது குற்றம் சாட்டியபடி, எந்த மக்களையும் அவர் ஏமாற்றவில்லை. அது ஒரு மொட்டை பொய். தேவனை உண்மையாய் ஆராதிப்பதை அவர் ஒருபோதும் தடுக்கவில்லை. மோசேயின் நியாயப்பிரமாணத்தையும் தீர்க்கதரிசிகளையும் அவர் எப்போதும் மதித்து, உயர்த்திக் காட்டினார். அவர்களது சமயத்திற்கோ தேசத்திற்கோ அவர் ஒருபோதும் எதிரியல்ல. உண்மையில், அவர் மீது எந்தப் பாவமும் இல்லை. அப்போஸ்தலனாகிய பேதுருவும் கிறிஸ்துவானவர்,

> “பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை
> காணப்படவுமில்லை” (I பேதுரு 2:22).

என்று கூறுகிறார்

பண்டிதர் யெங் சொன்னார்,“கிறிஸ்துவானவர் முற்றிலும் மாசற்றவராயிருந்தபடியால், மதிப்பற்ற மரணத்தைச் சந்தித்ததற்குப் பின் பெருமை மிக்க அடக்கத்தைக் பெற்றுக் கொண்டார். அவரோடு சிலுவையிலறையப்பட்ட தீயவர்களைப்போல அவர் இராதபடியால், அவர்களைப்போல் இகழ்ச்சியான இடம் அவருக்குக் கிடைக்காமல், ஐசுவரியவான்களோடு ஒரு மரியாதைமிக்க அடக்கம் அவருக்குக் கிடைத்தது.”

இந்த இடத்தில் மதிப்புமிக்க வின்ஸ்டன் சர்ச்சிலை நான் நினைத்துப் பார்க்கிறேன். அவரது மற்றும் அவரின் தகப்பனாரின் எதிரிகள் மிகுந்த ஆரவாரத்தோடும் நடன நாட்டியத்தோடும் எடுத்துச் செல்லப்பட்டு புதைக்கப்பட்ட பாரம்பரியப் புகழ்மிக்க வெஸ்ட்மின்ஸ்டர் அப்பேயில் தான் அடக்கம் செய்யப்படுவதை தரம் தாழ்ந்ததாக நினைத்த அவர், தனது தகப்பனாரின் கல்லறையருகே ஒரு கிராமப்புற ஆலய வளாகத்தில் தானும் அடக்கம் பண்ணப்படுவதை மேன்மையாக எண்ணினார். அவரது எதிரிகள் ஹிட்லரின் கொடுமை ஆட்சியை வஞ்சகமாக ஏற்றுக்கொண்டு அதற்கு ஒத்துழைத்தவர்கள். சர்ச்சில் மறுபடியும்பிறந்த கிறிஸ்தவர் இல்லையென்றாலும் அவர் ஒரு கனம் பெற்ற மனிதர்.

மனிதர்கள் யாவரிலும் தலைசிறந்தவர் இயேசுவே. அவர் மனிதராயிருந்தார், மனிதராயிருக்கிறார் 'மனுஷனாகிய கிறிஸ்து அவரே' (I திமோத்தேயு 2:5). பிதாவாகிய தேவனுக்கு முன்பாக தாமாக முன்வந்து *நமது* பாவங்களைப் போக்கும்படி தமது ஜீவனைக் கொடுத்தார் என்பதில்தான் அவரது மகத்துவம் விளங்குகிறது. தாம் சிலுவையில் அறைப்படுவதற்கு சற்று முன்பு இயேசு சொன்னார்,

> “ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற
> அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை”
> (யோவான் 15:13).

ஒரு கரடுமுரடான சிலுவை அவரது சிங்காசனம்,
அவரது இராஜ்யம் இதயங்களில் மட்டும்;
இரத்தச் சிவப்பில் தமது அன்பை எழுதினார்,
தமது சிரசில் முட்கிரீடத்தை அணிந்தார்.

இப்போதும் நண்பனே, கிறிஸ்து என்றழைக்கப்பட்ட இயேசுவை என்ன செய்யப் போகிறீர்கள்? C. S. லீவிஸ் எழுதியுள்ளபடி இக்கேள்விக்கு இரு பதில்கள் மட்டுமே உண்டு: 'அவரை பிசாசாக எண்ணி காறித் துப்பலாம், கொன்றுவிடலாம். அல்லது அவரது பாதத்தில் விழுந்து, அவரை ஆண்டவரே, தேவனே என அழைக்கலாம்.' இதில் எதை நீங்கள் செய்வீர்கள்? இருக்கக்கூடிய மூன்றாவதான மாறுத்தரம் என்னவென்றால், அவரது வேதனையும் பாடுகளும் பயனற்றவை எனக் கூறி அவரைப் புறக்கணித்துவிட்டு மனம் போல வாழலாம். இயேசுவானவரை மரியாதைக் குறைவாக நடத்துபவர்களைக் குறித்து நான் அதிக துக்கப்படுகிறேன். நீங்கள் அவர்களில் ஒருவராக இருக்கக் கூடாதென நான் ஜெபிக்கிறேன். இப்படிப்பட்டவர்களை T. S. எலியட், 'பொருளற்ற வெற்று மனிதர்கள்' என அழைக்கிறார் - உடனடியாக அனுபவிக்கக்கூடிய சிற்றின்பங்களுக்காக மட்டும் வாழ்பவர்கள் இவர்கள். ஆம், இவர்களில் ஒருவராக நீங்கள் இருக்கக்கூடாதென நான் ஜெபிக்கிறேன், எனெனில் இவர்கள் நரகத்தின் படுகழியில் தள்ளப்படுவார்கள்.

> கெத்செமெனேயை நான் மறப்பேனோ;
> உமது கடும் வேதனையை மறப்பேனோ;
> என் மீதான உமதன்பை நான் மறப்பேனோ,
> கல்வாரிக்கு என்னை அழைத்துச் செல்லும்.
> (“கல்வாரிக்கு என்னை நடத்திடும்” ஜென்னி E. ஹஸ்ஸி, 1874-1958).

நீங்கள் இயேசுவானவரிடத்தில் வந்து, முழு மனதோடு அவரை விசுவாசித்து, உண்மையான கிறிஸ்தவ மன மாற்றத்தின் மூலம் மரணத்துக்கு நீங்கலாகும்படி உங்களுக்காக நான் ஜெபிக்கிறேன்.

நாம் அனைவரும் எழுந்து நிற்போம். உங்களது பாவத்திலிருந்து இயேசுவானவரால் கழுவப்பட வேண்டுமென நீங்கள் விரும்பினால் இந்த மேடைக்குப் பின் இப்போதே வாருங்கள். நன்றாக உறையாடும்படியாய் பண்டிதர் கேகன் ஒரு அமைதியான இடத்திற்கு உங்களை அழைத்துச் செல்லுவார். திரு லீ அவர்களே, ஒப்புக்கொடுத்து முன்னே வந்தவர்களுக்காக ஜெபம் பண்ண வாருங்கள்.

பிரசங்க குறிப்பு

# கிறிஸ்துவின் அடக்கத்தின் முரண்பாடு

**(பிரசங்க எண் 10 ஏசாயா 53ன் மீதானது)**

அறிவர் R. L. ஹைமர்ஸ்ஜுனியர்அவர்களால்

"துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார்; அவர் கொடுமை செய்யவில்லை, அவரது வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை" (ஏசாயா 53:9).

(I கொரிந்தியர் 15:3-4; யோவான் 17:3; ரோமர் 6:4)

I. முதலாவதாக, அவரது அடக்கத்தின் முரண்படு மெய்மை, ஏசாயா 53:9a; யோவான் 19:31; மத்தேயு 27:60; ரோமர் 7:24.

II. இரண்டாவதாக, முரண்பாடு விளக்கப்படுகிறது, ஏசாயா 53:9b; I பேதுரு 2:22; I திமோத்தேயு 2:5; யோவான் 15:13.

# கிருபாதார பலி!

**(செய்தி எண்: 11ஏசாயா 53)**

# PROPITIATION!

**(SERMON NUMBER 11 ON ISAIAH 53)**

டாக்டர் ஆர். எல். ஹைமெர்ஸ் ஜூனியர் அவர்களால்
by Dr. R. L. Hymers, Jr.

ஏப்ரல்13, 2013 அன்று சனிக்கிழமை மாலை வேளையில் லாஸ் ஏஞ்சலஸில் உள்ள பாப்திஸ்து கூடாரத்தில் பிரசங்கிக்கப்பட்ட செய்தி
A sermon preached at the Baptist Tabernacle of Los Angeles
Saturday Evening, April 13, 2013

> "கர்த்தரோஅவரைநொறுக்கச்சித்தமாகி,அவரைப்பாடுகளுக்குட்படுத்தினார்;
> அவருடையஆத்துமாதன்னைக்குற்றநிவாரணபலியாகஒப்புக்கொடுக்கும்போது" (ஏசாயா 53:10).

நான்இன்றுஇரவுதேவனைப்பற்றிச்சொல்லப்போகும்செய்தியானதுஉங்களில்சிலருக்குபிடிக்காமல்இருக்கலாம்இதைகேட்பவர்வெறுக்கவும்செய்யலாம். இன்றுமக்கள்தேவனைப்பற்றிஅப்படிப்பட்டதவறானயோசனைகள்கொண்டிருக்கிறார்கள்.
யாராவதுவேதத்தின்தேவனைக்குறித்துப்பேசினால்அதுஅவர்களுக்குஎதிர்மறையானவிளைவைஏற்படுத்துகிறது,
சிறப்பாககுறிப்பிட்டசிலவகையானபிரசங்கியார்களுக்குமட்டும்.

சிலஆண்டுகளுக்குமுன்பாகஒருநூறுஇளம்வாலிபர்களுக்குசுவிசேஷசெய்திகொடுக்கும்படிஒருமூத்தபாஸ்டர்என்னிடம்சொன்னார்.
இதற்குமுன்பாகநான்அங்கேஅநேகதடவைகள்பேசியிருக்கிறேன்,
அதனால்அந்தசபைக்குஎந்தசெய்திதேவைஎன்றுஎனக்குத்தெரியும்எனநான்நினைத்தேன்.
ஆனால்இந்ததடவைஇரண்டுஇளம்பாஸ்டர்கள்பொறுப்பாளர்களாகஇருந்தார்கள்.
நான்தேவனுடையநியாயத்தீர்ப்பைஉறுதிபடுத்தும்ஒருஇரட்சிப்பின்செய்தியைபிரச

ங்கித்தேன், முடிவில்கிறிஸ்துவின்நற்செய்தியைதெளிவாகஅவர்களுக்குமுன்பாகவைத்தேன். அழைப்பிற்குபிறகுஇருபத்திஏழுவாலிபர்கள்அதைஏற்றுக்கொண்டுமுன்வந்தார்கள். இதுமுதல்முறையாகச்செய்யப்பட்டஒருவேலையாகும், அந்தகல்லூரியின்நான்கில்ஒருபங்குமாணவர்கள்ஆஜராகிஇருந்தார்கள்.

அந்தபொறுப்பானஇருஇளம்பாஸ்டர்களும்அப்படிப்பட்டஅதிகமானபேர்ஏற்றுக்கொண்டதைக்குறித்துமகிழ்ச்சிஅடைந்திருப்பார்கள்என்றுஒருவர்நினைக்கலாம். ஆனால்அவர்கள்இருவரும்பிசங்கம்முடிந்தவுடன்கொடூரமானக்கோபத்தோடுகாணப்பட்டார்கள். அவர்கள்அந்தசபையின்பொதுவானவழக்கத்தின்படி, எனக்குநன்றிஅறிவிப்பைஎழுதிஅனுப்பவில்லை, மற்றும்எனக்குவெகுமானமாகநன்கொடையும்கொடுக்கவில்லை. அவர்கள்அவ்வளவாககுளிர்;ந்துபோனதைப்பற்றிநான்மிகவும்ஆச்சரியப்பட்டேன். நான்அவர்களுக்குமிகவும்எதிரிடையானவன்என்றும், தேவன்பாவத்தைநியாயந்தீர்ப்பார்என்பதைப்பற்றிஅந்தவாலிபர்களுக்குஎச்சரிப்பைக்கொடுக்காமல்அவர்களுக்குஅழைப்புகொடுத்திருக்கவேண்டும்என்றும்அவர்கள்நினைத்தார்கள்என்றுநான்பின்னர்அறிந்துகொண்டேன். அதுமுதற்கொண்டுஅநேகநவீனபாஸ்டர்கள்தங்கள்கருத்துக்களைஅவ்விதமாகபகிர்ந்துகொள்ளுகிறார்கள்என்றுகண்டுகொண்டேன். அதாவது "சுவிசேஷத்தைமட்டும்கொடு. தேவனுடையஅன்பைமட்டும்பேசு. மக்கள்கிளர்ச்சியடைந்துஅசௌகரியம்அடையும்வகையில்அவர்கள்உணரும்படிசெய்யாதே." இதுதான்அவர்களதுபார்வை. இன்றுஇந்தவிதமாகபிரசங்கிமார்கள்உணருவதைநான்அடிக்கடிகண்டேன். ஆனால்அந்தவிதமானஎண்ணத்தில்பயங்கரமானகெடுதிஇருப்பதாகவும், அப்படிப்பட்டசுவிசேஷபிரசங்கத்தில்தவறுஇருப்பதாகவும்குறைஇருப்பதாகவும்நான்உணர்த்தப்பட்டேன்.

டாக்டர் A.W. டோசர் (Tozer) சொன்னார், "ஒருமனிதன்முதலாவதுதேனுடையபயத்தைஅறிந்துகொள்ளாவிட்டால்அவன்தேவனுடையமெய்யானகிருபையைஅறிந்துகொள்ளவேமுடியாது" (*The Root of Righteousness*, Christian Publications, 1955, p. 38). அவர்மிகச்சரியாகஎழுதிஇருக்கிறார்என்றுநான்விசுவாசிக்கிறேன். "முதலாவதுதேனுடையபயத்தைஅறிந்துகொள்ளாவிட்டால்எந்தஒருமனிதனும்தேவனுடையமெய்யானகிருபையைஅறிந்துகொள்ளவேமுடியாது." டாக்டர்A.W.டோசர்

(Tozer) சொன்னதையேடாக்டர்மார்டீன்லாய்டு-ஜோன்ஸ்அவர்கள்அப்படியேசரியாகவிசுவாசிக்கிறார். லேன் H. மூரீஅவர்கள்சொல்கிறார், "டாக்டர்லாய்டு-ஜோன்ஸ்அவர்கள்தேவனுக்குமுன்பாகமனிதனுடையகுற்றத்தின்மெய்யானஅபாயத்தைப்பற்றிபிரசிங்கிக்கும்பொழுதுதேவகோபம்நிச்சயமாகஉண்டு... பாவத்தின்தண்டனையே நரகம்... வேதாகமப்போதனையில்எச்சரிப்பானதுமிகவும்அத்தியாவசியமானஒருபகுதியாகும். நரகம்என்பதுஒருதியரிஅல்ல..." (Rev. Iain H. Murray, ***The Life of Martyn Lloyd-Jones***, The Banner of Truth Trust, 2013, p. 317).

மறுபடியுமாக, டாக்டர்லாய்டு-ஜோன்ஸ்அவர்கள்சொன்னார், "தேவனைப்பற்றிபொய்யாகசிந்திப்பதுதான்ஜென்மசுபாவமுள்ளமனிதனின்எல்லாப்பாவங்களிலும்மகாமோசமானபாவகுற்றமாகும்" (ibid., p. 316). மறுபடியுமாக, பிரபலமானபாப்டிஸ்ட்சுவிசேஷகர், டாக்டர்ஜான் R.ரைஸ்அவர்கள்அதிஸ்டவசமாகடாக்டர்A.W.டோசர்மற்றும்டாக்டர்மார்டீன்லாய்டு-ஜோன்ஸ்அவர்கள்சொன்னஅதேகாரியத்தைகுறிப்பிட்டுள்ளதுஎனக்குமிகவும்உற்சாகமூட்டும்வகையில்இருப்பதைக்கண்டேன். டாக்டர்ரைஸ் சொல்கிறார்,

> வேதாகமத்தின்தேவன்ஒருபயங்கரமானதேவன்,
> அபாயகரமானதேவன்,
> ஒருவைராக்கியமிக்கபழிக்குப்பழிவாங்கும்தேவன்,
> அதேசமயத்தில்இரக்கத்தின்தேவன்(John R. Rice, D.D., ***The Great and Terrible God***, Sword of the Lord Publishers, 1977, p. 12).

டாக்டர்ரைஸ்சொன்னார்,

> இந்ததற்காலநவீனபிரசங்கிகள்பிரமாணத்தைவிட்டுவிட்டு
> கிருபையையும்,
> மனந்திரும்புதல்இல்லாமல்விசுவாசத்தையும்,
> தேவனுடையகோபமில்லாமல்தேவஇரக்கத்தையும்,
> நரகத்தைஇல்லாமல்பரலோகத்தையும்பிரசங்கிக்கிறார்கள்
> ... இதுதேவனுடையசத்திய வழியல்ல.
> இதுதேவனுக்குபதிலாகதான்நிற்பதாகும்.
> இதுதேவனுடையசெய்தியைகனவீனமாககொடுக்கும்ஒரு

> காரியமாகும். தேவன்ஒருபயங்கரமானதேவன், அபாயகரமானதேவன், ஒருவைராக்கியமிக்கபழிக்குப்பழிவாங்கும்தேவன், பாவத்திற்குஎதிராகபட்சிக்கிறஅக்கினியாகஇருக்கிறதேவன், பயப்படத்தக்கஒருதேவன், பாவிகளைஅவருக்குமுன்பாகநடுங்கவைக்கும்ஒருதேவன்( ibid., pp. 13, 14).

ஆமென்! டாக்டர்ஜான்ஆர். ரைஸ் (John R. Rice) அவர்கள், டாக்டர் A.W. டோசர் (Tozer) மற்றும்டாக்டர்மார்டீன்லாய்டு-ஜோன்ஸ்அவர்களின்கருத்துக்களைஇந்தகுறிப்பிட்டகாரியத்தில்முழுமையாகஒத்து வருவதைஅவர்களின்செய்திகளைவருஷக்கணக்காகபடித்திலிருந்துநான்அறிந்து கொண்டேன். தேவன், “பாவத்திற்குஎதிராகபட்சிக்கிறஅக்கினியாகஇருக்கிறதேவன்.”

வேதாகமம்சொல்லுகிறவிதமாக, தேவனைநாம்பார்க்கும்போது, நமதுபாடமாகியஏசாயா 53:10ல்நமக்குஎந்தபிரச்சனையும்வருவதற்குஇடமில்லை. இந்தபாடமானதுபிதாவாகியதேவனையும்மற்றும்நமதுஇரட்சிப்பிற்காகதேவன்கர்த்தராகியஇயேசுவுக்குசெய்ததையும்மையமாகக்கொண்டதாகும்.

> “கர்த்தரோஅவரைநொறுக்கச்சித்தமாகிஅவரைப்பாடுகளுக்குட்படுத்தினார்; அவருடையஆத்துமாதன்னைக்குற்றநிவாரணபலியாகஒப்புகொடுக்கும்போது” (ஏசாயா 53:10).

> “தேவன்... கிருபாதாரபலியாகஅவரையேஏற்படுத்தினார்” (ரோமர் 3:25).

டாக்டர்W.A.கிரிஸ்வெல்அவர்கள்சொல்லும்பொழுது “கிருபாதாரபலியானதுபாவத்திற்குவிரோதமாகஇருந்ததேவனுடையநீதியின்எதிர்பார்த்தலைகிறிஸ்துநிறைவேற்றினதையும்மற்றும்தேவனுடையநீதியின்நிமித்தமாக மனிதனுடையகுற்றத்தைநிவர்த்திசெய்துதேவனைதிருப்திசெய்தசிலுவையின்கிரியையையும்குறிப்பதாகும்” (W. A. Criswell, Ph.D., ***The Criswell Study Bible***, Thomas Nelson Publishers, 1979, p. 1327, note on Romans 3:25).

> "தேவன்... கிருபாதாரபலியாகஅவரையேஏற்படுத்தினார்" (ரோமர் 3:25).

***திரீபார்மேஷன்ஸ்டடிபைபுளில்*** (***The Reformation Study Bible***) அந்தவசனம்சொல்லுகிறது, "கிறிஸ்துகிருபாதாரபலியாகமரித்ததானதுபாவிக்குவிரோதமாகஇருந்ததெய்வீகநியாயத்தீர்ப்பைதிருப்திசெய்யவும், மன்னிப்பையும்நீதிமானாக்குதலையும்கொண்டுவருவதற்காகவேஆகும். ஆனால்அந்த [தேவகுமாரனின்] கிருபாதாரபலியினால்பிதாவாகியதேவன்நம்மைநேசிக்கும்படிசெய்யவில்லைஎன்றுபவுல்கவனமாகக்குறிப்பிடுகிறார். அதற்குஎதிர்மறையானதுதான்உண்மை - அதாவதுதேவனுடைய*அன்பு*தமதுகுமாரனைப்பலியிடும்படியாகச்செய்தது" (***The Reformation Study Bible***, Ligonier Ministries, 2005, p. 1618, note on Romans 3:25).

> "தம்முடையசொந்தகுமாரனென்றும்பாராமல்நம்மெல்லாருக்காகவும்*அவரைஒப்புகொடுத்தார்*" (ரோமர் 8:32).

நமதுபாடம்சொல்லுவதுபோல,

> "கர்த்தரோஅவரைநொறுக்கச்சித்தமாகிஅவரைப்பாடுகளுக்குட்படுத்தினார்;
> அவருடையஆத்துமாதன்னைக்குற்றநிவாரணபலியாகஒப்புக் கொடுக்கும்போது" (ஏசாயா 53:10).

இந்தபாடத்தில்கிறிஸ்துவின்வேதனைமிகுந்தபாடுகளுக்குமெய்யானகாரணகர்த்தாதேவன்என்றுநாம்பார்க்கிறோம். "தேவன்நிர்ணயித்திருந்த [முன்னதாகஏற்படுத்தப்பட்ட] ஆலோசனையின்படியேயும், அவருடையமுன்னறிவின்படியேயும்" (அப்போஸ்தலர் 2:23) கிறிஸ்துபாடுபட்டுமரித்தார். மகத்துவமானமற்றும்பயங்கரமானவேதத்தின்தேவனேகிறிஸ்துவின்பாடுகளுக்கும்மரணத்திற்கும்மெய்யானகாரணர். "தேவன்தமதுஒரேபேரானகுமாரனை<u>கொடுத்தார்</u>"என்றுயோவான் 3:16 சொல்லுகிறது (யோவான் 3:16). மேலும், ரோமர் 8:32ல் "தம்முடைய...

சொந்தகுமாரனென்றும்பாராமல்நம்மெல்லாருக்காகவும்அவரை<u>ஒப்புக்கொடுத்தார்</u>" என்றுசொல்லப்படுகிறது (ரோமர் 8:32). பாவத்திற்குவிரோதமாகஇருந்ததேவனுடையக்கோபம்தம்முடையகுமாரனாகியஇயேசுவின்மேல்விழுந்தபடியினால்அதுகிருபாதாரபலியானது. நமதுபாடம்சொல்லுகிறதுபோல,

> "கர்த்தரோஅவரைநொறுக்கச்சித்தமாகிஅவரைப்பாடுகளுக்
> குட்படுத்தினார்;
> அவருடையஆத்துமாதன்னைக்குற்றநிவாரணபலியாகஒப்
> புக் கொடுக்கும்போது" (ஏசாயா 53:10).

இங்கேபிதாவாகியதேவன்தமதுகுமாரனைஅனுப்பிபாடுகளுக்குஉட்படுத்திசிலுவையிலறையஒப்புகொடுத்ததைக்காட்டும்படிக்குஏசாயாநம்மைத் "திரைக்குபின்னால்" கொண்டுசெல்லுகிறார்அதனால்தேவனைசாந்தப்படுத்தமுடிந்தது, மற்றும்அவருடையக்கோபம்பாவியின்மீதுவிழுவதற்குபதிலாகஇயேசுவின்மீதுவிழுந்தது. நமதுபாடத்தில்நாம்பார்ப்பது (1) தேவன்அவரைநொறுக்கினார்; (2) பாடுகளுக்குஉட்படுத்தினார்; (3) அவருடையஆத்துமாதன்னைப்பாவநிவாரணபலியாகஒப்புகொடுக்கும்படிசெய்தார்.

### I. முதலாவதாக, தேவன்இயேசுவைநொறுக்கினார்.

> "கர்த்தரோஅவரை*நொறுக்கச்*சித்தமானார்"
> (ஏசாயா 53:10).

"நொறுக்கினார்" என்றவார்த்தை "நசுக்கினார்" என்றுமொழிபெயர்க்கப்பட்டது. "கர்த்தரோஅவரை*நசுக்கச்*சித்தமானார்". டாக்டர்எட்வர்டுஜே. யெங்சொன்னார், "[கிறிஸ்துவின்] கபடற்றநிலைமையில், தேவன்அவரைநொறுக்கி [மற்றும்நசுக்கி] சித்தம்கொண்டார். அவரதுமரணம்பொல்லாதவர்களின்கைகளினால்அல்லஆனால்கர்த்தருடையகரத்தினால்நிகழ்ந்தது. அவருடையமரணத்திற்குப்பொறுப்புஅவரைகொலைசெய்தமக்கள்அல்ல, ஆனால்அவர்கள்அந்தசூழ்நிலையின்கட்டுப்பாட்டில்இல்லை. கர்த்தர்அனுமதித்ததைமட்டுமேஅவர்கள்செய்துகொண்டிருந்தார்கள்"(Edward J.

Young, ***The Book of Isaiah***, William B. Eerdmans Publishing Company, 1972, volume 3, pp. 353-354).

நான்முன்பேசொன்னதுபோல, கிறிஸ்துவைப்பற்றினஇந்தகாரியமானதுரோமர் 3:25ல்தெளிவாகஉள்ளது,

> “தேவன்... *கிருபாதாரபலியாக*அவரையேஏற்படுத்தினார்” (ரோமர் 3:25).

மற்றும்யோவான் 3:16ல், அது,

> “ஒரேபேரானகுமாரனை…
> *தந்தருளி*இவ்வளவாய்உலகத்தில்அன்புகூர்ந்தார்”
> யோவான் 3:16).

பாவத்திற்குவிரோதமாகஇருந்தஅவருடையகோபத்தைமாற்றி, பாவியானமனிதனுக்குஇரட்சிப்பைச்சாத்தியமாக்கினார்.

> “கர்த்தரோஅவரைநொறுக்கச் [நசுக்க] சித்தமானார்” (ஏசாயா 53:10).

கெத்சமனேதோட்டத்தில்ஆரம்பித்து, பிதாவாகியதேவன்தமதுகுமாரனைநொறுக்கினார்மற்றும்நசுக்கினார். மத்தேயுமூலமாகநமக்குச்சொல்லப்படுகிறதுபோலகெத்சமனேதோட்டத்தில், தேவன்சொன்னார், *“மேய்ப்பனைவெட்டுவேன்”* (மத்தேயு 26:31). மாற்குசுவிசேஷத்திலும்இதுசொல்லப்பட்டிருக்கிறது “மேய்ப்பனைவெட்டுவேன்” (மாற்கு 14:27). இவ்வாறாகதேவன்இயேசுவை, பாவத்திற்குபிரதிபலனாகஇருளிலேகெத்சமனேதோட்டத்தில்கொடூரமாகநொறுக்கினார், மற்றும்நசுக்கஆரம்பித்தார். ஸ்பர்ஜன்இதைப்பற்றிச்சொல்லும்பொழுது,

> இப்பொழுதுநமதுகர்த்தர்*பிதாவின்கரத்திலிருந்து*ஒருகுறிப்பிட்டபாத்திரத்தைஎடுத்தார். யூதரிடமிருந்தல்ல, துரோகியாகிய யூதாசிடமிருந்தல்ல, தூங்கிக்கொண்டிருந்தசீஷரிடமிருந்தல்ல, பிசாசிடமிருந்துசோதனைவரவில்லைஇப்பொழுது [கெத்சமனேயில்],
